







தலைநிமிரும் தமிழகம்

நூற்றாண்டின் திசையில்
நூறு நாட்கள்





தமிழரசு


செய்தித்துறையின் வெளியீடு



மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. **ராம் நாத் கோவிந்த்** அவர்களை புதுடில்லியிலுள்ள குடியரசுத் தலைவர் மாளிகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் மரியாதை நிமித்தம் சந்தித்தார் (19.07.2021).




மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் புதுடில்லியிலுள்ள பிரதமர் இல்லத்தில் சந்தித்து, அவருக்குப் பொன்னாடை அணிவித்தார் (17.06.2021).



முத்தமிழறிஞர்

டாக்டர் **கலைஞர்**



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்



தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

நுழைவாயில்

ஏழை, எளியோரின் பாதுகாவலர், செயல்திறன் மிக்க தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தன்னிகரற்ற தலைமையின் கீழ், 07.05.2021 அன்று பொறுப்பேற்ற 100 நாட்களில் தமிழ்நாடு அரசு செய்திட்ட சாதனைக் குவியல்களை, செய்தித்துறையின் வெளியீடு, தமிழரசு இதழ் வழியே **"நூற்றாண்டின் திசையில் நூறு நாட்கள், தலைநிமிரும் தமிழகம்"** என்ற மலர்த் தொகுப்பாக வழங்கியுள்ளது.

தமிழ்நாடு அரசின் செய்தித்துறையின் தமிழரசு இதழைப் பல்லாண்டுகளாகப் படித்துவரும் வாசகர்களுக்கு இது ஒரு வாசம்மிகு வண்ணமலர் ஆகும்.

ஓய்வறியா உழைப்பாளி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் எண்ணத்தில் மலர்ந்த மக்கள் நலத் திட்டங்களை ஒவ்வொரு துறையும் எவ்விதத் தொய்வுமின்றி முனைப்புடன் செயல்படுத்தி வருகின்றன.

"அறன்இழுக்காது அல்லவை நீக்கி மறன்இழுக்கா
மானம் உடையது அரசு"

என்ற திருவள்ளுவரின் வாக்கிற்கிணங்க, நாட்டை ஆள்வதற்கு முழுத்தகுதியுடன், அறம் சார்ந்து, நாட்டில் தீயச் செயல்களை அடியோடு அழித்து, மக்களிடம் அறம் காத்து, உலக அளவிலும், தன் மக்களிடமும் குற்றம், குறை கூற முடியாதவராக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அரசு, திடமான செயல்பாட்டினை மேற்கொண்டு இந்தச் சாதனை சரித்திரத்தை நிகழ்த்திக் காட்டியிருக்கிறது.

நூறு நாட்களில் பலநூறு திட்டங்களை வகுத்து, செயல்படுத்திய இந்தச் சாதனை முத்துக்களைக் கோர்த்து வெற்றி மாலையாகச் சூட்டியுள்ளோம்.

இம்மலரைப் படித்துப் பயன்பெற வேண்டுகிறேன்.

வாழ்த்துக்களோடு

மு.பெ. சாமிநாதன்
செய்தித் துறை அமைச்சர்

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தித்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2052
பிலவ வருடம் : ஆடி – ஆவணி
ஆகஸ்ட் 2021
"நூற்றாண்டின் திசையில் நூறு நாட்கள்"
சிறப்பு வெளியீடு

ஆசிரியர் - வெளியிடுபவர்
முனைவர் **வீ.ப. ஜெயசீலன், இ.ஆ.ப.,**
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
த. ஹரிராம்
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
அ. மகேஸ்வரி
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
சு. தீபா
எஸ். உதயா கதிரவன்
ச. மஞ்சுளா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
மு. மணிமேகலை
அ. மதன்
கு. சுபாஷ்
போ. முத்துக்குமார்

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

வடிவமைப்பாளர்
கோ. முரளி கிருஷ்ணன்

அட்டைப்பட ஓவியம்
மணியம் செல்வன்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை–600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : tamilarasujournal1@gmail.com
இணையதளம் : www.tndipr.gov.in



கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி - குறள் : 390

கலைஞர் உரை :

நல்வாழ்வுக்கு வேண்டியவற்றை வழங்கியும், நிலையுணர்ந்து கருணை காட்டியும், நடுநிலை தவறாமல் ஆட்சி நடத்தியும், மக்களைப் பேணிக் காப்பதே ஓர் அரசுக்குப் புகழொளி சேர்ப்பதாகும்.

துறைதோறும்... துறைதோறும்...

1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 67-73

2. மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர்
திரு. **துரைமுருகன்** அவர்கள் 74-75

3. மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர்
திரு. **கே.என்.நேரு** அவர்கள் 76-82

4. மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்
திரு. **இ.பெரியசாமி** அவர்கள் 83-84

5. மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர்
திரு. **க.பொன்முடி** அவர்கள் 85-86

6. மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்
திரு. **எ.வ.வேலு** அவர்கள் 87-89

7. மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர்
திரு. **எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்** அவர்கள் 90-94

8. மாண்புமிகு வருவாய் மற்றும்
பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்
திரு. **கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன்** அவர்கள் 95-98

9. மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்
திரு. **தங்கம் தென்னரசு** அவர்கள் 99-103

10. மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்
திரு. **எஸ்.இரகுபதி** அவர்கள் 104-105

11. மாண்புமிகு வீட்டுவசதி மற்றும்
நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்
திரு. **சு.முத்துசாமி** அவர்கள் 106-107

12. மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர்
திரு. கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள்.....108-112

13. மாண்புமிகு ஊரகத் தொழிற்துறை அமைச்சர்
திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள்.....113-116

14. மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர்
திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள்.....117-120

15. மாண்புமிகு சமூக நலன் -
மகளிர் உரிமைத்துறை அமைச்சர்
திருமதி பி.கீதா ஜீவன் அவர்கள்.....121-123

16. மாண்புமிகு மீன்வளம் - மீனவர் நலத்துறை மற்றும்
கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்
திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்
அவர்கள்.....124-128

17. மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்
திரு. ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன்
அவர்கள்.....129-132

18. மாண்புமிகு வனத்துறை அமைச்சர்
திரு. கா.ராமச்சந்திரன் அவர்கள்.....133-134

19. மாண்புமிகு உணவு மற்றும்
உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர்
திரு. அர.சக்கரபாணி அவர்கள்.....135

20. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும்
ஆயத்தீர்வைத்துறை அமைச்சர்
திரு. வி.செந்தில் பாலாஜி அவர்கள்.....136-138

21. மாண்புமிகு கைத்தறி மற்றும்
துணிநூல்துறை அமைச்சர்
திரு. ஆர்.காந்தி அவர்கள்.....139-140

22. மாண்புமிகு மருத்துவம் மற்றும்
மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள்.....141-144

23. மாண்புமிகு வணிகவரி மற்றும்
பதிவுத்துறை அமைச்சர்
திரு. பி.மூர்த்தி அவர்கள்.....145-146

24. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர்
நலத்துறை அமைச்சர்
திரு. எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள்.....147-148

25. மாண்புமிகு இந்து சமயம் மற்றும்
அறநிலையத்துறை அமைச்சர்
திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள்.....149-151

26. மாண்புமிகு நிதி மற்றும்
மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர்
முனைவர் பழனிவேல் தியாகராஜன்
அவர்கள்.....152-157

27. மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்
திரு. சா.மு.நாசர் அவர்கள்.....158-159

28. மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்
திரு. செஞ்சி கே.எஸ். மஸ்தான்
அவர்கள்.....160-161

29. மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்
திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி
அவர்கள்.....162-164

30. மாண்புமிகு சுற்றுச் சூழல் - காலநிலை
மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன்,
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
திரு. சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள்.....165-166

31. மாண்புமிகு தொழிலாளர் நலன் -
திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர்
திரு. சி.வி.கணேசன் அவர்கள்.....167-170

32. மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர்
திரு. த.மனோ தங்கராஜ் அவர்கள்.....171-173

33. மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்
டாக்டர் மா.மதிவேந்தன் அவர்கள்.....174-175

34. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்
திருமதி என்.கயல்விழி செல்வராஜ்
அவர்கள்.....176-177

தலைநிமிரும் தமிழகம்



100 நூற்றாண்டின் திசையில் நூறு நாட்கள்

நாள்தோறும் அறிவிப்புகள்! தினந்தோறும் செயல்பாடுகள்!!



அரிசி குடும்ப அட்டைதாரர்கள்
அனைவருக்கும்
ரூ.4,000 கொரோனா நிவாரண நிதியுதவி

ஆவின் பால் லிட்டருக்கு
ரூ.3 குறைப்பு





மகளிருக்கு
அரசு நகரப் பேருந்துகளில்
இலவசப் பயணம்

மக்களின் மனுக்கள் மீது
தீர்வு காண
“உங்கள் தொகுதியில் முதலமைச்சர்”
துறை





தனியார் மருத்துவமனைகளில்
கொரோனா சிகிச்சைக்கான செலவினத்தை
முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தில்
அரசே ஏற்பு

கொரோனா தொற்றுப் பாதிப்புள்ள
மாவட்டங்களில் சிறப்புக் கவனம் செலுத்த
மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்
நியமனம்






ஊரடங்கு காலத்தில் பொதுமக்களுக்கு
அத்தியாவசியப் பொருட்கள்
அவரவர் பகுதிகளிலேயே
வாகனங்கள் மூலம் விநியோகம்


கொரோனா கட்டளை
மையத்திற்கு
6 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்
நியமனம்





தொழில் நிறுவனங்களில் பணிபுரியும்
தொழிலாளர்களுக்கு அவர்கள்
பணிபுரியும் இடத்திலேயே
கொரோனா தடுப்பூசி

ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சிகளுக்கு
சாலை வரி கட்டணங்கள் செலுத்தக்
கால அவகாசம்





தொழில்துறை வாயிலாக
ஒரே தவணையில்
மூலதன மானியம்

தொழில் நிறுவன பணியாளர்கள்
தொழில் வரியைச் செலுத்தக்
கால அவகாசம்





முன்களப் பணியாளர்களான
மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு
ஊக்கத்தொகை

தூய்மைப்பணியாளர்கள்,
ஆய்வுக்கூடம் மற்றும் அவசர மருத்துவ
ஊர்திப் பணியாளர்களுக்கு
ஊக்கத்தொகை





18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும்
கொரோனா தடுப்பூசி




கொரோனா தடுப்புப் பணிகளுக்காக
“அனைத்துச் சட்டமன்றக் கட்சி
உறுப்பினர்களடங்கிய
ஆலோசனைக் குழு”



ஸ்டெர்லைட் ஆலை போராட்டத்திற்கு
எதிரான வழக்குகள்
அனைத்தும் ரத்து

பத்திரிகையாளர் மற்றும்
ஊடகத் துறையினர்
"முன்களப் பணியாளர்"களாக
அறிவிப்பு





அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகை மற்றும்
ஊடகத்துறையினருக்கான
சிறப்பு ஊக்கத்தொகை
ரூ.5,000 ஆக உயர்வு.

கொரோனாவால் பெற்றோரை இழந்த
குழந்தைகளுக்கு ரூ.5 இலட்சம்
வைப்பு நிதி, கல்வி மற்றும்
விடுதிக் கட்டணங்கள் அரசே ஏற்பு





கொரோனாவால் தந்தை அல்லது
தாயை இழந்த குழந்தைகளோடு இருக்கும்
தந்தை அல்லது தாய்க்கு ரூ.3 இலட்சம்
நிவாரணத்தொகை

உறவினர் அல்லது பாதுகாவலரிடம்
வளரும் குழந்தைகளுக்கு,
18 வயது நிறைவடையும் வரை
ரூ.3,000 பராமரிப்பு உதவித்தொகை





காவிரி டெல்டா பாசனத்திற்காக
மேட்டூர் அணையிலிருந்து
தண்ணீர் திறப்பு

வேளாண்மைக்கெனத் தனியாக
ஒரு நிதிநிலை அறிக்கை





திருக்கோயில்களில் மாதச் சம்பளமின்றி
பணியாற்றி வரும் பணியாளர்களுக்கு
கொரோனா நிவாரண நிதியுதவி
ரூ.4 ஆயிரம் மற்றும் 10 கிலோ அரிசியுடன்
15 வகையான மளிகைப் பொருட்கள்

கொரோனா தொற்றால்
மரணமடைந்த அங்கீகரிக்கப்பட்ட
ஊடகத்துறையினர்களுக்கான
இழப்பீட்டுத் தொகை
ரூ.10 இலட்சமாக உயர்வு





“டவ்தே” புயலின்போது
காணாமல் போன
21 மீனவர் குடும்பங்களுக்கு
ரூ.20 இலட்சம் நிவாரணத்தொகை

கொரோனா பாதிப்பால்
2020–2021ஆம் கல்வியாண்டின்
பன்னிரெண்டாம் வகுப்பு
மாணவர்களுக்கான
பொதுத் தேர்வுகள் ரத்து






சென்னை, கிங் இன்ஸ்டிடியூட் வளாகத்தில்,
ரூ.250 கோடி செலவில்
500 படுக்கை வசதிகளுடன்
பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை

திருவாரூர் மாவட்டத்தில்
ரூ.30 கோடி மதிப்பீட்டில்
நெல் சேமிப்புக் கிடங்குகள்
மற்றும் உலர்களங்கள்





இரண்டாம் நிலைக் காவலர் முதல்
ஆய்வாளர் வரையிலான
1,17,184 காவல் துறையினருக்கு
ரூ.5 ஆயிரம் ஊக்கத்தொகை


கருப்புப் பூஞ்சை நோய் சிகிச்சைக்காக
முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து
ரூ.25 கோடி ஒதுக்கீடு





கொரோனா கால பிறப்பு,
இறப்பு காலந்தாழ்வு
பதிவு விண்ணப்பங்களுக்கான
கட்டணத்தை அரசே ஏற்பு

திருநங்கைகள் மற்றும்
மாற்றுத்திறனாளிகளுக்கு
அரசுப் பேருந்துகளில்
இலவசப் பயணச் சலுகை





மதுரையில் ரூ.70 கோடியில் நவீன வசதிகளுடன் கூடிய "கலைஞர் நினைவு நூலகம்"

ஞானபீடம், சாகித்ய அகாடமி மற்றும் மாநில, உலகளாவிய அமைப்புகளின் இலக்கிய விருதுகள் பெற்றவர்களுக்கு அரசு வீடு





நலிந்த கலைஞர்களுக்கான மாதாந்திர நிதியுதவி ரூ.3,000 ஆக உயர்வு

இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில்களின் நில உரிமை ஆவணங்கள் இணையதளத்தில் வெளியீடு





தமிழ்நாட்டில் நீட் தேர்வின் தாக்கம் குறித்து அறிக்கை சமர்ப்பிக்க ஓய்வு பெற்ற நீதியரசர் தலைமையில் உயர்நிலைக் குழு அமைப்பு

மின்துறை சார்ந்த குறைகளுக்குத் தீர்வுகாண "மின்னகம்" என்ற புதிய மின் நுகர்வோர் சேவை மையம்





டெல்டா மாவட்ட விவசாயிகளுக்காக “குறுவை நெல் சாகுபடி தொகுப்புத் திட்டம்”

பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் மேம்படுத்தப்படும்





முகாமிற்கு வெளியே வாழும் இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கு ரூ.4,000 கொரோனா நிவாரண நிதியுதவி

ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் வாள் வீச்சு வீராங்கனை செல்வி பவானி தேவிக்கு ரூ.5 இலட்சம் நிதியுதவி





அரசு சேவைகளை உடனுக்குடன் பெற இணையவழிச் சேவை

சென்னையிலுள்ள செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் புத்துயிரூட்டப்படும்






வளர்ச்சி இலக்கிற்கான
பாதையை வகுத்து வழங்கிட,
முதலமைச்சருக்கான பொருளாதார
ஆலோசனைக் குழு

அண்ணா நூற்றாண்டு நூலகம்
புதுப்பொலிவுடன் புனரமைப்பு






சென்னை மாநகரை
நவீன சர்வதேசத் தரத்திற்கு
இணையாக அமைக்க
"சிங்காரச் சென்னை 2.0 திட்டம்"


சுற்றுச்சூழல், நகரத் திட்டமிடல்,
பேரிடர் மேலாண்மை
வல்லுநர்களை உள்ளடக்கிய
"சென்னைப் பெருநகர வெள்ளநீர்
மேலாண்மைக் குழு"





முத்தமிழறிஞர் கலைஞர்
அவர்களால் தொடங்கப்பட்ட
உழவர் சந்தைகள்
புத்துயிரூட்டப்படும்

கொரோனா பெருந்தொற்றின்
3ஆம் அலையினைச் சமாளிக்க
மருத்துவக் கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு





தமிழ்நாட்டில் அனைத்து
சுற்றுலாத்தலங்கள்
மேம்படுத்தப் பெருந்திட்டம்

திருக்கோயில்களை மேம்படுத்த
மாநில அளவிலான
உயர்மட்ட ஆலோசனைக்குழு





கொரோனாவால் பணிவாய்ப்பை இழந்த
புலம்பெயர்ந்த வெளிமாநில
தொழிலாளர்களுக்கு 15 கிலோ அரிசி
மற்றும் உணவுப் பொருட்கள்
அடங்கிய தொகுப்பு

அரசுப் பள்ளிகளிலும்,
தமிழ் வழியில் பயின்றவர்களுக்கும்
அரசு வேலைவாய்ப்பில் முன்னுரிமை





மகளிர் சுய உதவிக்குழு
இயக்கத்திற்குப் புத்துயிர்

கொரோனா தொற்றின் மூன்றாம்
அலை தொடர்பான முன்னேற்பாடு
நடவடிக்கைகளுக்கு
ரூ.100 கோடி ஒதுக்கீடு





பழம்பெரும் நடிகர் திரு. எம்.கே.தியாகராஜ பாகவதர் அவர்களின் மகள் வழிப் பேரன் திரு. சாய்ராம் அவர்கள் குடும்பத்தினருக்கு அரசு வாடகை வீடு ஒதுக்கீடு, ரூ.5 இலட்சம் நிதியுதவி

இந்து சமய அறநிலையத்துறை "100 திருக்கோயில்களில் திருப்பணி மற்றும் குடமுழுக்கு"





தமிழ்நாடு சட்டமன்றத்தின் பெருமையை நினைவுகூரும் வகையில் சட்டமன்ற நூற்றாண்டு விழா

ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் தமிழ்நாட்டுத் தடகள விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு ரூ.5 இலட்சம் ஊக்கத்தொகை





"முதலீட்டாளர்களின் முதல் முகவரி – தமிழ்நாடு", 49 திட்டங்களின் மூலம் ரூ.28,508 கோடி முதலீட்டில் 83,482 நபர்களுக்கு வேலைவாய்ப்பு

தமிழ்நாட்டின் வனப்பரப்பை 33 சதவிகிதமாக உறுதிசெய்து வனவளம் காக்கப்படும்





தமிழினத்தின் வளர்ச்சிக்கு
மாபெரும் பங்காற்றியவர்களைப்
பெருமைப்படுத்தும் வகையில்
“தகைசால் தமிழர்” விருது

கையடக்கக் கணினி மையச்
செயலாக்கக் கருவியை உருவாக்கிய
திருவாரூர் இளம் விஞ்ஞானியின்
உயர்படிப்பிற்கும், ஆராய்ச்சிக்கும்
அரசு உதவி





மகளிர், குழந்தைகள், திருநங்கையர்,
மூத்த குடிமக்களின் பாதுகாப்பு,
உரிமை மற்றும்
நலன் பேணுவதில் உறுதி

நாகூர் தர்கா கந்தூரி சந்தனக்கூடு
திருவிழாவிற்கு இலவசமாக
45 கிலோ சந்தனக்கட்டைகள்





இந்து சமய அறநிலையத்துறை
திருக்கோயில்களில்
அன்னைத் தமிழில் அர்ச்சனை

இந்து சமய அறநிலையத்துறை
திருக்கோயில்களில்
அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர்





பொதுமக்களின் வீட்டிற்கே நேரடியாக சென்று, தொற்றா நோய்களுக்கான சிகிச்சை வழங்கும் "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டம்

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு மஞ்சள் காமாலைக்கான விரைவு பரிசோதனைத் திட்டம்





தமிழறிஞர் மறைமலை அடிகளாரின் படைப்புகள் அரசுடைமையாக்கப்பட்டு, அவரது குடும்பத்தினருக்குக் காப்புநிதியாக ரூ. 20 இலட்சம்

கடந்த ஆட்சியில் கருத்துச் சுதந்திரத்திற்கு எதிராக ஊடகங்கள் மீது தொடரப்பட்ட அனைத்து வழக்குகளும் ரத்து





மூன்றாம் பாலினத்தவர்களுக்கு ரூ.4000 கொரோனா நிவாரண உதவித்தொகை

மாமன்னர் ராஜேந்திர சோழன் பிறந்தநாளான ஆடிதிருவாதிரை விழா அரசு விழாவாகக் கொண்டாடப்படும்





பக்தர்களின் வசதிக்காக இந்துசமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்தில் பொதுமக்கள் குறை கேட்புச் சிறப்பு மையம்

திரவ மருத்துவ ஆக்சிஜன், தொடர்புடைய கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளைத் தொடங்கிட, தனியார் முதலீட்டாளர்களுக்குச் சிறப்புத் தொகுப்புச் சலுகை





2021ஆம் ஆண்டிற்கான 12ஆம் வகுப்புத் துணைத் தேர்வுகளுக்குத் தனித் தேர்வர்களாக விண்ணப்பித்துள்ள மாற்றுத் திறனாளிகள் அனைவரும் தேர்வு

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் திருத்தியமைப்பு





இந்து சமய அறநிலையத்துறை 100 திருக்கோயில்களில் நந்தவனங்கள்

ஜெர்மனி நாட்டிலுள்ள கொலோன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை தொய்வின்றி தொடர்ந்து இயங்க ரூ.1.25 கோடி நிதியுதவி





ஒலிம்பிக் மற்றும் சர்வதேசப் போட்டிகளில் தமிழக வீரர்கள் பங்கேற்க உலகத் தரத்திலான பயிற்சி மற்றும் கட்டமைப்பு வசதிகள்

தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேம்படுத்தப்பட்ட ஒற்றைச்சாளர இணையதளம் 2.0.





உயர்கல்வித் திட்டங்களை ஒருங்கிணைக்கும் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் திருத்தியமைப்பு

வன்னியர்கள், சீர்மரபினர் மற்றும் இதர மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான சிறப்பு ஒதுக்கீடு வழங்கி அரசாணை





தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நலவாரியம் திருத்தியமைப்பு

சென்னையில் உள்ள 7 மருத்துவமனைகளில் தடையில்லா மின்சாரம் வழங்குவதற்காக இரு மின்தட வசதி





தொழிலாளர்கள் அதிகமுள்ள இடங்களில் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள்

மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவிற்குத் துணைத்தலைவர் மற்றும் 9 உறுப்பினர்கள் நியமனம்





தமிழ்நாடு அரசின் நிதிநிலைக் குறித்த வெள்ளை அறிக்கை

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் முதன்முறையாகக் "காகிதமில்லா பட்ஜெட்"





மாவட்ட அரசு மருத்துவமனைகளில் "தாய்ப்பால் வங்கிகள்"

நாட்டின் விடுதலைக்காக அரும்பாடுபட்ட தியாக சீலர்களின் திருவுருவச் சிலைகளுக்குச் சுதந்திரதினம் மற்றும் குடியரசு தினங்களில் அரசு மரியாதை



நாள்தோறும் களப்பணிகள்

நிகழ்வுகளில் சில...



07.05.2021

❖ சென்னை, நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் அமைக்கப்பட்டு வரும் கோவிட் பராமரிப்பு மையத்தை ஆய்வு செய்தார்.

08.05.2021

❖ சென்னை, தலைமைச் செயலகத்தில், ''உங்கள் தொகுதியில் முதலமைச்சர்'' திட்டச் சிறப்பு அலுவலரிடம், மக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் அடங்கிய பெட்டியினை ஒப்படைத்தார்.

10.05.2021



❖ சென்னை, தலைமைச் செயலகத்தில், 2.07 கோடி அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா பாதிப்பு நிவாரணத் தொகை முதல் தவணையாக ரூ.2,000 வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

❖ சென்னை, தலைமைச் செயலகத்தில், சீனிவாசன் சர்வீசஸ் அறக்கட்டளை மூலமாக வழங்கிய ரூ.18 கோடி மதிப்பீட்டிலான 1,600 ஆக்சிஜன் செறிவூட்டிகளை மருத்துவமனைகளுக்குக் கொடியசைத்து அனுப்பி வைத்தார்.

11.05.2021

❖ கொரோனா தொற்று நோயாளிகளுக்குச் சித்த மருத்துவ முறையில் சிகிச்சை அளித்திட சென்னை, மீனம்பாக்கத்திலுள்ள ஏ.எம்.ஜெயின் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள 70 படுக்கை வசதிகளுடன் 2ஆவது சித்தா சிறப்பு கொரோனா சிகிச்சை மையம் மற்றும் 70 படுக்கை வசதிகளுடன் கூடிய அலோபதி சிறப்பு கொரோனா சிகிச்சை மையங்களைத் திறந்து வைத்தார்.

14.05.2021

❖ சென்னை டி.எம்.எஸ். வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா கட்டளை மையத்தில் நள்ளிரவில் திடீர் ஆய்வு செய்தார்.



17.05.2021



- கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் கொரோனா நோய்த் தடுப்பூசிகள் செலுத்தும் பணியையும், கோவிட் மருத்துவச் சிறப்பு அவசர ஊர்திகளையும் பார்வையிட்டார்.
- கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக அமுதம் நியாய விலைக் கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா நிவாரணத் தொகைக்கான முதல் தவணை ரூ.2,000த்தினை வழங்கினார்.

20.05.2021

- **திருப்பூர் மாவட்டம்,** நேதாஜி ஜவுளிப் பூங்காவில், 18 முதல் 44 வயது வரை உள்ள பயனாளிகளுக்கு கொரோனா தடுப்பூசி முகாமினைத் தொடங்கி வைத்தார்.
- **கோயம்புத்தூர் மாவட்டம்,** கொடிசியா வளாக கொரோனா சிறப்பு சிகிச்சை மையத்தில் கூடுதல் படுக்கை வசதிகளையும், குமரகுரு பொறியியல் கல்லூரியில் கொரோனா சிறப்பு சிகிச்சை மையத்தையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



- **சேலம்** உருக்காலை வளாகத்தில் 500 படுக்கை வசதிகளுடன் கூடிய தற்காலிக கொரோனா சிறப்பு சிகிச்சை மையத்தினைத் திறந்து வைத்தார்.
- **சேலம் மாவட்டம்,** மகுடஞ்சாவடி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் திடீர் ஆய்வு செய்தார்.

21.05.2021

- **மதுரை மாவட்டம்,** தோப்பூர் அரசு காச நோய் மருத்துவமனையில் ஆக்சிஜன் வசதியுடன் கூடிய 500 படுக்கைகள் கொண்ட கோவிட் சிறப்பு சிகிச்சை மையத்தைத் திறந்து வைத்தார்.
- **மதுரை மாவட்ட** ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை போராட்டத்தின்போது உயிரிழந்த, படுகாயமடைந்தவர்களின் குடும்பத்தினர் 17 பேருக்கு அரசுப் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.
- **திருச்சி மாவட்டம்,** கி.ஆ.பெ.விஸ்வநாதம் அரசு மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையில், 400 படுக்கை வசதிகளுடன் கூடிய கொரோனா சிகிச்சை மையத்தைத் திறந்து வைத்தார்.

22.05.2021



- சென்னை எத்திராஜ் திருமண மண்டபத்தில், மாற்றுத்திறனாளி களுக்கான கோவிட் தடுப்பூசி சிறப்பு முகாமினைத் தொடங்கி வைத்தார்.

25.05.2021

- **செங்கல்பட்டு மாவட்டம்,** திருக்கழுக்குன்றத்தில் அமைந்துள்ள மத்திய அரசின் HLL Biotech நிறுவனத்தின் Vaccine Lab–யினை ஆய்வு செய்தார்.

26.05.2021

- சென்னை, தலைமைச் செயலகத்தில், சிப்காட் நிறுவனம் மூலம் அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 1,400 ஆக்சிஜன் சிலிண்டர்கள் மற்றும் முறைப்படுத்தும் கருவிகளை 18 மாவட்டங்களுக்கு கொரோனா சிகிச்சைப் பயன்பாட்டிற்காக வாகனங்கள் மூலம் அனுப்பி வைத்தார்.



- **காஞ்சிபுரம் மாவட்டம்,** ஐநாக்ஸ் நிறுவனத்தில் ஆக்சிஜன் தயாரிக்கும் பிரிவினை ஆய்வு செய்தார்.
- **காஞ்சிபுரம் மாவட்டம்,** டய்ம்லர் இந்தியா நிறுவனத்தில் கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணியைத் தொடங்கி வைத்தார்.
- **திருவள்ளூர் மாவட்டம்,** நேமம் கிராமத்தில், ஊரகப் பகுதிகளில் கொரோனா தடுப்பூசி பணிகளைத் தொடங்கி வைத்தார்.


27.05.2021

- சென்னை மாநகராட்சி, இராயபுரம் டான்பாஸ்கோ பள்ளியில், கோவிட் தடுப்பூசி சிறப்பு முகாமையும், பாரதி மகளிர் கல்லூரியில் 100 ஆக்சிஜன் படுக்கை வசதியுடன் கூடிய கோவிட் சிகிச்சை மையத்தையும் தொடங்கி வைத்தார்.

28.05.2021

- சென்னை, தலைமைச் செயலகத்தில், இந்தியத் தொழில் கூட்டமைப்பால் அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 750 ஆக்சிஜன் உருளைகளை 8 மாவட்டங்களுக்கு கொரோனா சிகிச்சைப் பயன்பாட்டிற்காக வாகனங்கள் மூலம் அனுப்பி வைத்தார்.
- சென்னை, அண்ணா சாலை தமிழ்நாடு மின் ஆளுமை முகமை அலுவலகத்தில், 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' துறையின் பயனாளிகளிடம் தொலைபேசி வாயிலாகக் கலந்துரையாடினார்.

30.05.2021



❖ **கோயம்புத்தூர்** அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் இ.எஸ்.ஐ மருத்துவமனையில், கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகளைப் பாதுகாப்புக் கவச உடை அணிந்து நேரில் பார்வையிட்டு உடல்நலன் குறித்துக் கேட்டறிந்தார்.

31.05.2021

❖ கரூர் மாவட்ட நிருவாகம் மற்றும் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் இணைந்து அமைத்துள்ள ஆக்ஸிஜன் வசதிகள் கொண்ட கொரோனா சிறப்புச் சிகிச்சை மையத்தினைக் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

02.06.2021

❖ திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளையில் உள்ள புனித அந்தோணியார் கல்வியியல் கல்லூரியில் 140 படுக்கை வசதிகளுடன் கூடிய கொரோனா சிகிச்சை மையம் மற்றும் வள்ளியூரில் யுனிவர்சல் பொறியியல் கல்லூரி வளாகத்தில் 180 படுக்கை வசதிகளுடன் கூடிய கொரோனா சிகிச்சை மையங்களைக் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

❖ சென்னை, தலைமைச் செயலகத்தில், 2020 ஜனவரி முதல் ஏப்ரல் மாதங்களுக்குள் ஓய்வு பெற்ற தமிழ்நாடு அரசுப்போக்குவரத்து ஊழியர்களுக்கான ஓய்வூதியப் பணப் பயன்களின் நிலுவைத் தொகையான ரூ.497.32 கோடியினை 2,457 ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கு வழங்கும் பணியைத் தொடங்கி வைத்தார்.



❖ சென்னை மாநகராட்சி, பட்டாளம் மண்டல அலுவலகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 97ஆவது பிறந்தநாளை முன்னிட்டு கொரோனா நோய்த்தொற்றிலிருந்து மீண்ட 63 பெருநகர மாநகராட்சி முன்களப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

❖ பெரம்பூர் லூர்து பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 97ஆவது பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில் கொரோனா நோய்த்தொற்றுக் காலத்தில் இடைவிடாமல் பணியாற்றிய 118 செவிலியர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

❖ கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள அனிதா Achievers அகாடமியில் பயின்ற 1,499 மாணவ, மாணவியர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

03.06.2021

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 97ஆவது பிறந்தநாள்



- சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் ஆகியோரின் நினைவிடங்களில் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.
- சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மரக்கன்று நட்டார்.
- சென்னை, முரசொலி அலுவலக வளாகத்தில் உள்ள முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.
- சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.
- சென்னை, கோபாலபுரம் இல்லத்தில் உள்ள முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.
- சென்னை, சி.ஐ.டி.காலனி இல்லத்தில் உள்ள முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.
- சென்னை, தலைமைச் செயலகத்தில், 2,09,81,900 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா பாதிப்பு நிவாரண உதவித்தொகை இரண்டாம் தவணை ரூ.2,000 வழங்கும் திட்டத்தையும், ரூ.844.51 கோடி செலவில், 14 அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கும் திட்டத்தையும் தொடங்கி வைத்தார்.





- சென்னை, தலைமைச் செயலகத்தில், கொரோனா தொற்றால் உயிரிழந்த கள்ளக்குறிச்சி மாவட்ட சன்நியூஸ் தொலைக்காட்சி செய்தியாளர் கணேசமூர்த்தி, மதுரை மாவட்ட நமது முரசு நாளிதழின் செய்தியாளர் எஸ்.நம்பிராஜன் மற்றும் தேனி தினமணி செய்தியாளர் எம்.சரவணகுமார் ஆகியோரின் குடும்பத்தினருக்குத் தலா ரூ.10 இலட்சம் நிவாரண உதவித்தொகையை வழங்கினார்.
- சென்னை, தலைமைச் செயலகத்தில், கொரோனா பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்து அவர்களைக் காப்பாற்றும் அரும்பணியில் தங்களது இன்னுயிரை இழந்த மருத்துவர்கள் எஸ்.சந்திரசேகரன், கே.இரவீந்திரன் ஆகியோரது குடும்பத்தினருக்குத் தலா ரூ.25 இலட்சம் நிவாரண உதவித்தொகையை வழங்கினார்.
- சென்னை, தலைமைச் செயலகத்தில், கொரோனாவால் உயிரிழந்த, மாவட்ட தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் வி.எம்.நீஷ், சென்னை, தமிழ்நாடு அதிதீவிர பயிற்சிப் பள்ளி காவல் ஆய்வாளர் எம்.ஜோனாத்தான், செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் காவல் நிலைய தலைமைக் காவலர் சதீஷ்குமார் ஆகியோரது குடும்பத்தினருக்குத் தலா ரூ.25 இலட்சம் நிவாரண உதவித்தொகையை வழங்கினார்.
- சென்னை, தலைமைச் செயலகத்தில், 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' துறையின் கீழ் பெறப்பட்ட மனுக்கள் மீது தீர்வு காணப்பட்ட பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.



- சென்னை, தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள திருக்கோயில்களில் நிலையான மாத சம்பளமின்றிப் பணியாற்றி வரும் அர்ச்சகர்கள், பட்டாட்சியார்கள், பூசாரிகள் மற்றும் இதரப் பணியாளர்களுக்கு கொரோனா நிவாரண உதவித்தொகையாக ரூ.4,000, 10 கிலோ அரிசி மற்றும் 15 வகை மளிகைப் பொருட்கள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், கூடுதலாக அமைக்கப்பட்டுள்ள 300 ஆக்சிஜன் படுக்கை வசதிகள் கொண்ட கொரோனா சிறப்பு சிகிச்சை மையத்தைக் காணொலிக் காட்சி மூலமாகத் திறந்துவைத்தார்.

04.06.2021

- விருதுநகர் அரசு மருத்துவமனை அருகிலுள்ள கே.வி.எஸ். நூற்றாண்டு பள்ளி வளாகத்தில் 200 ஆக்சிஜன் படுக்கை வசதிகள் கொண்ட கொரோனா சிறப்பு சிகிச்சை மையத்தைக் காணொலிக் காட்சி மூலமாகத் திறந்துவைத்தார்.

❖ தேனி மாவட்டம், கோம்பையில் உள்ள தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியக் கட்டடத்தில் 300 படுக்கை வசதிகள் மற்றும் ஆக்சிஜன் வசதியுடன் கூடிய கொரோனா சிகிச்சை மையத்தைக் காணொலிக் காட்சி மூலமாகத் திறந்துவைத்தார்.

05.06.2021



❖ சென்னை, கஸ்தூரிபாய் காந்தி மகப்பேறு மருத்துவமனையில் திடீரென்று ஏற்பட்ட தீவிபத்தின்போது துரிதமாகச் செயல்பட்டுப் பச்சிளங் குழந்தைகள் மற்றும் தாய்மார்களின் உயிர்களைக் காப்பாற்றிய செவிலியர் திரு. ஜெயக்குமார் அவர்களை நேரில் அழைத்துப் பாராட்டினார்.

❖ கண்ணியத்தென்றல் காயிதேமில்லத் அவர்களின் 126ஆவது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை, வாலாஜா பெரிய பள்ளிவாசல் வளாகத்தில் அமைந்துள்ள நினைவிடத்தில் மலர்ப் போர்வை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

06.06.2021



❖ வண்டலூர், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு நேரில் சென்று, கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள ஆசிய சிங்கங்களைப் பார்வையிட்டு, அச்சிங்கங்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்து மருத்துவர்கள் மற்றும் வனத்துறை உயர் அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

09.06.2021

❖ மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களை, ஆளுநர் மாளிகையில், முதல் சட்டமன்றக் கூட்டத் தொடரில் உரை நிகழ்த்துதல் குறித்து நேரில் சந்தித்துக் கலந்தாலோசனை மேற்கொண்டார்.

10.06.2021

❖ கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரம்பூர், ஜமாலியா குடியிருப்புப் பகுதியில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் கட்டப்படவுள்ள இடத்தைப் பார்வையிட்டார்.

❖ பெருநகரச் சென்னை மாநகராட்சி சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கொரோனா நோய்த்தொற்றுக் காலங்களில் சிறப்பாகப் பணியாற்றிய 2,765 தூய்மைப் பணியாளர்களுக்கு மருத்துவத் தொகுப்புகளை வழங்கினார்.

❖ கொளத்தூர் ஜெயின் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கொரோனா காலத்திலும் கல்விப் பணியாற்றிய தனியார் பள்ளிகளில் பணிபுரியும் 160 ஆசிரியர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

❖ கொளத்தூர் ஜி.கே.எம். காலனியில் 3.60 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள தெருக் குளத்தில், ரூ.2.89 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்புப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

11.06.2021



❖ **தஞ்சாவூர் மாவட்டம்,** கல்லணையில் விரிவாக்கம், புதுப்பித்தல், புனரமைத்தல் திட்டத்தின் கீழ், மேற்கொள்ளப்பட்டு வரும் சீரமைப்புப் பணிகள் மற்றும் புகைப்படக் கண்காட்சியைப் பார்வையிட்டார்.

❖ **தஞ்சாவூர்,** பள்ளியக்ரஹாரம் கிராமத்தில் வெண்ணாற்றில் மண்திட்டுக்களைச் சமன்படுத்தும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

❖ **தஞ்சாவூர்,** வல்லம் வடக்குக் கிராமத்தில், முதலை முத்துவாரி வடிகாலில் தூர்வாரும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

❖ **திருச்சிராப்பள்ளி மாவட்டம்,** கொடியாலம் கிராமத்தில், புலிவலம் மணற்போக்கி வடிகால் கால்வாயில் நடைபெற்று வரும் தூர்வாரும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

❖ **சேலம் மாவட்டத்தில்** "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" துறையின்கீழ் 1,100 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுப் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

12.06.2021



❖ காவிரி டெல்டா பகுதிகளில் குறுவைச் சாகுபடிக்காக **மேட்டூர்** அணையிலிருந்து தண்ணீர் திறந்து வைத்து, புகைப்படக் கண்காட்சியினைப் பார்வையிட்டார்.

❖ காவிரி டெல்டா பகுதிகளில் உள்ள விவசாயப் பெருமக்கள் குறுவைச் சாகுபடி செய்ய மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து வைக்கச் செல்லும் வழியில் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் குறைகளைக் கேட்டறிந்தார்.

15.06.2021

❖ சென்னை, முகாம் அலுவலகத்தில், எழுத்தாளர் தி. ஜானகிராமன் அவர்களின் நூற்றாண்டு நிறைவையொட்டி (1921 – 2021) "ஜானகிராமம்" என்ற நூலை வெளியிட்டார்.

16.06.2021



- சென்னை, தலைமைச் செயலகத்தில், கொரோனாவால் பெற்றோர்களை இழந்த குழந்தைகளுக்குத் தலா ரூ.5 இலட்சம் வைப்பீடு செய்து, 18 வயது நிறைவடையும்போது வழங்கும் வகையிலான வைப்பீடு சான்றிதழ்களை வழங்கினார்.
- சென்னை, தலைமைச் செயலகத்தில், கொரோனா நோய்த்தொற்றினால் தாய் அல்லது தந்தையை இழந்த குழந்தைகளோடு இருக்கும் தந்தை அல்லது தாய்க்கு உடனடி நிவாரணத் தொகையாக ரூ.3 இலட்சத்திற்கான காசோலைகளை வழங்கினார்.
- சென்னை, லாயிட்ஸ் காலனி மற்றும் நந்தனம் பகுதிகளிலுள்ள நியாய விலைக் கடைகளுக்கு நேரில் சென்று, ஆய்வு மேற்கொண்டு, அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா பாதிப்பு நிவாரண உதவித்தொகை இரண்டாம் தவணையாக ரூ.2 ஆயிரம் மற்றும் 14 அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கினார்.

17.06.2021

- **புதுடில்லி** தமிழ்நாடு இல்லத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.
- மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களை, அவர்களது இல்லத்தில் சந்தித்துத் தமிழக வளர்ச்சித் திட்டங்கள் குறித்து 25 கோரிக்கைகள் அடங்கிய மனுவினை வழங்கினார்.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை, **புதுடில்லி** தமிழ்நாடு இல்லத்தில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் திரு. சீத்தாராம் யெச்சூரி மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் திரு. டி.ராஜா ஆகியோர் மரியாதை நிமித்தமாகச் சந்தித்தனர்.

18.06.2021



- **புதுடில்லியில்,** அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் இடைக்காலத் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்கள் மற்றும் முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தி அவர்களை அவர்களது இல்லத்தில் சந்தித்தார்.

19.06.2021

- சென்னை, தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசின் 108 இலவச அவசரகால ஊர்தி சேவைப் பயன்பாட்டிற்காக கரூர் வைஸ்யா வங்கி வழங்கிய 10 அவசரகால ஊர்திகளின் சேவைகளைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

19.06.2021



- சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 1 முதல் 12ஆம் வகுப்பு வரையிலான அனைத்துப் பாடங்களுக்கான கல்வித் தொலைக்காட்சியினைத் தொடங்கிவைத்து, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்குப் பாட நூல்களை வழங்கினார்.

- சென்னை, தலைமைச் செயலகத்தில், முகாமிற்கு வெளியே வாழும் 13,553 இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கு கொரோனா நிவாரண நிதியாக ரூ.4,000 வழங்கும் திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.

- சென்னை, தலைமைச் செயலகத்தில், நபார்டு வங்கியின் தலைவர் டாக்டர் ஜி.ஆர்.சிந்தாலா அவர்கள் சந்தித்து, தமிழ்நாட்டில் நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப் பணிகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

20.06.2021



- பொதுமக்கள் மின்துறை சார்ந்த குறைகளைத் தெரிவித்திட, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் "மின்னகம்" என்ற புதிய மின் நுகர்வோர் சேவை மையத்தைத் திறந்து வைத்தார்.

- சென்னை, தலைமைச் செயலகத்தில், ஜப்பான் நாட்டில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவிலிருந்து வாள் வீச்சுப் போட்டிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள வீராங்கனை செல்வி பவானி தேவி அவர்களுக்கு ரூ.5 இலட்சத்திற்கான காசோலையை வழங்கினார்.

- சென்னை, எழும்பூரில் உள்ள அரசு குழந்தைகள் நல மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் குழந்தைகளுக்கென 250 படுக்கை வசதிகளுடன் கூடிய பிரத்யேக பூஜ்ஜிய தாமத கொரோனா பராமரிப்பு மையத்தைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

24.06.2021

- சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்கள் மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.
- சென்னை, தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைச் சென்னையிலுள்ள அமெரிக்க நாட்டின் தூதர் ஜூடித் ராவின் அவர்கள் மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார்.

25.06.2021

- நந்தனம் அரசினர் ஆடவர் கலைக் கல்லூரியில், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்களுக்கு கொரோனா நோய்த்தொற்றுத் தடுப்பூசி செலுத்தும் சிறப்பு முகாமினைத் தொடங்கி வைத்தார்.
- சென்னை, தலைமைச் செயலகத்தில், கொரோனா பெருந்தொற்றுப் பரவல் காரணமாகப் பணி வாய்ப்பை இழந்த, குடும்ப அட்டை இல்லாத, புலம்பெயர்ந்த வெளி மாநிலத் தொழிலாளர்களுக்கு 15 கிலோ அரிசி, 1 கிலோ துவரம் பருப்பு மற்றும் 1 கிலோ சமையல் எண்ணெய் அடங்கிய தொகுப்பை வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.



- சென்னை, தலைமைச் செயலகத்தில், அருள்மிகு தீர்த்தபாலீஸ்வரர் திருக்கோயிலில், கோயில் உண்டியலைக் களவாட வந்த நபர்களால் தாக்கப்பட்டு உயிரிழந்த ஒப்பந்த நியமனக் காவலர் த.பாபு குடும்பத்தினருக்கு ரூ.5 இலட்சம் நிவாரண நிதியாக வழங்கினார்.
- சென்னை, தலைமைச் செயலகத்தில், அருள்மிகு நாகப்பச் செட்டிப் பிள்ளையார் திருக்கோயில் கட்டுமானப் பணியின்போது உயிரிழந்த திவாகர் குடும்பத்தினருக்கு ரூ.5 இலட்சம் நிவாரண நிதியாக வழங்கினார்.
- சென்னை, தலைமைச் செயலகத்தில், கருப்புப் பூஞ்சை நோய்த்தொற்றுத் தடுப்பு மற்றும் சிகிச்சைக்காகத் தமிழ்நாடு அரசின் சார்பில் அமைக்கப்பட்ட பணிக்குழுவின் தலைவர் இடைக்கால அறிக்கையைச் சமர்ப்பித்தார்.



26.06.2021

- சென்னை, நேரு உள் விளையாட்டு அரங்கத்தில், விளையாட்டு வீரர்களுக்கான கொரோனா தடுப்பூசி சிறப்பு முகாமைத் தொடங்கிவைத்து, ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் விளையாட்டு வீரர்களுக்கு அரசின் சிறப்பு ஊக்கத்தொகை வழங்கினார்.

- சென்னை, தலைமைச் செயலகத்தில், ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் 6 தமிழக விளையாட்டு வீரர்களுக்குச் சிறப்பு ஊக்கத்தொகையாகத் தலா ரூ.5 இலட்சத்திற்கான காசோலைகளை வழங்கினார்.
- கொளத்தூர், மகாராசி கல்யாண மண்டபத்தில் வண்ணமீன் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்களுடன் கலந்துரையாடல் மேற்கொண்டார்.
- கொளத்தூர், ஜி.கே.எம் காலனி விளையாட்டுத் திடலில் இசைக் கலைஞர்கள் 325 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.



28.06.2021

- சென்னை, தலைமைச் செயலகத்தில், இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் திரு. சி.ரங்கராஜன் அவர்கள் சந்தித்தார்.
- சென்னை, தலைமைச் செயலகத்தில், சென்னையிலுள்ள சிங்கப்பூர் தூதரகத்தின் துணைத் தூதர் திரு. பொங் கோக் டியான் அவர்கள் (Mr. Pon Kok Tian) சந்தித்தார்.



- நாகப்பட்டினத்தில் கஜா புயலால் வீடுகளை இழந்தவர்களுக்காகச் சென்னை, ஒய்.எம்.சி.ஏ. பிராந்தியங்கரை கிராமத்தில் கட்டியுள்ள 109 வீடுகள் மற்றும் சமூகநல மண்டபத்தைப் பயனாளிகளுக்கு வழங்கினார்.
- சென்னை, தலைமைச் செயலகத்தில், சென்னையிலுள்ள தாய்பே (Taipei) பொருளாதார மற்றும் கலாச்சார மையத்தின் தலைவர் திரு. பென் வாங் அவர்கள் (Mr. Ben Wang) சந்தித்தார்.

29.06.2021

- தமிழகத்திற்கு வருகைதந்த மாண்புமிகு இந்தியக் குடியரசு துணைத்தலைவர் அவர்களைச் சென்னை விமான நிலையத்தில், பொன்னாடை அணிவித்து வரவேற்றார்.
- சென்னை, தலைமைச் செயலகத்தில், ''உங்கள் தொகுதியில் முதலமைச்சர்'' துறை திட்டப் பயனாளிகளுக்குச் செயலாணைகளை வழங்கினார்.
- சென்னை, தலைமைச் செயலகத்தில், சென்னையிலுள்ள தாய்லாந்து தூதரகத்தின் துணைத்தூதர் திரு. நிட்டிரூஜி ஃபோன்பிரசர்ட் அவர்கள் (Mr. Nitirooge Phoneprasert) சந்தித்தார்.

30.06.2021

❖ **காஞ்சிபுரம் மாவட்டம்,** பேரறிஞர் அண்ணா நினைவு இல்லத்தில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு இல்லத்தைப் பார்வையிட்டார்.

❖ **காஞ்சிபுரம் மாவட்டம்,** இருங்காட்டுக் கோட்டை, ஹுண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனத்தின் வெள்ளி விழா நிகழ்ச்சியில், ஹுண்டாய் மோட்டார் இந்தியா அறக்கட்டளையின் சார்பில் குழந்தைகள் நல மையத்தைத் திறந்து வைத்து, மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.



❖ காஞ்சிபுரம் மாவட்டம், இருங்காட்டுக்கோட்டையில் அமைந்துள்ள ஹுண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனத் தொழிற்சாலையில், ஒரு கோடி கார்கள் உற்பத்தி செய்யப்பட்டதன் சிறப்பு நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்து, கார் தொழிற்சாலையைப் பார்வையிட்டார்.

01.07.2021

❖ சென்னை, கிண்டி கிங்ஸ் நோய்த்தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் அமைந்துள்ள அரசு கொரோனா மருத்துவமனையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கொரோனாவிற்குப் பிந்தைய நல்வாழ்வு மையம் மற்றும் மேம்படுத்தப்பட்ட பன்னாட்டுத் தடுப்பூசி மையம் ஆகியவற்றைத் திறந்துவைத்து, பெருந்தொற்றுப் பேரிடர் காலத்தில் மகத்தான சேவை புரிந்த மருத்துவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

❖ தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மருத்துவர் தின நிகழ்ச்சியில், நீலகிரி மாவட்டத்தில், பழங்குடி இன மக்கள் மற்றும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு 100% தடுப்பூசி செலுத்தி, இந்தியாவின் முதல் மாவட்டமாகத் திகழச் செய்த நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ் வழங்கினார்.



❖ மருத்துவர் தின நிகழ்ச்சியில், ஆக்சிஜன் அளவிடும் கருவிகளை (Pulse Oxymeter) பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் அவர்களிடம் வழங்கினார்.

❖ மருத்துவர் தின நிகழ்ச்சியில், கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் மகத்தான பணிபுரிந்த மருத்துவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

❖ சென்னை, தலைமைச் செயலகத்தில், டென்மார்க் நாட்டின் தூதர் திரு. ஃபிரட்டி ஸ்வானே அவர்கள் சந்தித்தார்.

02.07.2021



- சென்னை, தலைமைச் செயலகத்தில், பழம்பெரும் நடிகர் திரு.எம். கே.தியாகராஜ பாகவதர் அவர்களின் மகள் வழிப்பேரன் திரு. சாய்ராம் மற்றும் அவரது குடும்பத்தின் வறிய நிலையைக் கருதி, அரசு வீடு மற்றும் ரூ.5 இலட்சம் நிதியுதவியும் வழங்கினார்.
- சென்னை, தலைமைச் செயலகத்தில், இந்தியாவிலேயே முதன்முறையாக அரசு சார்ந்த கூட்டுறவு அமைப்பான இண்ட்கோசர்வ் நிறுவனத்திற்கு, ஜெர்மனி நாட்டின் ஃப்ளோசர்ட் (FLOCERT) நிறுவனம் அளித்த நியாய வர்த்தகச் சான்றிதழை முதன்மைச் செயல் அலுவலர் காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

06.07.2021



- **திருவாரூர் மாவட்டம்,** வடுவூர், செருமங்கலம் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில், விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களுடன் கலந்துரையாடினார். மேலும், வாணிபக் கழகத்தின் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள பாரம்பரிய நெல் வகைகளைப் பார்வையிட்டார்.

07.07.2021

- **திருவாரூர் மாவட்டம்,** கொரடாச்சேரி ஊராட்சி ஒன்றியம் காட்டூர் கிராமத்தில் அனைவருக்கும் கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டதற்காக, திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழை வழங்கினார்.
- **திருவாரூர்** அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் ரூ.10.50 கோடி மதிப்பீட்டில் 250 படுக்கை வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பேறுகால அவசர சிகிச்சை மற்றும் சிசு தீவிர சிகிச்சை பராமரிப்பு மையத்தைத் திறந்து வைத்தார்.
- **திருக்குவளையில்** உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த இல்லத்தில் அவரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.
- **நாகப்பட்டினம் மாவட்டம்,** சீராவட்டம் வடிகாலில் மேற்கொள்ளப்பட்ட தூர்வாரும் பணிகளைப் பார்வையிட்டார்.

08.07.2021

- சென்னை, தலைமைச் செயலகத்தில், பாண்டிச்சேரி மற்றும் சென்னையிலுள்ள பிரான்ஸ் நாட்டின் துணைத் தூதர் திருமதி லிசி டால்போட் பார்ரி (Mrs. Lise Talbot Barre) அவர்கள் சந்தித்தார்.

❖ சென்னை, தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைத்துறை வெளிப்படைத் தன்மையுடன் இயங்க, ரூ.28.31 கோடியிலான 1,213 மடிக்கணினிகள் மற்றும் 1,484 கணினிகளை அலுவலகப் பயன்பாட்டிற்காக வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

09.07.2021

❖ சென்னை, தலைமைச் செயலகத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை, இலக்கிய மேம்பாட்டுச் சங்கத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட 21 சிறந்த எழுத்தாளர்களுக்குப் பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.



❖ சென்னை, தலைமைச் செயலகத்தில், ஜெர்மனியில் அமைந்துள்ள கொலோன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை தொய்வின்றி தொடர்ந்து இயங்க ரூ.1.25 கோடி நிதியுதவி அளித்தமைக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு ஜெர்மனியில் உள்ள ஐரோப்பா தமிழர்கள் கூட்டமைப்பு மற்றும் ஓய்வுபெற்ற மூத்த தமிழ்ப் பேராசிரியர் உல்ரிக்க நிக்லாஸ் அவர்களும் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

12.07.2021

❖ சென்னை, தலைமைச் செயலகத்தில், நாகூர் தர்கா சின்ன ஆண்டவர் கந்தூரி மற்றும் பெரிய ஆண்டவர் கந்தூரி சந்தனக்கூடு திருவிழாவிற்கு 45 கிலோ சந்தனக் கட்டைகளைத் தமிழ்நாடு அரசு இலவசமாக வழங்குவதற்கான அரசாணையினை நாகூர் தர்கா நிருவாகிகளிடம் வழங்கினார்.



13.07.2021

❖ சென்னை, தலைமைச் செயலகத்தில், இராணுவத்தில் பணியாற்றி வீரமரணம் அடைந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த நான்கு போர் வீரர்களின் வாரிசுதாரர்களை நேரில் அழைத்து ஆறுதல் தெரிவித்ததோடு அவர்களது குடும்பத்தினருக்குத் தலா ரூ.20 இலட்சம் வழங்கினார்.

15.07.2021

❖ சென்னை, தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் மாவட்டக் கல்வி அலுவலர் பணியிடத்திற்கு 20 நபர்களுக்கும், பள்ளிக்கல்வித்துறை மற்றும் பொது நூலகத்துறையில் 261 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கும் கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகள் வழங்கினார்.



- பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 119ஆவது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு அண்ணா சாலையில் உள்ள காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்.
- சென்னை, தலைமைச் செயலகத்தில், "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" துறையின்கீழ், 13 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளுக்கான ஆணைகளை வழங்கினார்.

18.07.2021

- சென்னை, லயோலா கல்லூரியில், பழங்குடியின மக்களின் உரிமைப் போராளியும், மனித உரிமைச் செயற்பாட்டாளருமான மறைந்த ஸ்டேன் சுவாமி அவர்களின் அஸ்திக்கு மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

19.07.2021

- **புதுதில்லி**, குடியரசுத் தலைவர் மாளிகையில், மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களை நேரில் சந்தித்து, தமிழக சட்டமன்ற நூற்றாண்டு விழா மற்றும் சட்டமன்றப் பேரவையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத் திறப்பு விழாவிற்கு அழைப்பு விடுத்தார்.

20.07.2021



- சென்னையில், "முதலீட்டாளர்களின் முதல் முகவரி – தமிழ்நாடு" விழாவில் 49 திட்டங்களின் மூலம் ரூ.28,508 கோடி முதலீட்டில் 83,482 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கும் விதமாகப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

26.07.2021

- சென்னை, தலைமைச் செயலகத்தில், காவல் உதவி ஆய்வாளர் மற்றும் தடய அறிவியல் துறையில் இளநிலை அறிவியல் அலுவலர் பணியிடங்களுக்குத் தேர்வு செய்யப்பட்ட நபர்களுக்குப் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

❖ சென்னை, தலைமைச் செயலகத்தில், டோக்கியோவில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் தமிழக வீரர்களை உற்சாகப்படுத்துகின்ற வகையில் "வென்று வா வீரர்களே" என்ற பாடலை வெளியிட்டார்.

27.07.2021

❖ **திருவள்ளூர் மாவட்டம்,** வல்லூரில் Torrent Gas நிறுவனத்தால் நிறுவப்பட்டுள்ள சிட்டி கேட் நிலையம், சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள 25 CNG நிலையங்கள் ஆகியவற்றைக் காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்.

28.07.2021

❖ சென்னை, காவேரி மருத்துவமனையில், இந்தியத் தொழிற் கூட்டமைப்பு மற்றும் தனியார் மருத்துவமனைகள் இணைந்து, கூட்டாண்மை சமூகப் பங்களிப்பு நிதியின் மூலம் இலவச கோவிட் தடுப்பூசி செலுத்தும் சேவையினைத் தொடங்கி வைத்து, சான்றிதழ்களை வழங்கினார்.



❖ கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.65 இலட்சம் மதிப்பிலான முடிவுற்ற திட்டப்பணிகளைத் திறந்துவைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

❖ சென்னை, தலைமைச் செயலகத்தில், கையடக்கக்கணினி மையச் செயலாக்கக் கருவியை உருவாக்கிய திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த இளம் விஞ்ஞானி செல்வன் எஸ்.எஸ்.மாதவ் அவர்களை நேரில் அழைத்துப் பாராட்டு.

29.07.2021



❖ வண்டலூர், ஊனமாஞ்சேரி, தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியகத்தில் நடைபெற்ற பயிற்சி துணைக் கண்காணிப்பாளர்கள் பயிற்சி நிறைவு அணிவகுப்பு விழாவில், ரூ.10.28 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள ஒருங்கிணைந்த சைபர் பயிற்சி வளாகக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

❖ ரேலா மருத்துவமனையில் தழும்பில்லா ரோபோடிக் கல்லீரல் தான அறுவை சிகிச்சை மையத்தைத் திறந்து வைத்தார்.

30.07.2021

❖ சென்னை, இராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில், தமிழ்நாடு அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியத்தின் சார்பில் 50 ஆயிரம் அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு ரூ.34.79 கோடிக்கான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

- சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற இந்தியா – பாகிஸ்தான் போரின் பொன்விழாவில், அப்போரில் பங்கேற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர்களின் தியாகத்தைப் போற்றி நினைவுப் பரிசு வழங்கினார்.

31.07.2021

- சென்னை, கலைவாணர் அரங்கத்தில், கொரோனா பெருந்தொற்றைத் தவிர்க்கும் நோக்கில் தமிழ்நாடு அரசின் சார்பில் கொரோனா தொடர் விழிப்புணர்வுப் பிரச்சாரத்தைத் தொடங்கி வைத்தார்.
- சென்னை, தலைமைச் செயலகத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில், திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகக் கட்டடத்தைக் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

02.08.2021



- மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் கலந்துகொண்ட தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழா மற்றும் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திறப்பு விழா.

05.08.2021



- **கிருஷ்ணகிரி மாவட்டம்,** சூளகிரியில் "மக்களைத் தேடி மருத்துவம் திட்டம்" மற்றும் "ஒரு இலட்சம் தொழிலாளர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தும் திட்டம்" ஆகிய திட்டங்களைத் தொடங்கி வைத்தார்.
- மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின்கீழ் சிகிச்சை வழங்கவிருக்கும் செவிலியர் மற்றும் இயன்முறைச் சிகிச்சையாளர்களின் பயன்பாட்டிற்காக 3 புதிய வாகனங்களின் சேவைகளைத் தொடங்கி வைத்தார்.
- ஒரு கோடி மக்கள் பயன்பெறும் கர்ப்பிணித் தாய்மார்க்கு "HBs Ag" என்ற மஞ்சள் காமாலை நோய்க்கான விரைவுப் பரிசோதனைத் திட்டத்தைத் தொடங்கிவைத்தார்.

06.08.2021

- எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் 32ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற "காலநிலை மாற்றம் மற்றும் கொரோனா தொற்று நோயின் பின்னணியில் உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பை உறுதி செய்தல்" குறித்த பன்னாட்டு மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.

07.08.2021

- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி, அவரது நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.
- பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.



- சென்னை, நுங்கம்பாக்கம் இந்து சமய அறநிலையத்துறை தலைமையிட வளாகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் நினைவாக ஒரு இலட்சம் தல மரக்கன்றுகள் நடும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- சென்னை, தலைமைச் செயலகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி, "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" துறையால் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின்கீழ், தீர்வுகாணப்பட்ட பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

08.08.2021

- "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" துறையின்கீழ் 135 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் கொளத்தூர் தொகுதிக்குட்பட்ட 1,330 பள்ளி மாணவ, மாணவிகளுக்குக் கல்வி உதவித்தொகை மற்றும் கல்வி உபகரணங்களையும் கொளத்தூர் குருகுலம் பள்ளியில் நடைபெற்ற விழாவில் வழங்கினார்.

09.08.2021

- புதுடில்லியில் நடைபெற்ற ஐ.எஸ்.எஸ்.எப். உலகக் கோப்பை துப்பாக்கி சுடும் போட்டி, தங்கம் வென்ற திரு.பிரித்வி ராஜ் தொண்டைமான் அவர்கள் மற்றும் டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்ற தமிழகத்தைச் சேர்ந்த பாய்மரப் படகுப் போட்டி வீரர்கள் திரு.வருண் ஏ. தாக்கர், செல்வி நேத்ரா குமணன் மற்றும் திரு.கே.சி.கணபதி ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.



12.08.2021

- அன்னைத்தமிழில் அர்ச்சனை மற்றும் வழிபாடு செய்ய ஏதுவாக 12 இறைவன் போற்றிப் பாடல் நூல்களை வெளியிட்டார்.

- சென்னை, கலைவாணர் அரங்கத்தில் சட்டமன்றப் பேரவைக் கூட்டம் நடைபெறவுள்ள அரங்கத்தினைப் பார்வையிட்டார்.
- சென்னை, தலைமைச் செயலகத்தில், சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் நிறுவப்பட்டுள்ள அமேசான் நிறுவனத்தின் புதிய மற்றும் விரிவாக்கக் கிடங்கு மையங்களைக் காணொலிக்காட்சி வாயிலாகத் திறந்துவைத்தார்.

13.08.2021

- சென்னை, பெரியார் நகரில் ரூ.15.52 கோடி செலவில் மேம்படுத்தப்பட்ட அரசு புறநகர் மருத்துவமனையைத் திறந்துவைத்து, புதிதாக நிறுவப்பட்டுள்ள சி.டி.ஸ்கேன் கருவியைப் பார்வையிட்டார்.



14.08.2021

- சென்னை அருள்மிகு கபாலீஸ்வரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் நடைபெற்ற விழாவில், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற அரசாணையின்கீழ், பயிற்சிபெற்ற 24 அர்ச்சகர்களுக்கும் மற்றும் அர்ச்சகர்கள், பட்டாச்சார்யர்கள், ஓதுவார்கள், பூசாரிகள் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்குத் திருக்கோயில்களில் பணிபுரிய தேர்வுசெய்யப்பட்ட 172 நபர்களுக்கும் கருணை அடிப்படையில் 12 நபர்களுக்கும் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.



தமிழ்நாட்டில் முதல்முறையாக காகிதமில்லா நிதிநிலை அறிக்கை



- மாண்புமிகு நிதி அமைச்சர் வாசித்த நிதிநிலை அறிக்கை கணினித் திரையில் ஒளிர்ந்தது.
- மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் நிதிநிலை அறிக்கையைப் படிக்க மேசைக் கணினி வழங்கப்பட்டது.
- சுற்றுச்சூழலைப் பாதுகாக்க இது ஒரு முன்னோடித் திட்டம்

வேளாண்மைக்கென்று தனியாக ஒரு நிதிநிலை அறிக்கை



- சர்வதேச நிபுணர்களின் கருத்தைக் கேட்டு வேளாண்மை நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டில் விவசாயம் நடைபெறும் பரப்பளவு 11.07 இலட்சம் எக்டர் கூடுதலாக்கப்படும்.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு.ராம்நாத் கோவிந்த் அவர்கள் புகழாரம்





- நீண்ட காலம் தமிழ்நாட்டை ஆட்சி செய்து தனி முத்திரை பதித்தவர் கலைஞர் மு.கருணாநிதி.
- ஆளுகையில் கவனம் செலுத்தி ஏழைகளை மேம்படுத்துவதற்கும், சமூகத் தீமைகளை ஒழிப்பதற்கும், ஜனநாயகத்தின் வேர்களை ஊன்றி வளரச் செய்த பெருமை தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு உண்டு.
- தமிழ்நாட்டை யார் ஆட்சி செய்தாலும் மாநிலத்தின் நலன் என்ற கருத்தாக்கமே இந்தச் சட்டமன்றத்தில் ஆழமாக வேரூன்றியுள்ளது.
- பல்வேறு தலைவர்களின் படங்கள் இடம்பெற்றுள்ள இப்பேரவையில் தம்முடைய வாழ்நாள் முழுவதையும் மாநிலத்தின் நலனுக்காக அர்ப்பணித்த திரு.கருணாநிதியின் உருவப்படமும் இடம்பெறுவது சிறப்பாகும்.
- இராஜாஜிக்குப் பின் வந்தவர்களில் முத்தமிழறிஞர் கலைஞர் நீண்ட காலம் தமிழ்நாட்டை ஆட்சி செய்து ஒரு தனி முத்திரை பதித்துச் சென்றார்.
- தமிழ், இலக்கியம், சினிமா தவிர்த்து தமிழை செம்மொழியாக அங்கீகாரம் பெறச் செய்தவர் கலைஞர்.



தமிழைச் செம்மொழியாக அங்கீகாரம் பெறச் செய்தவர் "கலைஞர்"

தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழாவில் மாண்புமிகு இந்தியக் குடியரசுத்தலைவர் **திரு.ராம் நாத் கோவிந்த்** அவர்கள் ஆற்றிய உரையின் தமிழாக்கம் – 02.08.2021

தமிழக ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோஹித் அவர்களே, தமிழக முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களே துணை சபாநாயகர், திரு.கு.பிச்சாண்டி அவர்களே, தமிழக அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள், மதிப்பிற்குரிய விருந்தினர்கள் மற்றும் பெரியோர்களே, தாய்மார்களே வணக்கம்!

தமிழில் சில வார்த்தைகளுடன் எனது உரையைத் தொடங்க விரும்புகிறேன்.

இன்றைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வில் கலைஞர் திரு.மு.கருணாநிதி அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்ததில் மகிழ்ச்சியடைகிறேன். உண்மையில் இது ஒரு முக்கியத்துவம் மிக்க நாள்! முன்னர், மெட்ராஸ் சட்டமன்ற கவுன்சில் என்று பெயரிடப்பட்டிருந்த அவையின் நூற்றாண்டு விழாவை நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். ஆகஸ்ட் மாதம் என்பது நமது தேசிய நாட்காட்டியில் சிறந்ததொரு மாதமாகும். ஏனெனில், இது நமது சுதந்திர தினத்தின் ஆண்டு நிறைவையும் குறிக்கிறது. விடுதலைக்குப் பிறகான ஆண்டுகளில், தேசம் பல துறைகளில் பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளது. மக்களும் தலைவர்களும் இணைந்து மேற்கொண்ட பணிகளினால் இது சாத்தியமானது.

மெட்ராஸ் சட்டமன்ற கவுன்சிலின் வரலாறு, 1861ஆம் ஆண்டு காலத்தையது என்பதை நீங்கள்

அறிவீர்கள். ஆலோசனை அமைப்பாக அக்காலத்தில் உருவாக்கப்பட்ட இந்த அமைப்பு தான், 1921ஆம் ஆண்டில், சட்டத்தை இயற்றும் சட்டப்பேரவையாக உருவாக்கப்பட்டது. காலனித்துவ ஆட்சியின்கீழ், அத்தகைய அமைப்பு செயல்படுவதற்கு, பல வரையறைகளும், சவால்களும் நிச்சயம் இருந்தன. சாதி, சமூகம் மற்றும் பிற அம்சங்களின் அடிப்படையில் ஏராளமான தனித்தனி தொகுதிகள் இருந்தன. ஓரளவேயாக இருந்த போதிலும், அது ஒரு பொறுப்பான அரசாங்கத்தை நோக்கிய நகர்வாகும். பல நூற்றாண்டுகளுக்கு முன்பு நடைமுறையில் இருந்த ஜனநாயகம், அதன் நவீன வடிவத்தில், மீண்டும் திரும்பியது.

தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரப்பிரதேசம், தெலுங்கானா, ஒடிசா, லட்சத்தீவு ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய மெட்ராஸ் பிரசிடென்சியின் மக்களால் இந்தப் புதிய தொடக்கம் வரவேற்கப்பட்டது. விடுதலைப் போராட்ட இயக்கத்தால் வடிவமைக்கப்பட்ட இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்களின் கனவுகளும், விருப்பங்களும் புதிய சட்டமன்றம் மூலம் வெளிப்பட முடிந்தது. மக்கள் தங்கள் கனவுகளை நனவாக்கும் ஒரு தளமாக, ஆரம்பக் கட்டத்தில் மக்கள் வாக்குகளை வென்ற நீதிக்கட்சி இருந்தது.

சட்டமன்ற கவுன்சில், பின்வரவிருக்கும் காலத்திற்கான பல சட்டங்களை இயற்றியது. அதன் ஆரம்பக் காலகட்டங்களில் அவை பல மாற்றங்களைச் சந்தித்தன. ஜனநாயக உணர்வு மாநிலச் சட்டமன்றத்தின் வழிகாட்டும் ஒளிவிளக்காக உள்ளது. சமூகத்தின் நலிவுற்ற பிரிவினருக்கு அதிகாரம் அளிப்பதற்கும், ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கும் நாடு முழுவதும் பிரதிபலித்த பல முற்போக்குச் சட்டங்களின் நீரூற்றாக இந்தச் சட்டங்கள் இருந்தன என்று சொல்வது தவறல்ல. மெட்ராஸ் சட்டமன்றம், ஒரு முழுமையான பிரதிநிதித்துவ ஜனநாயக வடிவ ஆட்சியாளுமைக்கான விதைகளை விதைத்தது. நாட்டு விடுதலைக்குப் பிறகு இதற்கான பலன்கள் கிடைத்தன.

ஆளுகையில் கவனம் செலுத்தி ஏழைகளை மேம்படுத்துவதற்கும், சமூகத் தீமைகளை ஒழிப்பதற்கும், ஜனநாயகத்தின் வேர்களை ஊன்றி வளரச் செய்த பெருமை இந்தச் சட்டமன்றத்திற்கு உண்டு. வறுமைக் கோட்டில் வாழ்ந்த மக்களின் நலனை இலக்காகக் கொண்டு, இப்பகுதியில், அரசியலும் நிருவாகமும் நேர்மறையான, பகுத்தறிவு வாய்ந்த உள்ளடக்கம் கொண்டதாக உருவாயின. தேவதாசி முறையை ஒழித்தல், விதவை மறுமணம், பள்ளிகளில் மதிய உணவு, நிலமற்றவர்களுக்கு விவசாய நிலம் விநியோகம் ஆகியவை சமூகத்தை மாற்றியமைத்த சில புரட்சிகர எண்ணங்களாகும். இங்கு யார் ஆட்சி செய்தாலும் மாநிலத்தின் நலன் என்ற கருத்தாக்கமே இந்தச் சட்டமன்றத்தில் ஆழமாக வேரூன்றியுள்ளது. தமிழ்நாட்டு மக்களின் முற்போக்குச் சிந்தனையை எடுத்துக்காட்டுகின்ற வகையில், மிகச்சிறந்த தமிழ்க்கவிஞர் மகாகவி சுப்பிரமணிய பாரதியின் ஒரு சில வரிகளை இங்கே நான் மேற்கோள் காட்ட விரும்புகிறேன்:

மந்திரம் கற்போம் வினைத்தந்திரம் கற்போம்
வானை யளப்போம், கடல் மீனை யளப்போம்
சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்
சந்தித்தெரு பெருக்கும் சாத்திரம் கற்போம்

இதை இவ்வாறு விளக்கலாம்.

வேதம், அறிவியல் இரண்டையும் கற்றுக்கொள்வோம், நாம் வானத்தையும், பெருங்கடல்களையும் ஆராய்வோம், நிலவின் இயல்புகள் என்னவென்று நாம் தெரிந்து கொள்வோம், நமது தெருக்களைத் தூய்மையாக்குவது குறித்தும் அறிந்து கொள்வோம்.

மண்ணின் மிகச்சிறந்த தலைமைகளைச் சட்டமன்றத்தில் கௌரவிக்கும் பாரம்பரியம்

உள்ளது என்பதை அறிவது உண்மையில் மகிழ்ச்சியளிக்கிறது. திருவள்ளுவர், மகாத்மா காந்தி, சி.ராஜகோபாலாச்சாரி, சி.என்.அண்ணாதுரை, கே.காமராஜ், ஈ.வி.ராமசாமி, பி.ஆர்.அம்பேத்கர், யு.முத்துராமலிங்கத் தேவர், முஹம்மது இஸ்மாயில் சாஹிப், எம்.ஜி.ராமச்சந்திரன், ஜெ.ஜெயலலிதா, எஸ்.எஸ்.ராமசாமி படையாச்சி, வ.உ.சிதம்பரம் பிள்ளை, பி.சுப்பராயன் மற்றும் ஓமந்தூர் பி.ராமசாமி ரெட்டியார் போன்ற பல தலைவர்களின் படங்கள் இப்பேரவையில் ஏற்கனவே உள்ளன. இப்போது இந்தப் புகழ்பெற்ற மண்டபத்தில் தம்முடைய வாழ்நாள் முழுவதையும் மாநிலத்தின் மக்கள் நலனுக்காக அர்ப்பணித்த திரு. மு.கருணாநிதியின் உருவப்படமும் இருக்கும்.

நான் இங்கு வந்தபோது, காந்தியடிகளின் மனசாட்சிக் காவலராகத் திகழ்ந்தவரும், சுதந்திரப் போராட்ட வீரர்களில் சிறந்த தலைவருமான சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தேன். குடியரசுத் தலைவர் மாளிகையில் முதலில் இடம்பெற்ற இந்தியர் அவர். அவருடைய வருகை இந்த மதிப்பிற்குரிய அரங்கினையும் அலங்கரித்தது. அவர் சென்னை மாநிலத்தின் முதல் பிரதமர் அல்லது முதல்வர் ஆவார். அவருக்குப் பின் வந்தவர்களும், முன்மாதிரியாகத் திகழ்ந்த அரசியல் தலைவர்கள். இருப்பினும், ராஜாஜிக்கு பின்வந்தவர்களில், திரு கருணாநிதி அவர்கள் தான் நீண்ட காலம் ஆட்சி செய்தார், இதனால் தமிழ்நாட்டில் ஒரு தனி முத்திரை பதித்துச் சென்றார்.

இந்தியா, விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்தபோது, 'கலைஞர்' தனது இளமைப் பருவத்திலேயே, தனது அரசியல் வாழ்க்கையைத் தொடங்கினார், அவர் சமீபத்தில்தான் நம்மை விட்டுப் பிரிந்தார். உயர்ந்த இலட்சியங்களுடன் கூடிய சிறுவனாக இருந்தபோது, தாழ்த்தப்பட்டவர்களுக்காக ஏழை எளிய மக்களுக்காக அவர் பணியாற்றத் தொடங்கியபோது, நீண்டகாலமாக வெளிநாட்டு ஆதிக்கத்தின்கீழ் இருந்த இந்தியா, அந்நிய ஆட்சியாளர்களால் சுரண்டப்பட்டு வறுமையிலும் கல்வியறிவின்மையாலும், சிக்கலில் இருந்தது. அவர் தமது இறுதி மூச்சின் போது, இந்த மண்ணும் இதன் மக்களும் அனைத்துத் துறைகளிலும் வியக்கத்தக்க முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் அடைந்துள்ளதாகத் திருப்தி அடைந்திருக்க வேண்டும். தமது நீண்ட கால, ஆக்கபூர்வமான வாழ்க்கையில் தாம் விழித்திருக்கும் ஒவ்வொரு கணத்தையும் மாநில மக்களின் சேவைக்காகவும், தேசத்தின் சேவைக்காகவும் செலவிட்டோம் என்பதும் அவருக்கு திருப்தியளித்திருக்கும்.

தமிழ் இலக்கியம் மற்றும் சினிமாவுக்கு அவர் அளித்த பங்களிப்புகள் பற்றி நான் என்ன சொல்ல முடியும் ? எனக்குத் தெரிந்த விஷயம் என்னவென்றால், மொழி மீது ஆர்வம் கொண்ட அரசியல் தலைவர்கள் வெகு குறைவு. அவரைப் பொறுத்தவரை, அவரது தாய் மொழி வழிபாட்டுக்குரியது. தமிழ், நிச்சயமாக, மனிதகுலத்தின் மிகச்சிறந்த, மிகப் பழமையான மொழிகளுள் ஒன்றாகும். உலகம் முழுமையும் அதன் வளமான பாரம்பரியத்தில் பெருமை கொள்கிறது. ஆனால், அது செம்மொழியாக அதிகாரபூர்வ அங்கீகாரம் பெறுவதை உறுதி செய்தவர் கருணாநிதி. கலைஞர் தனிச்சிறப்பு வாய்ந்த ஒரு தலைவராகத் திகழ்ந்தார். நமது தேசிய இயக்கத்தின் தலைவர்களுடன் நமக்கு இருந்த கடைசி இணைப்புகளில் அவரும் ஒருவர்.

விடுதலை பெற்று 75ஆவது ஆண்டு நிறைவை நாடு கொண்டாடும் போது, இத்தகைய தலைவர்கள் குறித்தே எனது எண்ணங்கள் செல்கின்றன. நமது தேசிய இயக்கம் 1857 அல்லது அதற்கு முன்பே தொடங்கி 1947 வரை நடைபெற்றது. இந்தக் காலகட்டத்தில், தீவிரவாதிகளும், புரட்சியாளர்களும் இருந்தனர்.

சமாதானவாதிகளும், அரசியலமைப்புவாதிகளும் இருந்தனர். அவர்கள் வெவ்வேறு முறைகளைக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு வெவ்வேறு தொலைநோக்குப் பார்வைகள் இருந்தன. ஆனால், அவர்கள் தாய்நாட்டின் மீது கொண்ட மதிப்பிலும், மரியாதையிலும் ஒன்றுபட்டிருந்தனர். ஒவ்வொருவரும் அவரவர் வழியில், இந்தியத் தாய்த்திரு நாட்டிற்குச் சேவை செய்யப் பாடுபட்டனர். ஒரு ஆற்றில் வெவ்வேறு கிளை நதிகள் ஒன்றிணைவது போல, அவர்கள் அனைவரும் நாட்டு விடுதலைக்காக ஒன்றிணைந்தனர்.

அவர்கள் அனைவரும் காந்திஜியில் ஒரு சங்கமத்தைக் கண்டனர். மகாத்மா காந்தி நமது கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தில் சிறந்தவைகள் அனைத்தின் ஆளுமையாகவும் திகழ்ந்தார். அது மட்டுமல்லாமல், பல மேற்கத்திய சிந்தனையாளர்களின் கருத்துக்களையும் மேம்படுத்தினார். அவருடன் தேசபக்தர்கள் – வழக்கறிஞர்கள், அறிஞர்கள், சமூக சீர்திருத்தவாதிகள், மத, ஆன்மீகத் தலைவர்கள் மற்றும் பலர் இருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் ஈடு இணையற்றவர்கள். டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரைப் பற்றி சிந்தியுங்கள். எத்துணை உயர்ந்த மேதை!! எத்தகைய தொலைநோக்கு! ஆனால் வரலாற்றுப் புத்தகங்களில் எழுதப்பட்ட ஒவ்வொரு பெயருடனும், எண்ணற்ற மற்றவர்கள் பெயர்கள் பதிவு செய்யப்படவில்லை. அவர்கள் ஒரு சுதந்திர நாட்டில் வாழ்வதற்காகத் தங்கள் வசதிகளை, தொழில்களை, சில சமயங்களில் தங்கள் உயிரையே தியாகம் செய்தனர்.

அந்தச் சில பத்தாண்டுகள், பூமி இதுவரை கண்டிராத மிகச்சிறந்த தலைமுறைகளை உருவாக்கியது என்று நான் நம்புகிறேன். அவர்களுக்கு, இந்த நாடு எப்போதும் கடன்பட்டிருக்கும். அவர்களுக்கு, நாம் செலுத்தக் கூடிய ஒரே அஞ்சலி, அவர்களின் வாழ்க்கை மற்றும் அவர்களின் இலட்சியங்களால் தொடர்ந்து ஊக்கம் பெறுவதாகும். அவர்கள் நமக்கு விடுதலையைப் பரிசளித்தனர். ஆனால், அவர்கள் நமக்கு, பொறுப்பையும் கொடுத்தார்கள். அவர்களின் தொலைநோக்குப் பார்வை வடிவம் பெறுகிறது, ஆனால், அது ஒரு தொடர்ச்சியான செயல்முறை. அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் பங்கை ஆற்றியது போல், நாட்டைப் புதிய உயரத்திற்குக் கொண்டு செல்வதில் நாம் ஒவ்வொருவரும் நம் பங்கை ஆற்ற வேண்டும்.

நிகழ்காலத்தையும், எதிர்கால முன்னேற்றத்தையும் புரிந்துகொள்ள, கடந்த காலத்துடன் தொடர்ந்து ஈடுபடுமாறு நான் இளைஞர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மகாத்மா காந்தி, சுப்பிரமணிய பாரதி மற்றும் பிறரின் வாழ்க்கையில், உங்கள் மனதில் எழும் கேள்விகளுக்கான பதில்களைக் காண்பீர்கள். நமது சமீபத்திய வரலாற்றில் இளம் தலைமுறையினர் அதிக ஆர்வம் காட்டுவதை நான் காண்கிறேன். தெரிந்த மற்றும் தெரியாத விடுதலைப் போராட்ட வீரர்களுடன் தொடங்கிய பணிகள் தொடரும் என்ற நம்பிக்கையை அவர்கள் எனக்கு அளிக்கிறார்கள். இந்த நூற்றாண்டில் இந்தியா தனது ஞானத்தால் உலகிற்கு வழிகாட்டும்.

இந்த நன்னாளில் தமிழக மக்களை வாழ்த்துகிறேன். உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகள்.

நன்றி. ஜெய் ஹிந்த்!

❖ ❖ ❖



மக்களின் இதயங்களை வென்ற "மக்களின் முதல்வர் கலைஞர்"

தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் **திரு.பன்வாரிலால் புரோஹித்** அவர்கள் ஆற்றிய உரையின் தமிழாக்கம் – 02.08.2021

"தமிழ்நாடு சட்டமன்றத்தின் நூற்றாண்டு விழாவில் பங்கேற்று மாண்புமிகு தமிழகத்தின் முன்னாள் முதல்வர் டாக்டர் மு.கருணாநிதி அவர்களின் திருவுருவப்படத் திறப்புவிழாவில் கலந்துகொள்வதில் நான் மிகவும் மகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்கிறேன்".

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் நூற்றாண்டு விழாவினைச் சிறப்பிப்பதற்காகவும், தமிழ்நாட்டின் தவப்புதல்வரான டாக்டர் மு.கருணாநிதி அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்து வைப்பதற்காகவும், மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் இன்று வருகை புரிந்திருப்பதைக் கண்டு நாம் அனைவரும் பெருமிதம் கொள்கிறோம்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நூற்றாண்டு விழாவுடன் தொடர்புடைய மாண்புமிகு அவைத்தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், இம்மாபெரும் அவையின் உறுப்பினர்கள் அனைவருக்கும் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்நாளில், இப்பேரவையில் நிலையான தடம்பதித்துச் சென்ற அனைத்து ஆன்றோர்களையும், சான்றோர்களையும் உளப்பூர்வமாக வணங்குகிறேன். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் முதன்மையான மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சட்டங்களை இயற்றுவதற்கு அவர்களின் பேராற்வமும்

தொலைநோக்குச் சிந்தனையுமே அடிப்படைக் காரணங்களாய் அமைந்தன. இச்சட்டங்கள் அனைத்தும் தமிழ்நாட்டை வளமான மாநிலமாக உருவாக்குவதற்கு வழிகோலின.

எழுதப்பட்ட அரசமைப்பைக் கொண்ட மக்களாட்சி மலரும் நாடுகளில் இந்தியா உலகிலேயே மிகப்பெரிய நாடாகும். சட்டமியற்றுதல் என்பது பல்வேறு சட்டங்களால் செம்மைப்படுத்தப்படும் நிதானமான மற்றும் திடமாகப் பரிணமிக்கும் செயலாகும். முதன்முதலில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமியற்றுதல் குழுவானது, தொடக்கத்தில் மதராசு சட்டமன்ற மேலவை என்ற பெயரில் 1921ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வகையில், 2021ஆம் ஆண்டு நூற்றாண்டாகும். முதல் சட்டமியற்றுதல் குழுவானது தமிழ்நாட்டில், நலிவடைந்த பிரிவினர் மற்றும் பெண்களின் முன்னேற்றத்திற்காக அயராது பாடுபட்டது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையானது, திரு. பனகல் ராஜா, திரு. சி. ராஜகோபாலாச்சாரி, திரு. டி பிரகாசம், திரு. கே. காமராஜ், திரு. எம். பக்தவத்சலம், டாக்டர் சி.என் அண்ணாதுரை, டாக்டர் மு. கருணாநிதி, டாக்டர் எம்.ஜி. ராமச்சந்திரன், செல்வி டாக்டர் ஜெ. ஜெயலலிதா மற்றும் பல பெருந்தலைவர்களைக் கண்டுள்ளது.

நவீன இந்தியாவின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினரான டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்கள் 1927ஆம் ஆண்டு சென்னை சட்டமன்ற மேலவையில் இணைந்ததை நான் இங்கு நினைவுகூர விழைகிறேன். 1921ஆம் ஆண்டில் பெண்களுக்கான வாக்குரிமை தீர்மானம் கொண்டு வந்ததற்கு ஆதரவாக வாக்களிக்கப்பட்ட சட்டமன்ற மேலவைத் தொடங்கப்பட்டு 100ஆவது ஆண்டு நிறைவு அடைந்ததை இன்றைய நாளில் நாம் பெருமிதத்துடன் நினைவுகூருகிறோம்.

'அறிஞர் அண்ணா' என்று அனைவராலும் அறியப்பட்ட டாக்டர் சி.என். அண்ணாதுரை அவர்கள் ஊக்கமளிக்கும் எழுச்சிமிகு தலைவராகத் திகழ்ந்தார். அவருடைய சொற்பொழிவு ஆற்றல் மற்றும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்று முக்கியக் கொள்கைகள் குறித்த மதிப்பு, பாரெங்கும் பாராட்டைப் பெற்றது. தமிழக மக்களின் நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றும் வகையில், மெட்ராஸ் என்பதைத் தமிழ்நாடு எனப் பெயர் மாற்றம் செய்ததில் அறிஞர் அண்ணாதுரை அவர்கள் முக்கியப் பங்கு வகித்தார்.

இந்தச் சட்டமன்றத்தில் தங்கள் பணியின் மூலம் இந்தியாவில் வலுவான நாடாளுமன்றப் பாரம்பரியத்தையும், மக்களாட்சியின் மாண்பினையும் நிலைநிறுத்துவதற்குப் பங்காற்றியத் தலைவர்கள் மற்றும் பல சட்டமன்ற உறுப்பினர்களை தன்னகத்தே கொண்டதற்குத் தமிழ்நாடு உண்மையிலேயே பெருமை கொள்ளலாம்.

தமிழ்நாடு சட்டப் பேரவைக்கு ஒரு பெரிய வரலாறு உண்டு. நாட்டின் பழமையான மற்றும் தொடக்கத்தில் அமைந்த சட்டமன்றங்களில் ஒன்றாக இருப்பதால், பல முக்கியச் சட்டங்கள் இங்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அச்சட்டங்களில் சமூக நீதி, தீண்டாமை ஒழிப்பு, பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன், கல்வி, வறுமை ஒழிப்பு, மூன்றாம் பாலினத்தவர் உள்ளிட்ட விளிம்புநிலையிலுள்ள மக்களின் நலன் போன்ற முன்னோடித் திட்டங்களும் இதில் அடங்கும். இவற்றில் பல திட்டங்கள் நம் நாட்டின் கொள்கைகள் மற்றும் திட்டப்பணிகளுக்கு அடித்தளமாக அமைந்துள்ளன.

டாக்டர் மு.கருணாநிதியின் பெருமையை நான் சுருக்கமாகக் கூற விரும்புகிறேன். 'கலைஞர்' என்றும் 'முத்தமிழறிஞர்' என்றும் அழைக்கப்படும் கலைஞர் அவர்கள் தன்னுடைய பேச்சுத்திறமையால் மக்களை ஈர்த்தார். ஐந்து

முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்ததும், தனது அரசியல் வாழ்க்கையில் போட்டியிட்ட அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றி பெற்றதும் உண்மையில் ஒரு குறிப்பிடத்தக்கச் சாதனையாகும். அவர் தனது இளம் பருவமான 14ஆவது வயதிலேயே அரசியலில் நுழைந்து, பதின்மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1957ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரையில் அவர் போட்டியிட்ட அனைத்துத் தேர்தல்களிலும் அவர் வெற்றிவாகை சூடினார். அவருடைய அரசியல் மதிநுட்பத்திற்காகவும், சீரிய சிந்தனைத் திறனுக்காகவும் இந்தியாவிலுள்ள அனைத்து அரசியல் தலைவர்களால் அவர் போற்றப்படுகிறார். அவர் இறக்கும் வரை இந்தச் சபையின் உறுப்பினராக இருந்தார்.

ஒரு பிரதிநிதித்துவ மக்களாட்சியில், சட்டமன்றம் மக்களின் கண்கள், காதுகள் மற்றும் குரலாகச் செயல்படுகிறது என்று சிறந்த பாராளுமன்ற உறுப்பினரான ஜான் ஸ்டூவர்ட் மில் கூறினார். சட்டமன்றம் பொது விருப்பத்தைப் பிரதிபலிக்கிறது. சட்டமன்றம், கூட்டு முடிவெடுக்கும் முறையின்கீழ், செயல்படுகிறது. அலுவல் சார்ந்த சட்டத்தை உருவாக்கும் திறனுடன் கூடுதலாக, பெரும்பாலான சட்டமன்றங்கள் சிக்கலான பிரச்சினைகளை எளிதாக்குவதன் வாயிலாகவும், கொள்கை விருப்புரிமைகளை வரையறுப்பதன் வாயிலாகவும், கல்விப் பங்காற்றுகின்றன. இந்த பின்னணியில், பரந்த அறிவாற்றல் கொண்டு பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கிய மதிப்பிற்குரிய டாக்டர் மு.கருணாநிதி அவர்கள் ஆற்றிய பணிகளை நாம் பாராட்ட வேண்டும். நிருவாகப் பொருண்மைகளில் அவர் காட்டிய சுறுசுறுப்பும் அவரது அற்புதமான விவாதங்களும் இந்தச் சட்டமன்றத்தின் அவைக்குறிப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

டாக்டர் மு.கருணாநிதியின் புகழுக்கு ஆதாரமாகவும், அவரது பெருமைக்குக் காரணமாகவும் திகழ்ந்தது தமிழ் மொழியின் மீது அவருக்கு இருந்த அளப்பரியத் திறமையேயாகும். இது அவரது அரசியல் எதிரிகளையும் கூட வசப்படுத்தியது. மேலும், திருவள்ளுவரின்,

"சொலல்வல்லன் சோர்வுஇலன் அஞ்சான் அவனை இகல்வெல்லல் யார்க்கும் அரிது"

என்னும் குறளை நினைவுகூர்கிறேன்.

டாக்டர் மு.கருணாநிதி அவர்களின் அரசியல் நாகரீகத்தை ஒரு சம்பவத்தால் நன்கு உணர்த்த முடியும். 1972ஆம் ஆண்டில், திரு. இராஜாஜி உட்பட பல சுதந்திரப் போராட்ட வீரர்கள் அவர்களின் சேவைகளுக்காகவும், சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்றதற்காகவும் விருது பெறுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். திரு. இராஜாஜி அவர்களால் விழாவில் கலந்து கொள்ள முடியவில்லை அதனால் அப்போதைய முதல்வரான டாக்டர் மு.கருணாநிதி அவர்களிடம், அவர் சார்பாக அப்போதைய ஆளுநரிடமிருந்து விருதைப் பெற்று தன்னிடம் அனுப்புமாறு வேண்டினார். 02.10.1972 அன்று டாக்டர் மு.கருணாநிதி அவர்கள் திரு. இராஜாஜி சார்பில் விருதினைப் பெற்றுக்கொண்டு, 03.10.1972 அன்று அவர் திரு. இராஜாஜியின் இல்லத்திற்குச் சென்று, அவருக்கு மாலை அணிவித்து விருதினை வழங்கினார். இதை திரு. இராஜாஜி பெரிதும் பாராட்டினார். ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் நேரில் சென்று விருதை வழங்கும் முறைக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது.

டாக்டர் மு.கருணாநிதி அவர்கள் தமிழகத்தின் இலட்சக்கணக்கான மக்களின், குறிப்பாக ஏழை, எளிய மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் இதயங்களை வென்றார். அவர் 'மக்களின் முதல்வர்' என அன்புடன் அழைக்கப்பட்டார். பார்வை சரிசெய்யும் திட்டம், பிச்சைக்காரர்களுக்கான மறுவாழ்வுத் திட்டம், கையால் இழுக்கப்பட்ட ரிக்க்ஷாக்களுக்குப் பதிலாக சைக்கிள் ரிக்க்ஷா அறிமுகம் செய்தல்,

குடிசை மாற்று வாரியம் உருவாக்கம், மகளிருக்கு சம சொத்துரிமைக்கான சட்டம், திருமண உதவித் தொகை திட்டம், நிலமற்ற உழவர்களுக்குத் தரிசு நிலம் வழங்கும் திட்டம், உழவர்களுக்கு இலவச மின்சாரம், பல தொழிலாளர் நல வாரியங்கள் அமைத்தல், இலவச வண்ண தொலைக்காட்சிப் பெட்டிகள், சாதி பாகுபாட்டினை ஒழிப்பதற்காகச் சமத்துவபுரங்கள், ஏழை மக்களுக்கு எரிவாயு இணைப்பு, மானிய விலையில் அரிசி வழங்கும் திட்டம் போன்ற புதுமையான திட்டங்கள் ஏழை மக்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்கான அவரது எண்ணற்ற அர்ப்பணிப்புச் சேவையினைப் பறைசாற்றுகிறது.

டாக்டர் மு.கருணாநிதி அவர்கள், சற்றொப்ப எழுபது ஆண்டு கால அரசியல் வாழ்வில், நம் நாட்டின் அனைத்துக் குடியரசுத் தலைவர்களுடனும், அனைத்துப் பிரதமர்களுடனும், பல்வேறு மாநிலங்களின் முதல்வர்களுடனும், பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களுடனும் நெருக்கமாகப் பழகியுள்ளார். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவர் எப்பொழுதும் ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்தார்.

இரண்டு மாபெரும் தலைவர்களான மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்கும், டாக்டர் மு.கருணாநிதி அவர்களுக்கும் இடையே 06.11.2017 ஆம் நாளன்று நடைபெற்ற சந்திப்பை நான் நினைவு கூறக் கடமைப்பட்டுள்ளேன். நான் மாண்புமிகு பிரதமருடன் சென்று திரு. கருணாநிதியைச் சந்தித்தேன். அருமையான சந்திப்பாக அமைந்தது.

சட்டமன்ற உறுப்பினராக இருப்பது ஒரு காலத்தில் சிறப்புரிமையுடையதாகவும், மரியாதைக்குரியதாகவும் இருந்தது. இது சில உரிமைகளையும் பொறுப்புகளையும் வழங்குகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமே மக்களின் இறையாண்மை நமது சட்டமன்ற அமைப்புகளில் வெளிப்படுகிறது. மக்கள் உங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையும், பற்றுறுதியையும், நேர்மையுடனும், பொறுப்புடனும் நியாயப்படுத்தப்பட வேண்டும். மக்களின் பிரதிநிதிகளாக, மக்களாட்சியின் ஜோதியைப் பிரகாசமாக ஜொலிக்கவைக்கும் சவாலான பணி உங்கள் அனைவரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

புதிதாக அமைக்கப்பட்ட 16ஆவது சட்டமன்றத்தின் உறுப்பினர்கள், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்திருக்கலாம். மேலும், மாறுபட்ட அரசியல் சித்தாந்தங்களைக் கொண்ட பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களாக இருக்கலாம். இந்த நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தில், மக்களுக்குச் சேவை செய்வதற்கும் மாநிலத்தின் முன்னேற்றத்திற்கும் ஒரு பொதுவான குறிக்கோளுடன் இணைந்து பாடுபடுமாறு நான் உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நூற்றாண்டு விழா சிறப்பாக அமைவதற்குக் காரணமாக அமைந்த மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை சபாநாயகர் திரு. எம். அப்பாவு அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும், இந்த அவையின் உறுப்பினர்கள் மற்றும் அனைவருக்கும் நான் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். சமூக மற்றும் பொருளாதார நீதிக்கு அளப்பரிய அர்ப்பணிப்புடன் பணியாற்றிய உங்களது முன்னோர்களைப் போன்று நீங்கள் அனைவரும் இந்த அவையின் மாண்பினை வளப்படுத்த அயராது செயல்படுவீர்கள் என்பதில் நான் உறுதியாக நம்பிக்கை கொண்டுள்ளேன். இந்தச் சட்டமன்றம் இனி வரும்காலத்திலும் நம் தேசத்திற்கு முன்னோடியாகத் திகழட்டும்.''

தமிழ்நாட்டின் முதலமைச்சராக மகிழ்கிறேன்! கலைஞரின் மகனாக நெகிழ்கிறேன்!!



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள்
தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழா மற்றும்
முன்னாள் முதலமைச்சர்
முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின்
திருவுருவப் படத்திறப்பு விழாவில்
ஆற்றிய உரை – 02.08.2021.

தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழா – கோடிக்கணக்கான தமிழ் மக்களின் நெஞ்சங்களில் வாழ்ந்துகொண்டிருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திறப்பு விழா – ஆகிய விழாக்களுக்குத் தலைமை விருந்தினராக வருகை புரிந்து விழாப் பேருரை ஆற்றவிருக்கின்ற,

மாண்புமிகு குடியரசுத் தலைவர் திரு. ராம் நாத் கோவிந்த் அவர்களே, விழாவுக்குத் தலைமை வகித்துத் தலைமையுரை ஆற்றவிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித் அவர்களே, சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதியரசர் மாண்புமிகு திரு. சஞ்சிப் பானர்ஜி அவர்களே, தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று உரையாற்றிய மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. மு. அப்பாவு அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, நன்றியுரை ஆற்றவிருக்கின்ற மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் திரு. கு. பிச்சாண்டி அவர்களே, தலைமைச் செயலாளர் அவர்களே, மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, சிறப்பு அழைப்பாளர்களே, பல்வேறு கட்சிகளைச் சார்ந்த தலைவர்களே, முக்கியப் பிரமுகர்களே, சட்டமன்றப் பேரவைச் செயலாளர் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்களே,

அரசு ஊழியர்களே, பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த வணக்கத்தை முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க நாளாக இந்த ஆகஸ்ட் 2ஆம் நாள் இனி வரும் காலங்களில் சிறப்புப் பெறவிருக்கிறது என்பதை நான் பெருமிதத்துடன் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டின் வரலாற்றில் மட்டுமல்ல – இந்திய வரலாற்றிலும் மிக முக்கியப் பங்கு வகிக்கும் புனித ஜார்ஜ் கோட்டைக்கு நம்முடைய குடியரசுத் தலைவர் அவர்கள் இன்றைக்கு வருகை புரிந்திருக்கிறார்கள்.

நம்முடைய குடியரசுத் தலைவர் அவர்களைப் பொறுத்தவரையில், பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களின் நலனை முன்னிறுத்தி, வாதாடுவதில், போராடுவதில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்; இந்திய ஆட்சிப் பணி கிடைத்தும், அதனை ஏற்காமல், வழக்கறிஞராகப் பணியாற்றியவர். சமூகநீதியைத் தனது வாழ்வின் இலக்காகக் கொண்டவர். இத்தனை பெருமைகளுக்குரிய அவர், இன்றைக்கு நம்முடைய தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு வருகை தந்திருப்பது, நாமெல்லாம் பெருமைப்படத்தக்க ஒன்றாகும்.

பழமையும் வரலாற்றுச் சிறப்பும் கொண்ட இந்தச் சட்டமன்றம், கடந்த ஒரு நூற்றாண்டில் பல புதுமையான சட்டங்களை, முன்னோடித் திட்டங்களை உருவாக்கி, சமதர்ம சமூகத்தைப் படைத்திட வழிவகுத்துக் கொடுத்திருக்கிறது.

1919ஆம் ஆண்டில் 'மாண்டேகு – செம்ஸ்போர்டு' சீர்திருத்தங்களின் அடிப்படையில் இயற்றப்பட்ட இந்திய அரசுச் சட்டத்தின் மூலம்தான் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அந்நாளைய மாகாண சட்டமன்றங்களில் முதன்முதலில் இடம்பெறத் தொடங்கினர். அச்சட்டமே பின்னர் மாகாணங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் உருவாவதற்கு வழிகோலியது. அந்தச் சட்டத்தின்படி, சென்னை மாகாண சட்டமன்றத்துக்கு 1920ஆம் ஆண்டு முதன்முதலாகத் தேர்தல் நடந்தது. அந்தத் தேர்தலில் திராவிட இயக்கத்தின் தலைமகனான நீதிக்கட்சி வெற்றி பெற்று ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தது.

1921ஆம் ஆண்டு கன்னாட் கோமகன் அவர்களால் முதல் மாகாண சுயாட்சி சட்டமன்றம் தொடங்கி வைக்கப்பட்டதன் பவளவிழா நிகழ்ச்சியும், அதேபோல 1935ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின்கீழ், முதன்முதலாக 1937ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் ஏற்படுத்தப்பட்ட சென்னை சட்டமன்றப் பேரவையின் வைரவிழா நிகழ்ச்சியும், 1997ஆம் ஆண்டு அப்போதைய முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசால் சிறப்புடன் கொண்டாடப்பட்டதை, நூற்றாண்டு விழா கொண்டாடுகின்ற இந்த வேளையில் நான் நினைவுகூர விரும்புகிறேன்.

அதே வேளையில், இந்தப் பெருமைமிகு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஒரு சில சட்டங்களை எடுத்துச் சொல்லவும் நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலேயேமகளிருக்கு வாக்குரிமை அளிக்கும் சட்டத்தை முதன்முதலாக நிறைவேற்றிய பெருமை சென்னை மாகாணச் சட்டமன்றத்திற்கு உண்டு. அதோடு, தேவதாசி ஒழிப்புச் சட்டம், மகளிருக்கு உள்ளாட்சிப் பதவிகளில் உரிய இட ஒதுக்கீடு, பெண் குழந்தைகளைப் பாதுகாக்கச் சிறப்புத் திட்டம் என மகளிர் நலன் காப்பதில் நாட்டிற்கே முன்னோடித் திட்டங்களை உருவாக்கித் தந்த பெருமை கொண்டது.

அதுமட்டுமல்ல – பேரறிஞர் அண்ணா அவர்கள் சென்னை மாநிலத்திற்கு "தமிழ்நாடு" எனப் பெயர் சூட்டி வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த



தனித் தீர்மானம் நிறைவேற்றியது; சுயமரியாதை மற்றும் சீர்திருத்தத் திருமணத்தைச் செல்லுபடியாக்கிடச் சட்டம் வகுத்தது; நிலச் சீர்திருத்தச் சட்டம் உருவாக்கியது; மே தினத்தை அரசு விடுமுறை ஆக்கிட வழிவகுத்தது; மாநில சுயாட்சிக்கான தீர்மானம் நிறைவேற்றியது; பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை வழங்கிட சட்டம் கண்டது; டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் அமைத்திட சட்டம் நிறைவேற்றியது; தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நிறைவேற்றியது –

எனப் பார் போற்றும் பல்வேறு சட்டங்களை, தீர்மானங்களை நிறைவேற்றிய பெருமை இந்தச் சட்டமன்றத்திற்கு உண்டு. சீர்மிகு இந்தச் சட்டமன்றத்தின் நூற்றாண்டு விழாவில் இன்றைக்கு நாமெல்லாம் பங்கேற்றுள்ளோம் என்பதே நாம் எண்ணிப் பெருமிதம் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கை நிலைநாட்டப்பட்ட மாபெரும் வளாகம் இது. அரசு முத்திரையில் ‘‘வாய்மையே வெல்லும்’’ எனத் தமிழ்மொழி அரியணையில் அமர்ந்து அலங்கரிப்பதையும் கண்டு மகிழ்கிறோம் நாம். மாற்றுத்திறனாளிகள், திருநங்கையர், ஏழை எளியவர் என விளிம்பு நிலை மக்களின் நலன் காக்க இந்தச் சட்டமன்றம் தொடர்ந்து செயலாற்றி வருகின்றது.

நூற்றாண்டு விழாக் கொண்டாடும் இந்தச் சட்டமன்றத்தில் அரை நூற்றாண்டுக்கும் மேலாகத் தனது ஜனநாயகக் கடமையைச் செம்மையாக நிறைவேற்றிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை நினைவுகூர்ந்து, அவரது திருவுருவப் படத்தைத் திறந்து வைத்திருப்பது அனைத்திற்கும் முத்தாய்ப்பானதாகும்.

1957ஆம் ஆண்டு இந்த மன்றத்திற்கு முதன்முதலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, தனது கன்னிப்பேச்சில் நங்கவரம் உழவர்கள் பிரச்சினை குறித்துப் பேசி, அனைவரது கவனத்தையும் ஈர்த்து முத்திரைப் பதித்தவர் கலைஞர் அவர்கள். முதலமைச்சராக, எதிர்க்கட்சித் தலைவராக, அமைச்சராக, உறுப்பினராகப் பல்வேறு பொறுப்புகளில் மக்கள் பணியாற்றி, பலரது பாராட்டுகளையும், அன்பையும் பெற்றவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

சமூகநீதிக்கு அடித்தளம் அமைத்த மண்டல் ஆணைய அறிக்கையைச் செயல்படுத்தத் தீர்மானம், தமிழ்நாட்டின் காவிரி நதிநீர் உரிமையை நிலைநாட்டக் காவிரி நடுவர் மன்றத்தை அமைக்கக் கோரும் தீர்மானம், தந்தை பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்ளை நீக்கிட, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற சட்டம், மாணவர்கள் உயர்கல்வி பெறுவதிலிருந்த இடர்களை நீக்க நுழைவுத் தேர்வை ஒழிக்கும் சட்டம் போன்ற பல்வேறு புரட்சிகர – சீர்திருத்தத் தீர்மானங்களையும், சட்டங்களையும் இயற்றி, தமிழர்களின் வாழ்வில் ஒளியேற்றிய தலைவர் கலைஞர் அவர்களை, அவரது 50 ஆண்டுக்கால சட்டமன்றப் பணிகளைப் பாராட்டி நடைபெற்ற பொன்விழாவில் பங்கேற்றுச் சிறப்புரை ஆற்றிய பொதுவுடைமைப் போராளியும், முன்னாள் மக்களவைத் தலைவருமான திரு. சோம்நாத் சாட்டர்ஜி அவர்கள், "கொள்கைகளுக்காகவும், இலட்சியங்களுக்காகவும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு, அதற்குத் தீங்கு வரும்போது எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராக இருந்தவர் கலைஞர்" –

என்று பாராட்டிப் பேசியதை நினைத்துப் பார்க்கும்போது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்தியத் துணைக் கண்டத்தில் எத்தகையதொரு மாபெரும் தலைவராக விளங்கினார் என்பது தெள்ளத் தெளிவாக விளங்கும்.

'உடன்பிறப்பே! உன் இயல்பு என்மீது அன்பைப் பொழிவது!

என் இயல்பு உன் அன்புக்குக் கட்டுப்படுவது!

நம் இயல்பு கழகத்தைக் கட்டிக் காப்பது!'

– என்று தனது காந்தக் குரலால் தமிழ்நாட்டு மக்களைக் கட்டிப்போட்டு வைத்திருந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

அவரது திருவுருவப் படத்தைப் பார்க்கும்போது – சர் பிட்டி தியாகராயர் – டி.எம். நாயர் – டாக்டர் நடேசனார் தொடங்கி இனமான பேராசிரியர் வரையிலான பல மாபெரும் தலைவர்களின் முகங்களை நான் காண்கிறேன்.

முன்னாள் முதலமைச்சரான அவரது திருவுருவப் படத்தைப் பார்க்கும்போது, இன்றும் நம் முன்னால் இருந்து வழிநடத்தும் ஒரு முதலமைச்சராக அவரைக் காண்கிறேன்.

இந்தியாவின் முதல் குடிமகனான குடியரசுத் தலைவர் அவர்கள், தமிழன்னையின் தலைமகனான கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்ததை எண்ணி, தமிழ்நாட்டின் முதலமைச்சராக மகிழ்கிறேன் – கலைஞரின் மகனாக நெகிழ்கிறேன்.

I take this opportunity to thank our Honourable President for gracing this house with his presence and making this historic event more special.

I also like to express my sincere gratitude to our Honourable Governor of Tamil Nadu for presiding over.

ஜனநாயக மாண்பைக் காக்கும் தமிழ்நாடு சட்டமன்றம் இன்னும் பல நூற்றாண்டு விழாக்களைக் கண்டு, அடித்தட்டு மக்களின் வாழ்வை மேம்படுத்தும் வகையில் பல்வேறு சட்டங்களை இயற்ற வேண்டும் என வாழ்த்துகிறேன்.

நன்றி! வணக்கம்!

❖ ❖ ❖



அரசின் பொருளாதாரமும், தனிமனிதர்களின் பொருளாதாரமும் தன்னிறைவு பெற்றதாக மாற வேண்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
சுதந்திர தினத் திருநாளில் ஆற்றிய உரை 15.08.2021

தாயின் மணிக்கொடி பாரீர் – அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்!
ஓங்கி வளர்ந்ததோர் கம்பம் – அதன்
உச்சியின் மேல் வந்தே மாதரம் என்றே
பாங்கின் எழுதித் திகழும் – செய்ய
பட்டொளி வீசிப் பறந்தது பாரீர்!
கம்பத்தின் கீழ் நிற்றல் காணீர் – எங்கும்
காணரும் வீரர் பெருந்திருக் கூட்டம்!
நம்பற்குரியர் அவ்வீரர் – தங்கள்
நல்லுயிர் ஈந்தும் கொடியினைக் காப்பர்!





நானூறு ஆண்டுகள் பழமை கொண்ட இந்தக் கோட்டையில் இந்திய நாட்டின் மூவண்ணக் கொடியை ஏற்றி வைக்கத் தங்களது உயிரையும் இரத்தத்தையும், வாழ்க்கையையும், செயல்பாட்டையும் வழங்கிய இந்த நாட்டின் தியாகிகள் அனைவருக்கும் நான் எனது வீர வணக்கத்தைச் செலுத்துகிறேன்!

இந்த மாட்சிமை பொருந்திய கோட்டையில் விண்முட்ட அமைந்துள்ள கம்பத்தில் கொடியேற்றும் வாய்ப்பினை எனக்கு வழங்கிய தமிழ்நாட்டு மக்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அவர்களே! நீதியரசர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு அதிகாரிகளே, காவல்துறைத் தலைவர் உள்ளிட்ட காவல் அதிகாரிகளே, சிறப்பு விருந்தினர்களே, சுதந்திரப் போராட்டத் தியாகிகளே! அவர்களது குடும்பத்தினரே, மாணவச் செல்வங்களே! வணக்கம்!

இந்தியா தனது 75ஆவது சுதந்திர நாளைக் கொண்டாடும் மகத்தான இப்பொழுதில், கோட்டைக் கொத்தளத்தில் கொடியேற்றும் மாபெரும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததை நினைத்து மகிழ்கிறேன். சுதந்திர நாளன்று யார் முதலமைச்சராக இருக்கிறார்களோ, அவர்கள்தான் கொடியேற்ற வேண்டும் என்ற சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்தவர்தான் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

ஆகஸ்ட்–15, சுதந்திர நாளன்று முதலமைச்சரும், ஜனவரி–26 குடியரசு நாளன்று ஆளுநரும் கொடியேற்றலாம் என்ற ஆலோசனையை அன்றைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு எடுத்துச் சொல்லி அதனை ஏற்றுக்கொள்ள வைத்தவர் நம்முடைய தலைவர் கலைஞர்.

15.08.1974 அன்று முதன்முதலாக இந்தக் கோட்டையில் ஒரு முதலமைச்சராகக் கொடியேற்றினார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். அதன்பிறகு எத்தனையோ முதலமைச்சர்கள் வந்தாலும், அவர்களுக்கும் கொடியேற்றும் வாய்ப்பைப் பெற்றுத் தந்தவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். தமிழ்நாட்டு முதலமைச்சர்களுக்கு மட்டுமல்ல, இந்தியாவின் அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கும் அந்த உரிமையைப் பெற்றுக் கொடுத்த மாபெரும் சுதந்திரச் சிந்தனையாளர்தான் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். அவரை வணங்கி எனது உரையைத் தொடங்குகிறேன்.

இன்று, இந்தியச் சுதந்திரத்தின் 75ஆவது ஆண்டு விழாவை நாம் கொண்டாடிக் கொண்டு இருக்கிறோம். இது மட்டுமல்ல, இன்னும் ஏராளமான பெருமைகள் இந்த ஆண்டுக்கு உண்டு. தமிழ்நாடு சட்டமன்றத்தின் நூற்றாண்டு விழாவினை மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களை அழைத்துச் சில நாட்களுக்கு முன்னால் நடத்தினோம். திராவிட இயக்கத்தின் ஆணிவேராகத் திகழ்ந்த நீதிக்கட்சி ஆட்சிக்கு வந்ததன் நூற்றாண்டு விழாவும் இந்த ஆண்டுதான். தென்னாப்பிரிக்காவில் இருந்து திரும்பிய மகாத்மா காந்தி அவர்கள், மதுரைக்கு வருகை தந்தபோது ஏழைத் தமிழ் மக்களைப் பார்த்துத் தனது உயர்ரக ஆடையைக் களைந்து அரையாடையை

உடுத்தத் தொடங்கியதன் நூற்றாண்டும் இந்த ஆண்டுதான். செக்கிழுத்த செம்மல், கப்பலோட்டிய தமிழன் என்றெல்லாம் போற்றப்படும் வ.உ.சிதம்பரனார் அவர்களுக்கு 150ஆவது பிறந்தநாள் கொண்டாட இருப்பதும் இந்த ஆண்டுதான். சுதந்திரம் அடைவதற்கு முன்னதாகவே, ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று பாடிய மகாகவி சுப்பிரமணிய பாரதி மறைந்து 100 ஆண்டுகள் ஆகிறது இந்த ஆண்டோடு. இப்படி, எவ்வளவோ வரலாற்றுப் புகழ் பெற்ற ஆண்டாக இந்த 2021 அமைந்துள்ளது.

தனிப்பட்ட முறையில் எனக்கு ஏற்படும் பெருமிதம் என்னவென்றால், நமது அரசு ஆறாவது முறையாக ஆட்சிப்பொறுப்பில் அமர்ந்து இருக்கிறது. எனது பொது வாழ்க்கையில் அரை நூற்றாண்டு காலம் உழைத்த நான், தமிழ்நாட்டு மக்களால் முதலமைச்சராக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளேன் என்ற மகிழ்ச்சியுடன் இந்த விழாவில் நான் கலந்து கொண்டிருக்கிறேன்.

75ஆவது சுதந்திர நாளை நினைவுகூரும் வகையில் மிகப்பெரிய தூணை இன்று உருவாக்கி இருக்கிறோம். அது வெறும் கல்லாலும் சிமெண்டாலும் செங்கல்லாலும் கட்டப்பட்டது அல்ல. நம்முடைய விடுதலைப் போராட்ட வீரர்களின் இரத்தத்தால், எலும்பால், சதையால் உருவாக்கப்பட்டதுதான் அந்தத் தூண். சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் அதற்கு 150 ஆண்டுகளுக்கு முன்னதாகவே விடுதலைக்காகப் போராடிய மண்தான் நம்முடைய தமிழ் மண்.

பூலித்தேவர், வேலுநாச்சியார், வீரபாண்டிய கட்டபொம்மன், தளபதி சுந்தரலிங்கம், ஊமைத்துரை, தீரன் சின்னமலை, சின்ன மருது, பெரிய மருது, வ.உ.சி., மகாகவி பாரதி, சுப்பிரமணிய சிவா, டி.எஸ்.எஸ். ராஜன், தில்லையாடி வள்ளியம்மை, தந்தை பெரியார், திரு. வி.க., நாமக்கல் ராமலிங்கம், ம.வெ.சிங்காரவேலர், பாரதிதாசன், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், திருப்பூர் குமரன், ராஜாஜி, காமராசர், ஏ.எம். ஈஸ்வரன், ஓமந்தூர் ராமசாமி, ஜீவா, கேப்டன் லட்சுமி, ம.பொ. சிவஞானம், கே.பி. சுந்தராம்பாள் இத்தகைய தமிழ்நாட்டுத் தியாகிகளின் மூச்சுக்காற்றைக் கொண்டு கட்டப்பட்டதுதான் இந்த நினைவுத் தூண்.

இந்திய விடுதலைப் போராட்டத்துக்குத் தமிழ்நாடு அளித்த பங்களிப்பு குறித்த முழுமையான ஆவணம் ஒன்றைத் தயாரித்துத் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிடும் முயற்சியைத் தமிழ்நாடு அரசு உறுதியாகச் செய்யும். நான் சொன்ன தியாகிகள், தமிழ்நாட்டுத் தியாகிகள் மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்தியாவின் தியாகிகள். விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டு, நமது நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட தியாகிகளுக்கும், அவர்தம் குடும்பத்தினருக்கும் உதவிகள் வழங்குவதில் தமிழ்நாடு அரசு எப்பொழுதும் முன்னுரிமை அளித்து வருகிறது. அந்த வகையில், மாநில அரசால் விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகை 17 ஆயிரம் ரூபாயிலிருந்து 18 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும். குடும்ப ஓய்வூதியத் தொகை 8,500 ரூபாயிலிருந்து 9 ஆயிரம் ரூபாய் ஆகவும் உயர்த்தப்படும் என்பதை இந்த வேளையில் பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டு விடுதலைத் தியாகிகளை நினைவு கூர்வதில் நமது அரசு எப்போதும் தவறியது இல்லை. சீன நாட்டால் இந்தியாவுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டபோது 1962ஆம் ஆண்டு, இந்திய நாட்டின் பாதுகாப்பே முக்கியம் என்று அறிவித்து நிதியைத் திரட்டிக் கொடுத்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

1971ஆம் ஆண்டு இந்தியாவைப் பாகிஸ்தான் அச்சுறுத்தியபோது, தமிழ்நாடு சட்டமன்றத்தில் பாகிஸ்தான் படையெடுப்புக் கண்டனத் தீர்மானம்





போட்டவர் முதல்வர் கலைஞர் அவர்கள்! அதோடு நில்லாது அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களிடம் நாட்டுப் பாதுகாப்புக்காக ஆறுகோடி ரூபாய் நிதி வழங்கியவர் முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள்.

அப்போது அனைத்து மாநிலங்களும் வழங்கிய தொகை மொத்தம் 25 கோடி ரூபாய். அதில், 6 கோடி ரூபாயை வழங்கியது திமுக அரசு. அந்தப் போரில் வீரமரணம் அடைந்த ராணுவ வீரர்களுக்கு நிதியும் நிலமும் வழங்கிய அரசு கலைஞரின் அரசு.

1999ஆம் ஆண்டு கார்கில் போரின் போது அன்றைய பிரதமர் வாஜ்பாய் அவர்களிடம் மூன்று தவணைகளாக மொத்தம் 50 கோடி ரூபாய் வழங்கிய அரசு முதல்வர் கலைஞரின் அரசு.

பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மனுக்குக் கோட்டை, பாரதியின் இல்லம் அரசு இல்லம் ஆனது, காமராசர் மணிமண்டபம், இராஜாஜி நினைவாலயம், தில்லையாடி வள்ளியம்மாள் மணிமண்டபம், வ.உ.சி. இழுத்த செக்கு நினைவுச் சின்னம் ஆனது.

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு இலவசப் பேருந்துப் பயணம், தியாகிகள் மணிமண்டபம், சுதந்திரப் பொன்விழா நினைவுச் சின்னம், பூலித்தேவன் நினைவு மண்டபம், தியாகி விஸ்வநாத தாஸ் வாழ்ந்த இல்லம் புதுப்பிப்பு, மாவீரன் சுந்தரலிங்கம் வாரிசுகளுக்கு வீடு, நேதாஜிக்குச் சிலை, கக்கனுக்குச் சிலை, சிப்பாய்க் கலகத்துக்கு நினைவுத்தூண். இப்படி நாட்டுக்காக உழைத்த தியாகிகளை நமது அரசு எப்பொழுதும் போற்றி வருகிறது.

அந்த வரிசையில் தியாகத்தின் திருவுருவான வ.உ.சி. அவர்களின் 150ஆவது பிறந்தநாளை அரசு சார்பில் எழுச்சியோடும், உணர்ச்சியோடும் கொண்டாடத் திட்டமிட்டுள்ளோம். வெள்ளையருக்கு எதிராகக் கப்பல் விட்டவர் வ.உ.சிதம்பரனார் அவர்கள். சுதேசி என்பது ஏட்டளவில் மட்டுமல்ல, நம்முடைய சிந்தனையாக, செயலாக மாற வேண்டும் என்று நினைத்தவர் வ.உ.சி. அவர்கள். அரசியல் விடுதலை மட்டும் போதாது, பொருளாதார விடுதலையும் வேண்டும் என்று நினைத்தவர். அனைத்து விதத்திலும் தன்னிறைவு பெற்ற நாடாக நாம் மாற வேண்டும் என்று வ.உ.சி. அவர்கள் கனவு கண்டார்கள்.

அத்தகைய கனவைக் கொண்ட அரசாக நமது அரசு செயல்பட்டு வருகிறது. 'எல்லார்க்கும் எல்லாம் என்ற திசை நோக்கிச் செல்லட்டும் இந்த வையம்' என்பதைப் போன்ற பொற்காலத்தை உருவாக்க உறுதி கொண்டுள்ளது இந்த அரசு.

கொரோனா என்ற பெருந்தொற்றுக் காலமானது நமக்கு ஏராளமான படிப்பினைகளைக் கொடுத்திருக்கிறது. மருத்துவ நெருக்கடி, மனநல நெருக்கடி, பொருளாதார நெருக்கடி, சூழல் நெருக்கடி எனப் பல்வேறு நெருக்கடிகளுக்கு இடையில் மக்களைக் கொண்டுபோய் நிறுத்திவிட்டது கொரோனா. இதில் இருந்து மீட்பதற்கு அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. இந்த முயற்சிகளுக்கு அடித்தளமான மருத்துவர்கள், செவிலியர்கள், முன்களப் பணியாளர்கள், அரசின் நிருவாகத்தின் அனைத்து அலுவலர்கள் அனைவரையும் இந்தநாளில்பாராட்டக்கடமைப்பட்டுள்ளேன்.இந்தளவுக்கு மக்கள் மீண்டு வர உங்களது அர்ப்பணிப்புதான் காரணம்.

தமிழ்நாடு முதலமைச்சராக நான் பொறுப்பேற்றதிலிருந்து இன்று 101ஆவது நாள். தமிழ்நாடு அரசின் நிதி நிலை தொடர்பான வெள்ளை அறிக்கையையும், 2021–2022ஆம் ஆண்டுக்கான தமிழக நிதி நிலை அறிக்கையும் தாக்கல் செய்த நிலையில், தமிழ்நாட்டின் நிதி நிலையைத் தமிழக மக்கள் நன்கு அறிந்திருக்கக் கூடும். இத்தகைய நிதிச் சுமையோடு முதலமைச்சராக முதன் முறையாகப் பொறுப்பேற்ற இந்த அரசு, கொரோனா என்கிற கொடிய நோய்த்தொற்றை மேலாண்மை செய்து மக்களைக் காப்பாற்ற வேண்டிய சூழ்நிலையில், பல்வேறு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தி, அதில் வெற்றியும் கண்டிருக்கிறது.

கொரோனாவாலும், ஊரடங்காலும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் 4 ஆயிரம் ரூபாய் இரு தவணைகளில் வழங்கப்பட்டது, 14 அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய மளிகைத் தொகுப்பு வழங்கப்பட்டது. கொள்முதல் விலையைக்

குறைக்காமல், ஆவின் பாலின் விற்பனை விலை லிட்டருக்கு மூன்று ரூபாய் குறைப்பு. பெட்ரோல் விலை மூன்று ரூபாய் குறைப்பு. மகளிர், திருநங்கையர், மாற்றுத்திறனாளிகளுக்கு நகரப் பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணம். தேர்தல் பரப்புரையின்போது பெறப்பட்ட மனுக்களுக்கு உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறை மூலமாகத் தீர்வு காணப்பட்டுள்ளது. திருக்கோயில்களில் அன்னைத் தமிழில் அர்ச்சனை. அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக நியமனம்.

தமிழ்நாட்டுக்கும் தமிழினத்தின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றியவர்களைப் பெருமைப்படுத்த 'தகைசால் தமிழர்' என்ற பெயரில் புதிய விருது உருவாக்கப்பட்டு, இளம் வயது முதல் தற்போது வரை பொதுவாழ்வில் ஈடுபட்டுப் பல்வேறு தியாகங்களைச் செய்த மாபெரும் பொதுவுடைமைப் போராளியும், முதுபெரும் தலைவருமான திரு. சங்கரய்யா அவர்களுக்கு இந்த ஆண்டு வழங்கப்பட்டு இருக்கிறது.

போதிய திரவ ஆக்சிஜன், ஆக்சிஜன் படுக்கைகளைக் குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்து காட்டியிருக்கிறோம். 3 கோடி மக்களுக்குக் கொரோனா தடுப்பூசி செலுத்தியிருக்கிறோம். தடுப்பூசி வீணடிக்கப்பட்ட நிலையை மாற்றிக் கூடுதல் தடுப்பூசிகள் செலுத்தி இந்தியாவுக்கே முன்மாதிரி மாநிலமாகத் தமிழ்நாட்டை மாற்றியுள்ளோம்.

உலகத்தரத்தில் புதிய பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கிண்டி கிங் நோய்த்தடுப்பு வளாகத்தில் 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ளது.

தொற்றா நோய்களுக்கான பரிசோதனைகள், சிகிச்சைகள், மருந்துகள், இயன்முறைச் சிகிச்சை உள்ளிட்ட மருத்துவச் சேவைகளை நோயாளிகளின் வீடுகளுக்கே சென்று வழங்கும் முன்னோடித் திட்டமான "மக்களைத் தேடி மருத்துவம்" தொடங்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைக் கூட்டமாக இருந்தாலும், அரசுக்கு ஆலோசனை சொல்வதற்காக அமைக்கப்பட்ட வல்லுநர் குழுக் கூட்டமாக இருந்தாலும் ஒன்றை நான் திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறேன். சமூகம், அரசியல், பொருளாதாரம் ஆகிய மூன்றிலும் தமிழ்நாடு என்பது ஒருசேர வளர வேண்டும் என்பதுதான் நம்முடைய கனவாக இருக்க வேண்டும். அனைவரின் கனவையும் நிறைவேற்ற நமது அரசு பாடுபட்டு வருகிறது.

அரசின் பொருளாதாரமும், தனிமனிதர்களின் பொருளாதாரமும் தன்னிறைவு பெற்றதாக மாற வேண்டும். நம்முடைய தமிழ்ச் சமூகமானது சிந்தனையால், பண்பாட்டால், நாகரிகத்தால், பழக்க வழக்கத்தால் உயர்வடைய வேண்டும். அதாவது ஏற்றத்தாழ்வு அற்ற, உயர்வு தாழ்வு அற்ற ஒரு மனித உரிமைச் சமூகமாக நாம் மாற வேண்டும். அதைத்தான் நம்முடைய சுதந்திரப் போராட்டத் தியாகிகள் விரும்பினார்கள். அதற்காகத்தான் போராடினார்கள். அதற்காகத்தான் தியாகம் செய்தார்கள்.

சிறை சென்றோர், செக்கிழுத்தோர், கல்லுடைத்தோர், அடி உதை பட்டோர், அவலங்களைச் சுமந்தோர், உயிரைக் கொடுத்தோர் ஆகிய அனைவரும் மேன்மைமிகு தமிழ்நாட்டை உருவாக்க நினைத்தார்கள். அத்தகைய தமிழ்நாட்டை உருவாக்க நினைக்கும் தமிழ்நாடு அரசுக்கு நாட்டு மக்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். உறுதுணையாக இருக்க வேண்டும்.

மகாத்மா காந்திக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையேயான உறவு ஆழமானது. தென்னாப்பிரிக்காவில் மகாத்மா காந்தி நடத்திய அத்தனைப் போராட்டங்களிலும் தமிழர்கள் முன்னின்றனர். அங்கு நடைபெற்ற இனவெறியின் உக்கிரத்தைத் தாங்கிய தமிழர்கள் தன் உடன்பிறந்த சகோதரர்கள் என்று மகாத்மா காந்தி அறிவித்தார். தமிழர்கள் மகாத்மா காந்தியை நெஞ்சார நேசித்தார்கள்.

மகாத்மா காந்தியும் தமிழர்கள் மட்டுமின்றித் தமிழ் மொழி மீதும் அளவில்லா அன்பு கொண்டிருந்தார். ஐரோப்பாவிற்கு எப்படி இத்தாலிய மொழியோ அப்படி இந்தியாவிற்குத் தமிழ் மொழி என அறிவித்து லண்டன் பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில் தமிழை விருப்பப் பாடமாகச் சேர்க்க வேண்டும் என்றும் இந்தியாவின் பிற பகுதிகளில் வசிப்பவர்கள் நம் தமிழ் மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மகாத்மா காந்தி தன் வாழ்நாளில் 20 முறை தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்தார். நூறு ஆண்டுகளுக்கு முன் மதுரைக்கு வந்த மகாத்மா காந்தியை, மேலாடை துறந்த மகாத்மாவாகத் தமிழ்நாடு வழியனுப்பி வைத்தது.

அதை நினைவுகூரும் வகையில் மகாத்மா குறித்த அரிய கலைப்பொருட்களைக் கொண்ட மதுரை மகாத்மா காந்தி அருங்காட்சியகம் பொதுமக்களையும், இளைய தலைமுறையினரையும் ஈர்க்கும் வகையில் ஆறு கோடி ரூபாய் செலவில் நவீன முறையில் புதுப்பிக்கப்படும். சாதி, மதம், இனம் குறித்த பல்வேறு சவால்களை எதிர்கொண்டிருக்கும் இந்தியத் திருநாட்டை வழிநடத்தக் கிடைத்த ஒப்பற்ற ஆயுதம் காந்தியச் சிந்தனைகள் என்னும் கருத்தை இளைஞர் மனதில் ஆழப் பதிய வைக்க இன்று சூளுரைப்போம்! அனைவருக்கும் சுதந்திர நாள் நல்வாழ்த்துகள்!

வாழ்க தமிழ்நாடு! வாழ்க இந்தியா!

வணக்கம்!

உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதிலும் விவசாயப் பரப்பை அதிகப்படுத்துவதிலும் அரசு உறுதியாக உள்ளது



எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் 32ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற "காலநிலை மாற்றம் மற்றும் கொரோனா தொற்று நோயின் பின்னணியில் உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பை உறுதி செய்தல்" குறித்த பன்னாட்டு மாநாட்டை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கி வைத்து, ஆற்றிய உரை–06.08.2021.

அனைவருக்கும் வணக்கம்.

மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களது பெயரால் அமைந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் 32ஆவது ஆண்டுவிழாவை முன்னிட்டு நடைபெறக் கூடிய பன்னாட்டு அறிவியல் மாநாட்டின் தலைவர், வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களே!

இந்தச் சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு இருக்கக்கூடிய மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்களே!

மதிப்பிற்குரிய பத்திரிகைத் துறையினுடைய ஜாம்பவான் என்னுடைய இனிய நண்பர் இந்து என். ராம் அவர்களே!

இந்த நிறுவனத்தின் பொறுப்பாளர்களாக இருந்து திறம்பட நடத்தி வரும் டாக்டர் மதுரா சுவாமிநாதன் அவர்களே, டாக்டர் கே.எஸ். முரளி அவர்களே, டாக்டர் சவுமியா சுவாமிநாதன் அவர்களே, டாக்டர் ரெங்கலட்சுமி உள்ளிட்ட இந்த அவையில் அமர்ந்திருக்கக்கூடிய அன்பிற்குரிய பெரியோர்களே, தாய்மார்களே, நண்பர்களே!

தொடர்ந்து இங்கு உரையாற்றுவதற்காக இருக்கக் கூடிய திரு. ஜெர்னாட் லகாண்டா அவர்களே, முனைவர் ஜாக்குலின் டி. அரோஸ் ஹியூஸ் அவர்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தை, நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த விழாவில் கலந்துகொள்ள எனக்குக் கிடைத்த வாய்ப்பை, எனக்குக் கிடைத்தப் பெருமையாகக் கருதுகிறேன். இந்திய அளவில் மட்டுமல்ல உலக அளவில் புகழ்பெற்ற வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள் என்னை இவ்விழாவுக்கு அழைத்ததை நினைத்துப் பெருமிதம் கொள்கிறேன்.

நாளைய தினம் அவரது 96ஆவது பிறந்தநாள் தினம். 96ஆவது பிறந்தநாளைக் காணவிருக்கக்கூடிய அவருக்கு என்னுடைய சார்பிலும், தமிழ்நாட்டு மக்களின் சார்பிலும் எனது இனிய பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவருக்கு நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதற்கு இன்னும் நான்கு ஆண்டுகள்தான் இருக்கின்றன. அந்த நூற்றாண்டு விழாவுக்கும் நிச்சயம் நான் வருகை தந்து வாழ்த்துவேன்! தமிழ்நாடே உங்களை வாழ்த்தும்! உங்களைப் போன்ற பெருமக்கள்தான் தமிழ்நாட்டின் பெருமை!

எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களது அறிவையும் ஆற்றலையும் சிந்தனையையும் செயல்பாட்டையும் போற்றும் அரசாக தி.மு.க. அரசு எப்போதும் இருந்துள்ளது என்பதை இந்நேரத்தில் நினைவூட்ட விரும்புகிறேன். மறைந்த முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்கள், இந்து ராம் அவர்கள், 1989ஆம் ஆண்டு எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களை அழைத்துக் கொண்டு தலைவர் கலைஞர் அவர்களைச் சந்திக்க வந்தார்கள். அப்போது, சென்னையில் ஒரு ஆராய்ச்சி மையத்தை உருவாக்க இருப்பதாகச் சுவாமிநாதன் அவர்கள் தலைவர் கலைஞர் அவர்களிடத்தில் சொன்னார்கள். வேறு எந்த மறுப்பேதும் சொல்லாமல், உடனடியாக அடுத்த வினாடியே அது வழங்கப்படும் என்ற உறுதியைத் தந்து, அந்த இடத்தை வழங்கியவர்தான் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள். அந்த இடத்தில், நிலத்தில்தான் இந்த ஆராய்ச்சி நிறுவனம் சீரும் சிறப்புமாகத் தனது 32ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டு இருக்கிறது. எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களுக்கு உதவி செய்தால், அது நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பயன்படும் என்ற தொலைநோக்கோடு, சிந்தனையோடு எண்ணிப்பார்த்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அன்றைக்கு இந்த நிறுவனம் உருவாக உதவி செய்தார்கள்.

1989–1991 மற்றும் 1996–2000 ஆண்டுகளில் மாநிலத் திட்டக்குழுவில் திரு. சுவாமிநாதன் அவர்களை நியமித்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அவரது ஆலோசனைகளை ஏற்றுக் கொண்டு, ஆட்சியிலே பல திட்டங்களை நிறைவேற்றிக் காட்டியிருக்கிறார். இங்கு நடந்த பல்வேறு விழாக்களில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளார்கள். சுவாமிநாதன் அவர்களின் 85ஆவது பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்ட தலைவர் கலைஞர் அவர்கள், "100 ஆண்டுகாலம் வாழ்க" என்று வாழ்த்தினார்கள். அந்த வாக்கு பலித்து, நூற்றாண்டு விழாவை நம்முடைய சுவாமிநாதன் அவர்கள் நெருங்கி வருகிறார்கள். தலைவர் கலைஞரின் வழித்தடத்தில் நானும் இந்த நிகழ்ச்சியில் பங்கெடுத்துள்ளேன்.

எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள் வேளாண் விஞ்ஞானியாக மட்டுமல்ல, தமிழ் வேளாண் விஞ்ஞானி என்பதற்கும் எடுத்துக்காட்டாக இந்த நிறுவனத்தையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என அமைத்தார்கள். 2010ஆம் ஆண்டு கோவையில் உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டைக் கழக அரசு நடத்தியபோது சுவாமிநாதன் அவர்களின் ஆலோசனைப்படி தமிழ்நாட்டில் ஐந்து நகரங்களில் மரபுவழிப் பூங்காக்களை அமைத்தோம். தமிழ்ப் பண்பாட்டையும், தமிழ் நிலத்தையும் மதிக்கும் அரசாகத்தான் கழக அரசு எப்போதும் இருக்கும்.

வருகிற 13ஆம் தேதி தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்ய இருக்கிறோம். இந்த ஆண்டு வரலாற்றில் முதல் முறையாக வேளாண்துறைக்கு எனத் தனி நிதிநிலை அறிக்கையை வருகிற 14ஆம் தேதி தாக்கல் செய்யப் போகிறோம். வேளாண்மைதான் உயிராக, உடலாக நம் நாட்டுக்கு இருக்கிறது. அந்த வேளாண்மைக்குச் சிறப்புக் கவனம் செலுத்திக் கொண்டு இருக்கிறோம்.

- விவசாயத்திற்கெனத் தனியான நிதிநிலை அறிக்கை
- இயற்கை வேளாண்மைக்குத் தனிக் கவனம்
- உழவர் சந்தைகளுக்குப் புத்துயிர் அளித்தல்
- கிராமச் சந்தைகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள்.
- நிலத்தடி நீர்ப் பயன்பாட்டை முறைப்படுத்துவதற்கான புதிய சட்டம்.
- சென்னைப் பெருநகரத்தை "வெள்ள நீர்" சூழாமல் தவிர்க்க "பெருநகர வெள்ளநீர் மேலாண்மைக் குழு" அமைக்கப்படும் என்ற அறிவிப்பு

ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்க இருக்கிறோம்.

அனைத்துக்கும் மேலாக இந்த அமைச்சரவையில் தான் நீர்வளத்தைப் பாதுகாப்பதற்காகத் தனியாக நீர்வளத்துறை அமைச்சர் நியமிக்கப்பட்டுள்ளார்.

வேளாண்துறை அமைச்சரை வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சராக உருவாக்கி உள்ளோம். சுற்றுச்சூழல் அமைச்சரை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சராக நாங்கள் நியமித்திருக்கிறோம். அதாவது சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம், நீர் நிலைகள், வேளாண்மை, உழவர் நலன் ஆகிய துறைகளைத் தமிழ்நாடு அரசு எந்தளவு உன்னிப்பாகக் கவனிக்கிறது என்பதை இதன் மூலம் நீங்கள் தெளிவாக உணரலாம்.

"வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயரக் குடி உயரும்
குடி உயரக் கோன் உயர்வான்"

என்ற தமிழ் நெறியை முழுமையாக உணர்ந்த அரசாகத் தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது.

பசிப்பிணி ஒழிப்பும், உணவுப் பாதுகாப்பும் இந்த நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும் சேராது இருப்பது நாடு என்கிறார் வள்ளுவர். அத்தகைய பசிப்பிணி போக்குவதை இலக்காகக் கொண்டு சிந்திக்கவும் ஆராய்ச்சிகள் செய்யவும் தங்கள் வாழ்நாளை ஒப்படைத்துக் கொண்டுள்ள இந்த நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள் அனைவரையும் மனதாரப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

கடந்த முக்கால் நூற்றாண்டு காலமாகத் தனது சிந்தனையை இத்தகைய திட்டங்களுக்காக ஒதுக்கி உழைத்து வருகிறார் நம்முடைய மரியாதைக்குரிய சுவாமிநாதன் அவர்கள். உயர்கல்வி நிறுவனங்களுடன் இணைந்து இதுவரை அவரது வழிகாட்டலில் 86 மாணவர்கள் முனைவர் பட்டம் பெற்றுள்ளார்கள் என்பதையும்; மாநகராட்சிப் பள்ளிப் பிள்ளைகளுக்கு அறிவியல் மனப்பான்மையை அவர் வளர்த்து வருவதையும் அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். இதைவிட முக்கியமாக, பார்வைக் குறைபாடு உடைய மாற்றுத்திறனாளிகளுக்காகத் தொடுதல் – நுகர்தல் பூங்கா அமைத்திருப்பதைப் பாராட்டுகிறேன்.

இன்று காலநிலை மாற்றம்தான் பெரிய பிரச்சினையாக மாறிக் கொண்டு இருக்கிறது. இதனை முன்கூட்டியே உணர்ந்து சொன்ன அறிஞர்தான் நம்முடைய எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள். காலநிலை மாற்றம் குறித்து 1969ஆம் ஆண்டிலேயே இந்திய அறிவியல் மாநாட்டில் பேசி இருக்கிறார். உலகம் அதிகமாக வெப்பம் ஆவதால் கடல் மட்டம் உயரும் என்பதையும் 1989ஆம் ஆண்டு டோக்கியோ மாநாட்டில் எச்சரிக்கை விடுத்து இருக்கிறார்.

இன்று காலநிலை மாறுபாடு மிகப்பெரிய அச்சுறுத்தலாக மாறிவருகிறது. அதனால் ஏற்படும் பாதிப்புகள் நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. வெப்பச் சலனம் அதிகமாகி வருகிறது. வடமாநிலங்கள் சிலவற்றில், பல நேரங்களில் வெப்ப அலை அடிக்கத் தொடங்கி இருக்கிறது. உலகின் ஒரு சில பகுதிகள் 'வெட் பல்ப் டெம்பரேச்சர்' (wet-bulb temperature) தன்மையை எட்டிவிட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. உடல் தன்னைத்தானே குளிர்விக்கும் தன்மையை இதனால் இழக்கும். இது மிக மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தும் என்று ஆய்வாளர்கள் சொல்லத் தொடங்கி இருக்கிறார்கள். சீரான பருவம் என்பது குறைந்து வருகிறது. பருவ மழைக்காலம் என்பது கூட வரையறுக்க முடியாததாக இருக்கிறது. காலநிலை மாற்றம் என்பதை மானுடத்தின் மிக முக்கியமான பிரச்சினையாகத் தமிழ்நாடு அரசு கருதுகிறது. அதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஆராய்ந்து மேற்கொள்வோம். இயற்கையைச் சீரழித்துவிடாமல், சீர் செய்யும் கடமை நமக்கு உள்ளது. இதற்கான ஆலோசனைகளைச் சூழலியல் அறிஞர்கள் அனைவரும் அரசுக்குத் தாருங்கள் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். திறந்த மனத்தோடு அதனை எதிர்கொள்ள தமிழ்நாடு அரசு தயாராக இருக்கிறது என்ற உறுதியையும் அளிக்கிறேன்.

உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதையும் – விவசாயம் செய்யும் பரப்பை அதிகப்படுத்துவதிலும் இந்த அரசு உறுதியாக இருக்கிறது. வேளாண்மையை லாபகரமான தொழிலாக உழவர்கள் கருதும் சூழலை உருவாக்க வேண்டும். அறிவியல் தொழில்நுட்பங்களை வேளாண்மையில் புகுத்த வேண்டும். அதே நேரத்தில் உரிய விலை அவர்களுக்குக் கிடைக்க வேண்டும். அந்த விலை எப்படிக் கணக்கிடப்பட வேண்டும் என்பதையும் ஒன்றிய அரசுக்கு உணர்த்தியவர் நம்முடைய எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள்தான். உணவுப் பாதுகாப்பு என்பதில் விவசாய மக்களின் பாதுகாப்பும் உள்ளடங்கும். மண்ணைக் காக்க வேண்டுமானால், மண்ணைக் காக்கும் மக்களைக் காக்க வேண்டும்! அதை நோக்கியதாக உங்களது சிந்தனைகள் அமையட்டும்.

இந்த மாநாடு, நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் நன்மை செய்யும் மாநாடாக அமையட்டும். இந்த நிறுவனத்தின் செயல்பாடுகள் இந்த மண்ணையும் மக்களையும் காக்கும் செயல்பாடுகளாக அமையட்டும். மரியாதைக்குரிய எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள் நூறாண்டுகளைக் கடந்து நாட்டுக்கும், வேளாண்மைக்கும், சுற்றுச்சூழலுக்கும் தொண்டாற்ற வேண்டும் என்று அன்போடு கேட்டு, இந்த மாநாட்டில் கலந்து கொள்ளக்கூடிய வாய்ப்பைத் தந்த அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை என்னுடைய நன்றியைத் தெரிவித்து, என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி வணக்கம்!



நாட்டிற்காக நாள் முழுக்க உழைக்கிறோம்! மக்களுக்காக ஒவ்வொரு நொடியும் சிந்திக்கிறோம்!!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 14.08.2021 அன்று, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற சட்டப்பேரவைக் கூட்டத்தில், அரசுப் பொறுப்பேற்று 100 நாட்கள் நிறைவடைந்ததையொட்டி ஆற்றிய உரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் மாபெரும் வெற்றியைப் பெற்றுத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்து இன்றோடு 100 நாட்கள் ஆகிறது.

அந்தப் பெருமையின் அடையாளமாக, கழக ஆட்சியையும் என்னையும் பாராட்டி உரையாற்றி இருக்கக்கூடிய, முன்வரிசையில் அமர்ந்திருக்கக் கூடிய பல்வேறு கட்சிகளைச் சார்ந்த தலைவர்கள், உறுப்பினர்கள் அத்தனைப் பேருக்கும் முதலில் எனது இதயப்பூர்வமான நன்றியை, வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்

100 நாட்கள் கடந்ததைப் பற்றி இங்கே நீங்கள் எல்லாம் பெருமையோடு பேசினீர்கள், ஆனால் எனக்கு அடுத்து வரும் காலத்தைப் பற்றிய நினைப்பாகவே இருந்துகொண்டிருக்கிறது. தேர்தலுக்கு முன் கழகத்திற்கோ, எனக்கோ இருந்த எதிர்பார்ப்பை விட இந்த 100 நாட்களில் எதிர்பார்ப்பு மேலும் அதிகமாகி இருக்கிறது.

நீங்கள் எல்லாம் இப்போது பாராட்டினீர்கள் என்றால் பணியை முடித்துவிட்டதற்காக அல்ல, இன்னும் பணியைச் செய்ய வேண்டும் என்று ஊக்கப்படுத்தியிருக்கிறீர்கள், உற்சாகப்படுத்தியிருக்கிறீர்கள். அதைத்தான் நான் உணர்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்களிக்காதவர்கள் கூட, இப்போது தேர்தல் நடந்தால் வாக்களிக்கத் தயாராக இருக்கிறார்கள். அந்தளவுக்கு ஒரு சிறப்பை, பெயரைப் பெற்றிருக்கிறோம். அந்தப் பெயரைக் காலம் எல்லாம் காப்பாற்ற வேண்டும் என்பதுதான் எங்களுடைய எண்ணமாக இருக்கிறது.

என்னுடைய பணிக்குத் தோளோடு தோள் நிற்கும் நம்முடைய அமைச்சர் பெருமக்கள், பல்வேறு கட்சிகளைச் சார்ந்த தலைவர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அத்தனை பேருக்கும் நான் மீண்டும் மீண்டும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே நீங்கள் குறிப்பிட்டீர்கள். ஆட்சிக்கு வரும்போது, கொரோனா என்ற ஒரு பெருந்தொற்று நம்மைச் சூழ்ந்திருந்தது. அதனை எதிர்கொள்ள போர்க்கால அடிப்படையில் நாம் எல்லாம் ஒருங்கிணைந்து செயல்பட்டோம். முதல் ஒரு மாத காலம் ஆம்புலன்ஸ் சத்தம்தான். அந்தச் சத்தம் நம்மை நிம்மதியாக இருக்க

விடவில்லை. அதையும் தாண்டி, மருத்துவமனையில் இடம் இல்லை, ஆக்சிஜன் பற்றாக்குறை, இப்படி ஏதாவது ஒரு செய்தி வந்து நம் மனதை வாட்டி வதைத்துக்கொண்டே இருந்தது. இதையெல்லாம் சமாளிக்கத்தான் உடனடியாக ஒரு War Room-ஐ நாம் ஏற்படுத்தினோம். மக்களின் கோரிக்கைகளைக் காதுகொடுத்துக் கேட்டோம். அதை முடிந்த வரைக்கும் நாம் நிவர்த்தி செய்தோம். இன்னும் சொல்லப்போனால் கோரிக்கைகளே வராத, வர முடியாத ஒரு சூழ்நிலையை இப்போது உருவாக்கியிருக்கிறோம். இலட்சக்கணக்கான மக்களைக் காப்பாற்றியதும், அவர்களுக்கு அரவணைப்பாக இருந்ததும்தான், என்னைப் பொறுத்தவரை, இந்த 100 நாளில் செய்த சாதனையில் பெரிய சாதனையாக நான் கருதுகிறேன்.

'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்ற வள்ளலாரைப் போல இந்த அரசு நடவடிக்கை எடுத்தது என்று வருங்காலத் தலைமுறை சொல்லவேண்டும் நம்மைப் பற்றி.

தேர்தல் வாக்குறுதிகளை இப்போது, நான் முழுதாக எல்லாவற்றையும் நிறைவேற்றி விட்டோம் என்று சொல்லி உங்களையும் ஏமாற்றி என்னையும் ஏமாற்றிக்கொள்ள நான் தயாராக இல்லை, படிப்படியாக நிறைவேற்றிக் கொண்டு இருக்கிறோம், நிறைவேற்றுவோம், அதில் எந்த மாற்றமும் கிடையாது. அது உறுதி.

நேற்றைய தினம், முதல் நிதிநிலை அறிக்கையை நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் தாக்கல் செய்திருக்கிறார்கள். நமது அரசின் நூறாவது நாளில், தமிழகத்தின் வரலாற்றில் பதிவாகக் கூடிய வகையில், நீங்கள் எல்லாம் பெருமையோடு சொன்ன அடிப்படையில், வேளாண்துறையின் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அனைத்துத் துறைகளுக்கும் தாயுள்ளத்தோடு திட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வரி இல்லாத நிதிநிலை அறிக்கையைக் கொடுத்துள்ளோம். இப்போதுதான் தொடங்கி இருக்கிறோம். படிப்படியாக அனைத்து வாக்குறுதியையும் நிச்சயமாக நிறைவேற்றிக் காட்டுவோம். யாருக்கும் எந்தச் சந்தேகமும் வேண்டாம்.

இங்கே படமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கும் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னது என்னுடைய மனதில் இன்னும் ஆழமாக இருக்கிறது, "சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்". அவர் இருந்து செய்ய வேண்டியதை அவர் மகன் நிச்சயம் செய்வான் என்ற உறுதியை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஐந்து ஆண்டு கால ஆட்சியில் 100 நாட்கள் என்பது பதினெட்டில் ஒரு சதவிகிதம்தான். ஆனால், இந்த 100 நாட்களில் இந்த அரசு செய்த சாதனைகளை நான் இங்கே பட்டியல் போட்டால் மூன்று மணிநேரம் ஆகும். அதனால், அதைப் பட்டியல் போட விரும்பவில்லை. நேரம் கிடைக்கும்போதெல்லாம் அமைச்சர்களும் சொல்வார்கள், நானும் சொல்லக் காத்திருக்கிறேன்.

நாள் முழுக்க நாட்டிற்காக உழைக்கிறோம். ஒவ்வொரு நொடியும் மக்களுக்காகச் சிந்திக்கிறோம். தமிழ்நாட்டின் இழந்த பெருமையை மீட்டெடுக்க எங்களால் முடியும் என்ற நம்பிக்கை தரும் நாட்களாக இந்த 100 நாட்கள் அமைந்துள்ளது. நிதி நிலைமை மட்டும்தான் கொஞ்சம் கவலை தரக் கூடிய வகையில் இருக்கிறது. அதையும் விரைந்து சீர் செய்வோம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது; உங்களின் ஒத்துழைப்போடுதான். சீர்மிகு தமிழ்நாட்டை உருவாக்குவோம். இந்தப் பெரும் பொறுப்பை நான் என் தோளில் சுமக்கத் தயாராகி விட்டேன். நீங்கள் அனைவரும் இருக்கிறீர்கள் என்ற நம்பிக்கையோடு எனது பயணத்தைத் தொடர்வேன்.

எனது அரசாகத்தான் முதலில் இது உருவானது. இப்போது நான் சொல்கிறேன், **எனது அரசு அல்ல, நமது அரசு!** இதுதான் என்னுடைய கொள்கை. ஆக, **எமது அரசு, நமது அரசு** என்று சொல்லக்கூடிய அளவுக்குத்தான் இந்த ஆட்சி நடந்துகொண்டிருக்கிறது. எனவே, **வாழ்த்திய அனைவருக்கும் எனது நன்றிகள்! வாழ்த்த மனமில்லாதவர்களையும் வென்றெடுக்க அடுத்த 100 நாட்களில் இரண்டு மடங்காக நாங்கள் உழைப்போம், உழைப்போம், உழைப்போம்!**

நன்றி! வணக்கம்!



மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்**
அவர்கள்

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப்பணி மற்றும் அகில இந்திய பணி, மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல், உள்துறை, சிறப்பு முயற்சிகள், சிறப்புத் திட்ட செயலாக்கம் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலன்

பொதுத்துறை

சட்டம் மற்றும் ஒழுங்கு

- தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் தாமிர உருக்காலையை நிரந்தரமாக மூடக்கோரி 22.05.2018 அன்று நடத்தப்பட்ட போராட்டத்தின்போது ஏற்பட்ட வன்முறை மற்றும் துப்பாக்கிச் சூடு குறித்து விசாரிப்பதற்காக அமைக்கப்பட்ட மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி திருமதி. அருணா ஜெகதீசன் அவர்களின் விசாரணை ஆணையத்தின் இடைக்கால அறிக்கை 14.05.2021 அன்று அரசிடம் வழங்கப்பட்டது.

- இடைக்கால அறிக்கையின் அடிப்படையில், போராட்டம் தொடர்பாகப் பதிவுசெய்யப்பட்ட வழக்குகளில், மத்தியப் புலனாய்வுத்துறைக்கு மாற்றம் செய்யப்பட்ட வழக்குகளைத் தவிர, இதர 38 வழக்குகளைத் திரும்பப் பெறவும், இவ்வழக்கில் காவல்துறையினரால் கைது செய்யப்பட்ட 93 நபர்களுக்குத் தலா ரூ.1 இலட்சமும், பரோலில் வெளிவந்த ஆயுள் தண்டனைக் கைதி பரத்ராஜ் என்பவர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுப்



பாளையங்கோட்டை மத்தியச் சிறையில் இறந்ததால், அவரின் தாயாருக்கு ரூ.2 இலட்சம் நிவாரணத் தொகை வழங்கவும், 38 வழக்குகளில் சம்பந்தப்பட்ட நபர்களின் உயர்கல்விக்காகவும், வேலைவாய்ப்பிற்காகவும் ''தடையில்லாச் சான்றிதழ்கள்'' வழங்கவும் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.



காவல்துறை

சட்டம், ஒழுங்கு திறம்படப் பராமரிக்கப்பட்டுப் பொது அமைதி சிறப்பாக நிலவி வரும் தமிழ்நாடு.

- ''உங்கள் தொகுதியில் முதலமைச்சர்'' திட்டத்தின்கீழ் 1,498 மனுக்களுக்குத் தீர்வு.
- கோவிட்–19 தொற்றுநோய் பரவுவதைக் கட்டுப்படுத்துவதில் திறம்படச் செயலாற்றும் காவல்துறையினர்.
- காவல்துறையினரின் தன்னலமற்ற சிறப்பான சேவையைப் பாராட்டி, 1,17,184 அலுவலர்கள் மற்றும் காவலர்களுக்கு ரூ.5,000 ஊக்கத்தொகை.
- 968 உதவி ஆய்வாளர்களுக்கு நேரடிப் பணி நியமன ஆணை.
- தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியக வளாகத்தில் (TNPA) ரூ.10.42 கோடி செலவில் ஒருங்கிணைந்த சைபர் பயிற்சி வளாகத்திற்கு அடிக்கல்.
- ரூ.4.54 கோடி மதிப்புள்ள 20 டன் குட்கா, புகையிலைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுத் தொடர்புடைய 4,046 குற்றவாளிகள் கைது.

தடய அறிவியல் துறை

- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் இளநிலை அறிவியல் அலுவலர் பதவிக்குத் தேர்வு செய்யப்பட்ட 62 நபர்களுக்குப் பணி நியமன ஆணை.

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம்

- ரூ.38.51 கோடி செலவில் 268 காவல் துறை வாடகைக் குடியிருப்புகள்.



- ரூ.6.31 கோடி செலவில் 6 காவல் நிலையங்கள். ரூ.2.79 கோடி செலவில் 2 இதர காவல்துறைக் கட்டடங்கள்.
- ரூ.2.12 கோடி செலவில் 13 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள்துறை குடியிருப்புகள்.
- ரூ.5.30 கோடி செலவில் 5 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நிலையக் கட்டடங்கள்.
- ரூ.1.15 கோடி செலவில் 6 சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள்துறை குடியிருப்புகள்.

1971– இந்தியா –பாகிஸ்தான் போரின் பொன்விழா வெற்றி கொண்டாட்டங்கள்

- 1971 இந்தியா–பாகிஸ்தான் போரின் 50ஆவது ஆண்டு பொன்விழா கொண்டாட்டங்கள் 22.07.2021 அன்று மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தலைமையிலும், கலைவாணர் அரங்கத்தில் 30.07.2021 அன்று மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.



- தமிழ்நாட்டைச் சார்ந்த இராணுவத்தில் பணியாற்றி வீரமரணமடைந்த நான்கு போர்வீரர்களின் வாரிசுகளுக்கு, கார்கில் போராட்ட வீரர்கள் நிவாரண நிதியிலிருந்து கருணைத் தொகையாகத் தலா ரூ.20 இலட்சம் வழங்கினார்.

சிறப்பு முயற்சிகள்துறை

- சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் விரைவில் நிறைவேற்றம்.
- மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் பெருந்திரள் விரைவுப் போக்குவரத்து அமைப்புகளுக்கான சாத்தியக்கூறு ஆய்வுகள் தொடக்கம்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை

- மாற்றுத்திறனாளிகளுக்குச் சிறப்பான திட்டங்களை வழங்கும் வகையில் நடப்பாண்டில் ரூ.688.48 கோடி நிதி ஒதுக்கீட்டில் பல்வேறு நலத்திட்டங்கள்.
- அரசு, சாதாரணக் கட்டண நகரப் பேருந்துகளில் அனைத்து மாற்றுத் திறனாளிகளும் உதவியாளர் ஒருவருடன் கட்டணமின்றிப் பயணம்.



- கொரோனா தடுப்பூசி வழங்கும் திட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் அவர்களின் வீட்டிற்கே சென்று தடுப்பூசி செலுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு 1,30,524 மாற்றுத்திறனாளிகளுக்குத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.



முதலமைச்சரின் பொது நிவாரண நிதி

முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்கள் ரூ.1 கோடி நிதி வழங்கினார்



முதலமைச்சரின் பொது நிவாரண நிதி

கொரோனா நிவாரண நிதிக்கு ஆர்வமுடன் சிறுவர்கள் முதல் பிரபலங்கள் வரை உதவி வருகின்றனர்

உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறை



- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தேர்தல் பரப்புரையின் போது தமிழக மக்களின் குறைகளுக்குத் தீர்வு காண அளித்திருந்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" என்ற தனித்துறை 07.05.2021 அன்று உருவாக்கப்பட்டது.
- மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் அடங்கிய பெட்டிகளின் சாவிகளை 08.05.2021 அன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையின் சிறப்பு அலுவலரிடம் ஒப்படைத்தார்.
- பெட்டிகளிலிருந்த சுமார் 4.57 இலட்சம் மனுக்கள் மின்னணு முறையில் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டு, தீர்வு காண நடவடிக்கைகள் தொடங்கப்பட்டது.



- மனுக்கள் பதிவேற்றம் செய்யப்பட்டவுடன், ஒரு குறுஞ்செய்தி மனுதாரரின் தொலைபேசி எண்ணுக்கு ஒப்புகை எண்ணுடன் அனுப்பப்பட்டது.
- "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" துறையின் நடவடிக்கைகள் அனைத்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேரடி கண்காணிப்பின்கீழ் நடைபெற்று வருகின்றன.
- "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" என்ற துறை



உருவாக்கப்பட்ட பத்து நாட்களில், சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், நிலப் பதிவுகள் (பட்டா), சான்றிதழ்கள் மற்றும் உரிமங்கள், சமூக நலத்துறையின்கீழ் கிடைக்கும் சலுகைகள், ஓய்வூதியம், அடிப்படை வசதிகள் மற்றும் கிராம உள்கட்டமைப்புத் தொடர்பான மனுக்கள் உடனடியாகத் தீர்வு காணப்பட்டு, 18.05.2021 அன்று, முதல் சுற்று நலத்திட்ட உதவிகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன.



- நீண்டகாலமாக நிலுவையில் உள்ள கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட 549 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டன. அதன்பிறகு, ஒவ்வொரு பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

நூற்றாண்டின் திசையில் நூறு நாட்கள்



- இத்துறையின் மூலம் 4,57,000 மனுக்களுக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2.29 இலட்சம் மனுக்களுக்கு முழுமையாகத் தீர்வு காணப்பட்டன. இது, முதலமைச்சரின் தனிப்பிரிவில் இரு ஆண்டுகளில் தீர்வு காணப்படும் மனுக்களின் எண்ணிக்கையைவிட கூடுதலாகும்.
- தகுதியற்ற காரணங்களால் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள இயலாத மனுதாரர்களுக்கு மேல்முறையீடு செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.
- சரியான முகவரி இல்லாத மனுக்களின் மனுதாரரைக் கண்டுபிடித்து அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற ஆக்கபூர்வமான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதுவரை

- 32,283 நபர்களுக்குப் பட்டா.
- 30,455 நபர்களுக்கு உதவித்தொகை.
- 19,664 பொதுக்கட்டமைப்புப் பணிகளுக்கான ஆணை.
- 36,141 வீடுகள் வேண்டிய மனுதாரர்களுக்கு ஆணை

உட்பட பல்வேறு நலத்திட்ட உதவிகள்





மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர்
திரு. **துரைமுருகன்** அவர்கள்

நீர்வளத்துறை

சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச்சீட்டுகள், கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள்

மேட்டூர் அணை நீர் திறப்பு

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2021–2022ஆம் ஆண்டு காவிரி டெல்டா பாசனத்திற்காக மேட்டூர் அணையிலிருந்து குறிப்பிட்ட நாளான 12.06.2021 அன்று தண்ணீர் திறந்துவிடப்பட்டுப் பாசனம் நடைபெற்று வருகிறது.
- காவிரி டெல்டா மாவட்டங்களான கரூர், திருச்சி, அரியலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை மற்றும் கடலூர் மாவட்டங்களில் ஆறுகள், கால்வாய்கள் மற்றும் வடிகால்களில் 4,061 கி.மீ நீளத்திற்கு 647 தூர்வாரும் பணிகள் மேற்கொள்ள ரூ.65.10 கோடி மதிப்பீட்டிற்கு ஒப்புதல்.
- உழவர் குழுக்கள் அமைக்கப்பட்டு அவர்களின் ஒருங்கிணைப்புடன் இதுவரை, 645 பணிகள் முடிவடைந்துள்ளன.





- 4,043 கி.மீ நீளத்திற்குக் கால்வாய்கள் தூர்வாரப்பட்டுக் கடைமடை வரை நீர் தங்குதடையின்றிச் சென்றடைந்துள்ளது.

சட்டமன்றப் பேரவைச் செயலகம்

- தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழா மற்றும் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் திருவுருவப் படத்திறப்பு விழா 02.08.2021 அன்று சென்னை, தலைமைச் செயலகத்திலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் நடைபெற்றது.
- இவ்விழாவில், மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் தலைமையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் திருவுருவப் படத்தினைத் திறந்து வைத்தார்.

கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள்

- தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தில் பணிபுரிந்து, பணியில் இருக்கும்போது இறந்த 8 ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.



"சுற்றுச்சூழல் மற்றும் சூழலியல் பாதிக்காமல் சுரங்கப்பணிகளை மேற்கொள்வது குறித்து நிலையான சுரங்கக் கொள்கை உருவாக்க வேண்டும்." – **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**



மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர்
திரு. **கே.என்.நேரு**
அவர்கள்

நகராட்சி நிருவாகத்துறை

நகராட்சி நிருவாகம்

- மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளால் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளின் பயனாக கொரோனா தொற்று எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வருகிறது.
- மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் முதல் தவணை கோவிட் தடுப்பூசி எண்ணிக்கை 20,99,414 நபர்களுக்கும், இரண்டாம் தவணை தடுப்பூசி 8,67,145 நபர்களுக்கும் செலுத்தப்பட்டுள்ளது.
- PM SVANidhi திட்டத்தின்கீழ், 67,209 சாலை வியாபாரிகளுக்கு ரூ.67.20 கோடி வங்கிக் கடனுதவி.
- உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் முறையே 3,263 மற்றும் 28,153 மனுக்கள் பெறப்பட்டு, மாநகராட்சிகளில் 2,732 மற்றும் நகராட்சிகளில் 27,157 மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- மாநகராட்சிகள், நகராட்சிகளின் செலவினப் பட்டியல்களும் மின் மேலாண்மை மூலமாகப் பராமரிக்கப்படுவதால், சொத்துக்களின் தற்போதைய

நகராட்சி நிருவாகம், நகர்ப்பகுதி மற்றும் குடிநீர் வழங்கல்



மதிப்பு நிகழ் நேரத்தில் கணக்கிட வழிவகை செய்யப்பட்டு, மென்பொருள் வழியாகச் சொத்து விவரப் பட்டியல் தானாக உருவாக்கப்படுகிறது.

- மாநகராட்சி, நகராட்சிகளின் அனைத்து விபரங்களும் விடுதலின்றி நிகழ் நேரத்தில் புதுப்பிக்க இணைய வழி சொத்துப் பதிவேடு முறை தொடக்கம்.
- திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் ஒருங்கிணைந்த பிராட்டியூர் குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல் மற்றும் பிரதான ஊந்துக்குழாய் அமைக்கும் பணிக்கு ரூ.4.50 கோடிக்கு நிருவாக அனுமதி.
- ஐயாலம்மன் படித்துறை கிணறு எண். 3இல் எரேட்டர் மற்றும் நீரேற்று நிலையம் கட்டும் பணிக்கு ரூ.5 கோடிக்கு நிருவாக அனுமதி.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

- வேலூர், திருச்சி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களைச் சார்ந்த வேலூர் மாநகராட்சி, ஊத்தங்கரை பேரூராட்சி மற்றும் 343 ஊரகக் குடியிருப்புகளில் உள்ள 11.51 இலட்சம் மக்கள் பயன்பெறும்



வகையில் ரூ.443.57 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 12.22 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் வகையில், மூன்று குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு சோதனை ஓட்டத்தில் உள்ளன.

- தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களிலுள்ள மக்கள் பயன் பெறும் வகையில், ஒகேனக்கல் குடிநீர் வழங்கல் மற்றும் புளோரைடு பாதிப்பு குறைப்புத் திட்டத்தின் குடிநீர் வழங்கலில் உள்ள குறைபாடுகள் களையப்பட்டு நாளொன்றுக்கு வழங்கப்படும் குடிநீர் அளவு 127 மில்லியன் லிட்டரிலிருந்து 141 மில்லியன் லிட்டராக அதிகரித்து வழங்கப்பட்டு வருகிறது.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்

- சென்னை வாழ் மக்களின் சுகாதாரமான வாழ்வுக்குத் தேவையான பாதுகாப்பான குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவுநீரகற்றுப் பணிகளை நியாயமான விலையில் அளித்து பிரதான நோக்கத்தோடு செயல்படுகிறது.

கழிவுநீர் கட்டமைப்புகள் முழுமையாக தூர்வாரி பராமரிப்புப் பணிகள்

- சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், பருவ மழைக்கு முன்பாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, 801 தெருக்களில் உள்ள கழிவுநீர் கட்டமைப்புகளை முழுமையாகத் தூர்வாரி பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளது.
- 801 தெருக்களில் உள்ள கழிவுநீர் செல்லும் குழாய்கள் மற்றும் இயந்திர நுழைவாயில்களில் உள்ள கசடுகளை அகற்றுவதற்காக, 454 இயந்திரங்களைப் பயன்படுத்திப் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.



"மக்களின் அடிப்படை வசதி மேம்பாட்டுப் பணிகளை விரைந்து மேற்கொண்டு பயன்பாட்டிற்குக் கொண்டுவருவதில் முனைப்புடன் செயல்படவேண்டும்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

பேரூராட்சிகள்

- தமிழகத்தில் உள்ள பேரூராட்சிகளில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறிந்து தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
- 15ஆவது நிதிக் குழு அடிப்படை மானியம் ரூ.134.61 கோடி விடுவிக்கப்பட்டு, நீர்நிலைகள் சீரமைப்பு, பூங்காக்கள் மேம்படுத்துதல், மரம் நடுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி

உங்கள் தொகுதியில் முதலமைச்சர்

- பெருநகர சென்னை மாநகராட்சி தொடர்பான "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" பிரிவில் பெறப்பட்ட 790 மனுக்களில் 780 மனுதாரர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

பொது சுகாதாரத்துறை

- பெருநகர சென்னை மாநகராட்சியில் கொரோனா நோய்த் தொற்றால் 5,37,951 நபர்கள் பாதிக்கப்பட்டு, 5,28,064 நபர்கள் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.
- பெருநகர சென்னை மாநகராட்சியின் களப்பணியின் மூலம் சேகரிக்கப்பட்ட பரிசோதனை மாதிரிகளில் கடந்த 14 நாட்களில் நோய்த் தொற்று சதவீதம் 0.36%.

கோவிட்–19 இரண்டாம் அலை தடுப்பு நடவடிக்கைகள்

களப்பணியாளர்கள் மூலம் வீடு வீடாகக் கண்காணித்தல்

- பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள அனைத்து வீடுகளிலும் உள்ள நோய்த் தொற்று அறிகுறி உள்ளவர்களைக் கண்டறிய 11,890 களப்பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, கண்காணிக்கப்பட்டனர்.

காய்ச்சல் முகாம்கள்

- ஆரம்ப நிலையிலேயே நோய்த் தொற்று உள்ளவர்களைக் கண்டறிந்து, அவர்களுக்குப் பரிசோதனை மேற்கொண்டு உரிய சிகிச்சை அளிக்க 32,666 காய்ச்சல் முகாம்கள் நடத்தப்பட்டு, 16.19 இலட்சம் நபர்கள் பரிசோதனை செய்யப்பட்டனர்.

விரிவாக்கப்பட்ட பரிசோதனை மையங்கள்

- பெருநகர சென்னை மாநகரில் 14 அரசுப் பரிசோதனை மையங்கள் மற்றும்



59 தனியார் பரிசோதனை மையங்களில் கோவிட் நோய்ப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- சென்னையில் தினமும் சராசரி 30,000 தொண்டை தடவல் மாதிரிகள் எடுக்கப்படுகின்றன.
- சென்னையில் 07.05.2021 முதல் 30.7.2021 வரை 23,86,356 மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன.
- 07.05.2021 அன்று சென்னையின் ஒரு நாளின் நோய்த் தொற்று சதவிகிதம் 22.83%. சென்னை மாநகராட்சியின் சிறப்பான தடுப்பு நடவடிக்கைகளால் தற்போது ஒரு நாளின் நோய்த் தொற்று சதவிகிதம் 0.84% ஆகக் குறைந்துள்ளது.

ஒற்றை சாளர முறையில்
ஆய்வக முடிவுகளை அறிவித்தல்

- தனியார் மற்றும் அரசு ஆய்வகங்களில் இருந்து பெறப்படும் ஆய்வக முடிவுகள் மாநகராட்சியில் செயல்பட்டு வரும் கட்டுப்பாட்டு அறையில் பெறப்பட்டு நோய்த் தொற்று உறுதியானவர்களுக்கு மாநகராட்சிப் பணியாளர்கள் மூலம் தெரிவிக்கப்படுகின்றது.

நோய் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீட்டிலேயே வகைப்படுத்துதல்

- கொரோனா நோய் பாதிக்கப்பட்டவர்களின் வீட்டிற்கு மருத்துவக் குழு சோதனை மேற்கொண்டு 45 வயதிற்குக் கீழ் உள்ளவர்கள், இணைநோய் இல்லாதவர்கள், நோய் அறிகுறி இல்லாதவர்கள் வீட்டில் தனிமைப்படுத்திக் கொள்ளப் பரிந்துரைக்கப்படுகின்றனர்.
- 45 வயதிற்குக் கீழ் நோய் அறிகுறி உள்ளவர்கள் கொரோனா வகைப்படுத்துதல் மையத்திற்கு மேல் நடவடிக்கைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.



வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு பல்ஸ் ஆக்சிமீட்டர் கருவி வழங்குதல்

- வீட்டில் தனிமைப்படுத்தப்பட்ட இணை நோய் உள்ள 45 வயதிற்கு மேற்பட்டவர்கள், வீட்டில் தனிமைப்படுத்த வசதி உள்ளவர்கள், வீட்டில் பல்ஸ் ஆக்சி மீட்டர் இல்லாதவர்களுக்குக் கடன் அடிப்படையில் பல்ஸ் ஆக்சிமீட்டர் வழங்கப்படுகின்றன.

கோவிட் வகைப்படுத்துதல் மையங்கள்

- பெருநகர சென்னை மாநகராட்சியில் 21 கோவிட் வகைப்படுத்துதல் மையங்கள் அமைக்கப்பட்டன.

கோவிட் பராமரிப்பு மையங்கள்

- பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போது 17,039 படுக்கை வசதிகள் கொண்ட 32 கோவிட் பராமரிப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில், 180 தொற்றுள்ளவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
- அனைத்துகோவிட்பராமரிப்புமையங்களும் கோவிட் சிகிச்சை அளிக்கும் மையங்களாக மேம்படுத்தப்பட்டு, நோய் அறிகுறிகளுடன் உள்ளவர்கள் மற்றும் சற்றே ஆக்சிஜன் தேவைப்படும் நோயாளிகள் இங்கு அனுமதிக்கப்படுகின்றனர். நோயாளிகளைக் கவனிக்க முழுநேர மருத்துவர்கள் மற்றும் மருத்துவ சார்பணியாளர்கள் இங்கு பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

ஆக்சிஜன் வசதியுடன் கூடுதல் படுக்கை வசதிகள்

- பெருநகர சென்னை மாநகராட்சி 13 மையங்களில் 445 ஆக்சிஜன் செறிவூட்டிகளைக் கொண்டு 1,710 படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டது.

தனியார் கோவிட் பராமரிப்பு மையங்கள்

- தனியார் மருத்துவமனைகள் அருகில் உள்ள தனியார் விடுதிகளில் கோவிட் பராமரிப்பு மையங்கள் தொடங்க பெருநகர சென்னை மாநகராட்சி அனுமதி அளித்துள்ளது. தற்போது, 15 தனியார் கோவிட் பராமரிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

தற்காலிக மருத்துவ ஊர்திகள்

- கொரோனா நோயாளிகளை உடனடியாக அழைத்துச்செல்ல ஏதுவாக சிறியரக (SUV) வாகனங்கள் 250 தற்காலிக மருத்துவ ஊர்திகளாக மாற்றம் செய்யப்பட்டன.

மண்டல தொலைபேசி அழைப்பு மையங்கள்

- வீட்டில் தனிமைப்படுத்திக் கொள்பவர்களைத் தொடர்புகொண்டு தேவையான மருத்துவ ஆலோசனைகள் வழங்கவும், அவர்களைக் கண்காணிக்கவும், அழைப்பு மையம் ஒவ்வொரு மண்டலத்திலும் ஏற்படுத்தப்பட்டு இதுவரை 9,14,522 நோயாளிகள் தொலைபேசியின் மூலம் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளனர்.
- தனியார் மருத்துவமனைகள், கிளினிக்குகள், தனியார் சி.டி. ஸ்கேன் மையங்கள் மற்றும் மருந்தகங்களில் நோய் அறிக்கை செய்தல் கட்டாயமாக்கப்பட்டு, விவரங்கள் அனைத்தும் சேகரிக்கப்பட்டு, கண்காணிக்கப்பட்டு, தேவைப்படுபவர்களுக்குத் தொண்டை தடவல் மாதிரிகள் எடுக்கப்படுகின்றன.



துரிதப்படுத்தப்பட்ட தடுப்பூசித் திட்டங்கள்

- பெருநகர சென்னை மாநகராட்சி தடுப்பூசித் திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறது.
- சென்னை மாநகராட்சியில் 45 தற்காலிக சிறப்புத் தடுப்பூசி மையங்கள் மற்றும் 20 மாநகராட்சி மருத்துவமனைகளில் தடுப்பூசி வழங்கப்படுகின்றன. 31.07.2021 வரை 15,53,619 மக்கள் தடுப்பூசியின் மூலம் பயன் பெற்றுள்ளனர்.
- 13,004 மாற்றுத்திறனாளிகளும், 4,563 கர்ப்பிணிப் பெண்களும், 4,217 பாலூட்டும் தாய்மார்களும் தடுப்பூசி செலுத்தப்பட்டு பயன் பெற்றுள்ளனர்.
- 8,88,392 தொற்றாநோய் உடையவர் களுக்குத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

மண்டல அமலாக்கக் குழுக்கள்

- பெருநகர சென்னை மாநகராட்சி, காவல் மற்றும் வருவாய்த் துறைகளின் அதிகாரிகளுடன் 30 சிறப்பு மண்டல அமலாக்கக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கூடுதல் மருத்துவ அலுவலர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் நியமனம்

- கோவிட் நோய்த் தடுப்புப் பணிக்கென 250 மருத்துவ அலுவலர்கள் மற்றும் 250 செவிலியர்கள் நேரடி ஒப்பந்த அடிப்படையில் ஓராண்டுக் காலத்திற்குப் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேலும், 170 ஆய்வக நுட்புனர்கள், 70 ஊடுகதிர் தொழிற்நுட்புனர்கள், 200 சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் 200 கணினிப் பதிவாளர்கள் வெளி நிறுவனம் மூலமும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

தடுப்பு நடவடிக்கைகளை அமல்படுத்துவதைத் தீவிரப்படுத்துதல்

- கொரோனா நோய்த் தொற்றுப் பரவாமல் தடுக்க, 74,422 விதிமுறைகளை மீறியவர்களுக்குப் பெருநகர சென்னை மாநகராட்சி ரூ.2.07 கோடி அபராதம் விதித்துள்ளது. இதற்கென மண்டல அளவில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

மருத்துவ சேவைகள் துறை

- பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 15 மண்டலங்களிலும் 15,29,416 நபர்களுக்கு கோவிட் தொற்றுத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.
- பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறையின் கீழ் இயங்கும் 140 நகர ஆரம்ப சுகாதார மையங்கள், 15 நகரச் சமுதாய நல மருத்துவமனைகள், 3 மகப்பேறு மருத்துவமனை மற்றும் 30 படுக்கை வசதி கொண்ட ஒரு மருத்துவமனை ஆகியவற்றில் புறநோயாளிகளின் பிரிவில் 18,30,486 நபர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.
- 43,219 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, 22,21,576 நபர்கள் பயன்.
- பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறையின் கீழ் இயங்கும் நகரச் சமுதாய நல மருத்துவமனைகளில் 1,394 சுகப்பிரசவங்கள் மற்றும் 1,183 அறுவை சிகிச்சைப் பிரசவங்கள், என மொத்தம் 2,577 பிரசவங்கள் நடைபெற்றுள்ளது. மேலும், 1,028 குடும்பநல அறுவை சிகிச்சையும் செய்யப்பட்டுள்ளது.
- 20,878 கர்ப்பப்பதிவு செய்யப்பட்டுள்ளது.
- 16,861 குழந்தைகளுக்கு பெண்டாவேலண்ட் வேக்சின், ஓரல் போலியோ டிராப்ஸ், ரோட்டா வைரஸ் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

- 19,387 குழந்தைகளுக்குத் தட்டம்மை ரூபல்லா தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

கல்வித்துறை

- சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை 1,05,000 ஆக உயர்ந்துள்ளது.
- பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் இயங்கும் 32 சென்னை மேல்நிலைப் பள்ளிகளில் 2020–2021 கல்வியாண்டில் 12ஆம் வகுப்பில் 2,028 மாணவர்கள், 3,102 மாணவியர்கள், என மொத்தம் 5,130 மாணவ, மாணவியர்கள் பயின்று வந்தனர். அதில், 35 மாணவ, மாணவியர்கள் 91 சதவீத மதிப்பெண்களுக்கு மேலும், 641 மாணவ, மாணவியர்கள் 81 சதவீத மதிப்பெண்களுக்கு மேலும் பெற்றனர்.

கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட பணிகள்

- கோபாலபுரம் சென்னை நடுநிலைப் பள்ளியில் ரூ.17.36 இலட்சம் மதிப்பில் வளவரை வகுப்பறை (Smart Class) கட்டப்பட்டுள்ளது.
- பந்தர் தோட்டம், சென்னை மேல்நிலைப்பள்ளியில் 7 வகுப்பறைகள் மற்றும் 1 பல்நோக்குக் கூடம் கட்டப்பட்டுள்ளன.
- மார்க்கெட் தெரு சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 24 வகுப்பறைகள் கட்டப்படஉள்ளன.

திடக்கழிவு மேலாண்மைத் துறை

- பெருநகர சென்னை மாநகரில், திடக்கழிவு மேலாண்மைத் துறை மூலம் 2,956 இடங்களில் குறிப்பாக, குடிசை மாற்று வாரியக் குடியிருப்புப் பகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் மூன்று கட்டங்களாக 36,383 பணியாளர்கள் மற்றும் 9,199 வாகனங்கள் கொண்டு 27,802 மெட்ரிக் டன் குப்பைக் கழிவுகளும் கட்டடக் கழிவுகளும் அகற்றப்பட்டது.

பூங்காத்துறை

- ரூ.32.43 கோடி மதிப்பீட்டில், 26 புதிய பூங்காக்கள் அமைக்கும் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.
- ரூ.23.19 கோடி மதிப்பீட்டில், 20 விளையாட்டுத் திடல்கள் அமைக்கும் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

இயந்திரப் பொறியியல் துறை

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளபடி, பெருநகர சென்னை மாநகரைத் தூய்மைப்படுத்தி பொதுமக்கள் சுகாதாரத்தைப் பேணிப் பாதுகாத்திடும் பொருட்டு, மாநகராட்சிப் பகுதிகளிலுள்ள நீர்நிலைகளைச் சுத்தப்படுத்தும் பணி தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம், நீர்நிலைகளில் தங்கு தடையில்லா நீரோட்டம் ஏற்படுத்தியதன் மூலமாக, கொசு உற்பத்தி பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டுத் தொற்று நோய்ப் பரவல் தடுக்கப்படுகிறது.


மழைநீர் வடிகால் துறை

- பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 3 வட்டாரங்களில் உள்ள 4,422 எண்ணிக்கையிலான 706 கி.மீ. நீள மழைநீர் வடிகால்களில் ரூ.10.06 கோடி மூலதன நிதியில் தூர்வாருதல் மற்றும் சிறு பழுதுகளைச் சரிபார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. இந்தப் பணிகள் வருகின்ற வடகிழக்குப் பருவமழைக்கு முன்னதாக முடிக்கப்படும்.

மின்துறை

- பெருநகர சென்னை மாநகராட்சி இடுகாடு மற்றும் சுடுகாடு ஆகியவற்றில் காத்திருப்பு இல்லாமல், வெளிப்படைத் தன்மையுடன் உடல்களை அடக்கம் மற்றும் எரியூட்டும் நிகழ்வு நடைபெறுவதை உறுதிசெய்யும் வகையில் ரூ.18 இலட்சம் மதிப்பீட்டில் கேமராக்கள் பொருத்தப்பட்டு, கண்காணிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுத்துறை



மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்
திரு. **இ. பெரியசாமி**
அவர்கள்

கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் நலன்

கூட்டுறவு

- நடப்பு காரீப் பருவத்தில், விவசாயிகளிடமிருந்து 8.06 இலட்சம் மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு, நெல்லுக்குரிய தொகை ரூ.1,569 கோடி நேரடியாக 1.29 இலட்சம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- 98,004 விவசாயிகளுக்கு ரூ.762.75 கோடி பயிர்க் கடனாக வழங்கப்பட்டுள்ளது.



முன்னாள் படைவீரர் நலன்

- திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் 3,002 சதுர அடியில் ரூ.70.75 இலட்சம் செலவிலும், மதுரை மாவட்டம், மதுரை இரயில் நிலையம் அருகில் 2,550 சதுர அடியில் ரூ.86.35 இலட்சம் செலவிலும், தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து கட்டப்பட்ட அலுவலகத்துடன் கூடிய மையக் கட்டடங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 31.07.2021 அன்று காணொலி வாயிலாகத் திறந்து வைக்கப்பட்டு, சுமார் 12,700 முன்னாள்

படைவீரர்கள், 5,300 கைம்பெண்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர் பயன்.


- மாவட்ட அளவில் அலுவலகங்கள் இல்லாத செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் தென்காசி மாவட்டங்களில் புதிய மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகங்கள் தோற்றுவிக்க ஆய்வுகள் மேற்கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள முன்னாள் படைவீரர் நலத்துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வின்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ●



"நியாயவிலைக் கடைகளில் தரமான அத்தியாவசியப் பொருட்கள் தங்குதடையின்றி விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்





மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர்

திரு. **க. பொன்முடி** அவர்கள்

உயர்கல்வித்துறை

- தொழில்முறை படிப்புகளில் அரசுப் பள்ளி மாணாக்கர்கள் குறைந்த எண்ணிக்கையில் சேருவதற்கான காரணங்களை மதிப்பிட்டு, பகுப்பாய்வு செய்து, அதற்கான தீர்வு நடவடிக்கைகளை அரசுக்குப் பரிந்துரை செய்ய டெல்லி உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்நிலை ஆணையம் அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்தது. இந்த ஆணையத்தின் அறிக்கையின்படி, அரசுப் பள்ளி மாணாக்கர்களுக்கு முன்னுரிமை தரத்தக்க வகையில், 7.5 விழுக்காடு உள் ஒதுக்கீடு வழங்கச் சட்டமன்றக் கூட்டத்தொடரில் ஒரு சிறப்புச் சட்டத்தினை இயற்றி, வரைவுச் சட்டம் தயார் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.



தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர்கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்

- கொரோனா பெருந்தொற்று காரணமாக தமிழ்நாடு அரசு 2021–2022ஆம் கல்வியாண்டிற்குச் சேர்க்கைப் பெற 143 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணாக்கர்கள் விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்ய ஏதுவாக tngasa.org மற்றும் tngasa.in என்ற இணையதளம் உருவாக்கம். 30.07.2021 தேதி வரை 1,90,995 மாணாக்கர்கள் பயன்.

- அறிவியல் கருத்துக்களைப் பொதுமக்களிடையே தமிழ் மொழியில் எடுத்துச் செல்ல "அறிவியல் பலகை" எனும் திட்டம். இதுவரை, 53 இணைய வழிச் சொற்பொழிவுகள் நடத்தப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் வெற்றிகரமாக பி.எட்., எம்.எட்., பி.எஸ்.சி., பி.எட்., மற்றும் பி.ஏ., பிஎட்., போன்ற பட்டங்களைப் பெறுவதற்கான தேர்வுகளை இணையதளத்தின் வழியாக நடத்தி முடித்துள்ளது.

- உலக சாதனை நிகழ்வுக்காகக் கீழ்க்கண்ட சான்றிதழ்களை இப்பல்கலைக்கழகம் பெற்றுள்ளது.

  - 05.06.2021 அன்று Longest Virtual Seminar on the Role of Teachers Towards Pinnacle of Achievement என்ற 30 மணிநேரம் 30 நிமிடங்கள் நிகழ்வினை ஏற்பாடு செய்ததற்காக.

  - 05.06.2021 அன்று Longest Virtual Seminar on the Role of Teachers Towards Pinnacle of Achievement என்ற 30 மணிநேரம் 30 நிமிடங்கள் நிகழ்வில் பங்கேற்றதற்காக.

  - 20.06.2021 அன்று "Longest Virtual Event on Vision 2030: Importance of Enhancing Life Skills for Reaching Higher Heights" என்ற 59 மணிநேர நிகழ்வினை ஏற்பாடு செய்ததற்காக.




- பேரிடர் நிருவாகத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் என்ற தலைப்பின் கீழ் மூன்று நாள் இணைய வழிப் பயிற்சியினை நடத்தத் தொழில்நுட்பம் மற்றும் நிருவாகம் தொடர்பான ஆதரவை வழங்க இந்திய அரசின் தேசியப் பேரிடர் மேலாண்மை நிறுவனம் அனுமதி.

- பல்கலைக்கழக மானியக்குழுச் சட்டம் 1956 பிரிவு 12(B)இன்படி தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்திற்கு 12(B) அந்தஸ்தினை 14.07.2021 அன்று பல்கலைக்கழக மானியக்குழு வழங்கியது.



"உயர்கல்வியில் மாணாக்கர்களின் சேர்க்கையை அதிகரிக்கவும், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடவும், பல்கலைக்கழகங்களின் தரத்தினை உயர்த்திடவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்



மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்
திரு. **எ.வ.வேலு**
அவர்கள்

பொதுப்பணிகள் (கட்டடங்கள்), நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்

பொதுப்பணித்துறை

கட்டட அமைப்பு

- மதுரையில் உலகத் தமிழ்ச் சங்க வளாகத்தில் ரூ.70 கோடி மதிப்பீட்டில், கலைஞர் நினைவு நூலகம்.
- சென்னை, கிண்டியில் கிங் நோய்த்தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் ரூ. 219 கோடி மதிப்பீட்டில் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை.
- தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் திரு.கி.ராஜநாராயணன் அவர்களுக்கு நினைவகம்.
- சென்னை பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையை 300 படுக்கைகள் கொண்ட கோவிட் மருத்துவமனையாகத் தரம் உயர்த்த ரூ.19.42 கோடி மதிப்பீட்டில் பணிகள்.
- சென்னை, கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகக் கட்டடம் ரூ.34.88 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகள்.





"அரசுப் பள்ளி மற்றும் கல்லூரிக் கட்டடங்கள், மருத்துவமனைக் கட்டடங்கள் மற்றும் அரசுத் துறை கட்டடங்களைத் தரமாகவும், விரைவாகவும் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

- கோவிட்–19, இரண்டாம் அலையினை எதிர்கொள்ள தமிழகத்திலுள்ள அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் மற்றும் ஆரம்பச் சுகாதார மையங்களில் 13,169 எண்ணிக்கையிலான கூடுதல் ஆக்சிஜன் இணைப்புகளுடன் கூடிய படுக்கை வசதிகள்.
- இந்திய சுதந்திரத்தின் 75ஆவது ஆண்டினை நினைவூட்டக்கூடிய வகையில், சென்னையில் ரூ.1.95 கோடி மதிப்பீட்டில் நினைவுத் தூண் அமைக்கும் பணிகள்.

நெடுஞ்சாலைகள் (ம) சிறு துறைமுகங்கள் துறை

- ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 857 கி.மீ. நீளமுள்ள சாலைகள் மற்றும் 112 சிறுபாலப்பணிகள் ரூ.479.75 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, சாலை ஓடுதளப் பரப்பினை மேம்படுத்தும் பணிகளில் 250 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ.50.33 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.
- ரூ.384 கோடி மதிப்பில் 4 புறவழிச் சாலைகளுக்கு நில எடுப்பு ரூ.128.70 கோடி மதிப்பில் 6.75 கி.மீ. நீளத்தில் திருவையாறு நகருக்குப் புறவழிச்சாலை அமைத்தல், ரூ.960 கோடி மதிப்பில் 192 கி.மீ. நீளத்தில் 11 சாலைகளைக் கடினப் புருவங்களுடன் கூடிய இருவழிச் சாலையாக அகலப்படுத்துதல், ரூ.676 கோடி மதிப்பில் 6 பாலங்கள் கட்டுதல், ரூ.406.75 கோடி மதிப்பில் 242.86 கி.மீ. நீளத்தில் 12 சாலைகளை உறுதிப்படுத்துதல், ரூ.336.66 கோடி மதிப்பில் 57 விபத்துப் பகுதிகளை (Black Spots)

நிரந்தரமாகச் சீரமைக்கும் பணி ஆகியப் பணிகளுக்காக மொத்தம் ரூ.2,892.11 கோடி மதிப்பிலான ஒப்புதல் வரம்பிற்கு மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. இப்பணிகள் இந்த ஆண்டில் செயலாக்கம்.

- ரூ.225.85 கோடி மதிப்பில் 2 இரயில்வே மேம்பாலம் உட்பட 8 பணிகளுக்குப் பணி உத்தரவு.
- தேசிய நெடுஞ்சாலையில் உள்ள 15 விபத்துப் பகுதிகளில் நிரந்தர சீரமைப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- தேசிய நெடுஞ்சாலை–4இல் மதுரவாயல் முதல் ஸ்ரீபெரும்புதூர் சுங்கச் சாவடி வரை 6 வழிச்சாலையாக அகலப்படுத்தும் பணி ரூ.428.95 கோடிக்கு வைப்பு நிதியின்கீழ், ஒப்புதல்.
- ரூ.115.33 கோடி மதிப்பில், 3 சாலைப் பணிகள் மத்திய சாலை மற்றும் உள்கட்டமைப்பு நிதித் திட்டத்தில் முடிக்கப்பட்டுள்ளன.
- ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் 20 பாலங்கள் ரூ.18.68 கோடி செலவில் நபார்டு வங்கி நிதியுதவியுடன் கட்டி முடிக்கப்பட்டு, 15 மாவட்ட மக்கள் பயன்.
- ரூ.486.01 கோடி மதிப்பீட்டில், 615 கி.மீ. நீளமுள்ள 268 ஊராட்சி ஒன்றிய, ஊராட்சி சாலைகள் மாநில நிதியின்கீழ், மாவட்ட இதரச் சாலைகளாகத் தரம் உயர்த்தப்பட்டு, 28 மாவட்ட மக்கள் பயன்.
- தமிழ்நாடு தொழிற்சாலைகள் இணைப்புத் திட்டத்தின்கீழ், 590 கி.மீ. நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகளை மேம்படுத்திடச் சென்னை – கன்னியாகுமரி தொழிற்தடத் திட்டப் பணிக்காக ஆசிய வளர்ச்சி வங்கியுடன் ரூ.3,554 கோடிக்குத் திட்ட ஒப்பந்தம்.
- ரூ.448.645 கோடி மதிப்பில் செங்கல்பட்டு – காஞ்சிபுரம் சாலை, மிலிட்டரி சாலை மற்றும் ரூ.446.42 கோடி மதிப்பில் ஓமலூர் – சங்ககிரி – திருச்செங்கோடு – பரமத்தி சாலை ஆகிய பணிகளுக்கு இ.பி.சி. ஒப்பந்த முறையில் ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுப் பணிகள் துவக்கம்.





மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர்
திரு.**எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
அவர்கள்

வேளாண்மை - உழவர் நலத்துறை

வேளாண்மைத்துறை

உணவு தானிய இயக்கம்

- உணவு தானியப் பயிர்களின் இலக்கான 37.5 இலட்சம் எக்டர் பரப்பில் 4.349 இலட்சம் எக்டர் சாகுபடி. இச்சாதனை கடந்த ஆண்டு சாகுபடி செய்யப்பட்ட 4.137 இலட்சம் எக்டர் பரப்பைவிட 0.212 இலட்சம் எக்டர் அதிகமாகும்.
- மேட்டூர் அணை ஜூன் 12ஆம் தேதி திறக்கப்பட்டுக் குறுவை தொகுப்புத் திட்டத்திற்கு ரூ.61.09 கோடி நிதி ஒதுக்கீடு. டெல்டா மாவட்டத்தில் குறுவை சாகுபடி 1.41 இலட்சம் எக்டர் பரப்பளவில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டு, 1.52 இலட்சம் எக்டர் நடவு.
- 2,841 மெ.டன் நெல் விதைகள் விநியோகம் செய்யப்பட்டு, 52,800 எக்டர் பரப்பளவிற்கு 1,10,355 விவசாயிகள் பயன். 13,760 மெ.டன் உரங்கள் 33,540 எக்டர் பரப்பளவிற்கு விநியோகிக்கப்பட்டு 71,063 விவசாயிகள் பயன்.
- நெல் சாகுபடி இதுநாள் வரை 3.10 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 2.50 இலட்சம் எக்டர் சாகுபடி செய்யப்பட்ட பரப்பளவை விட 0.60 இலட்சம் எக்டர் கூடுதலாகும்.

வேளாண்மை, வேளாண்மை பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவு சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை, கரும்புப் பயிர் மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு



- 0.73 இலட்சம் எக்டர் பரப்பளவில் சிறுதானியங்கள் பயிரிடப்பட்டுள்ளன.
- 46,800 எக்டர் பரப்பில் பயறுவகைப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.
- எண்ணெய் வித்துப் பயிர்கள் 1.23 இலட்சம் எக்டர் பரப்பில் பயிரிடப்பட்டுள்ளது.
- தென்னையில் மறுநடவு மற்றும் புத்தாக்கத் திட்டம் ஆகிய இனங்களில் திட்டத்தினைச் செயல்படுத்திட நிருவாக ஒப்புதல்.
- சொட்டுநீர்ப் பாசன அமைப்புகள் ரூ.64.23 கோடி நிதிச் செலவில் 9,356 விவசாயிகள் பயன்பெறும் வகையில் நிறுவப்பட்டுள்ளது.
- 3,232 மெட்ரிக் டன் தரமான சான்று பெற்ற நெல் விதைகள் விவசாயிகளுக்கு விநியோகம்.
- உயிரியல் பூச்சிக்கொல்லிகள் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகளை விவசாயிகளுக்கு வழங்கிட ஏதுவாக, புதியதாக 11 உற்பத்தி மையங்கள் தொடங்கப்பட்டுச் செயல்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.
- "தமிழ்நாடு நிலைக்கத்தக்க மானாவாரி வளர்ச்சி இயக்கம்" என்ற உன்னதத் திட்டம் 3 இலட்சம் எக்டரில் 3 இலட்சம் விவசாயிகள் பயனுறும் வகையில் நடப்பாண்டில் செயல்படுத்திட ரூ.146.64 கோடி மதிப்பீட்டில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இயற்கை உரங்களைத் தங்கள் வயல்களிலேயே உற்பத்தி செய்துகொள்ளும் வகையில் ரூ.1.88 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களுக்கு நிதி ஒப்புதல்.
- தமிழ்நாடு நீர்வள நிலவளத்திட்டத்தின்கீழ், "மாதிரி கிராமத் திட்டத்தைச்" செயல்படுத்த ரூ.62 இலட்சம் மாநில அரசால் நிதி ஒப்புதல்.
- அட்மா திட்டத்தில் நவீன வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்த 1,213 பயிற்சிகள் 50 கண்டுணர் பயணங்கள் 42 பண்ணைப்



"தமிழ்நாட்டில் அடுத்த பத்தாண்டுகளுக்குள் கூடுதலாக 11.75 இலட்சம் எக்டர் பயிரிடச்செய்து தற்போதுள்ள நிகரச் சாகுபடிப் பரப்பான 60 விழுக்காட்டிலிருந்து 75 விழுக்காடு உயர்த்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்



பள்ளிகள் மற்றும் 218 செயல் விளக்கத் திடல்கள் ரூ.1.52 கோடி செலவில் நடத்தப்பட்டு 53,288 விவசாயிகள் பயன்.

- 2021–2022ஆம் ஆண்டில், இதுவரை 2,10,795 மண் மாதிரிகள் எடுக்கப்பட்டு, 1,37,148 மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, 48,018 மண்வள அட்டைகள் விவசாயிகளுக்கு விநியோகம்.

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்துறை

- ரூ.113.26 கோடி செலவில் நுண்ணீர்ப் பாசனம் நிறுவப்பட்டுள்ளது. 14,996 விவசாயிகள் பயன்.
- ரூ.3.95 கோடி மதிப்பில், 1,937 எக்டர் பரப்பளவில் தோட்டக்கலைப் பயிர்கள் பரப்பு விரிவாக்கம். ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில், 50 எண்கள் மண்புழு உரக்கூடம். ரூ.36 இலட்சம் மதிப்பீட்டில் 300 நடமாடும் விற்பனை வண்டிகள். ரூ.92 இலட்சம் நிதியில் 736 எக்டர் பரப்பிற்குத் தேவையான வாழைத்தார் உறைகள் வழங்கப்பட்டுள்ளது.
- நீர் மேலாண்மைத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி 31,432 எக்டர் பரப்பளவில் பழங்கள், வீரிய ஒட்டு ரக காய்கறிகள், நறுமணப் பயிர்கள் மற்றும் பூக்கள் ரூ.95.79 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டு 47,856 விவசாயிகள் பயன்.
- தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 87 எக்டர் பரப்பில் ரூ.1.74 கோடியில் நிரந்தரப் பந்தல் சாகுபடி. ரூ.2.16 கோடி நிதியில் 2,398 எக்டர் பரப்பில் அங்கக முறையில் காய்கறிச் சாகுபடி. 366 எக்டர் பரப்பில் ரூ.43.88 இலட்சம் நிதியில் முந்திரிப் பயிர்ச் சாகுபடி.
- ரூ.34 இலட்சம் நிதியில் 17 எண்கள் அறுவடை பின் செய் கட்டமைப்புகள். ரூ. 23 இலட்சம் நிதியில் 184 எண்கள் நிரந்தர மண்புழு உரக்கூடம்.
- பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில், 1,000 எக்டர் பரப்பில் ரூ.80 இலட்சம் நிதியில் அங்கக வேளாண்மை முறையில் சாகுபடி.
- அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகளில், பழக்கன்றுகள் மற்றும் காய்கறி நாற்றுகள் சுமார் 25 இலட்சம் நடவுச்செடிகள் மற்றும் குழித்தட்டு நாற்றுகள் உற்பத்திச் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு அரசுத் திட்டங்கள் மூலமாகவும், நேரடியாகவும் விநியோகம்.

வேளாண்மைப் பொறியியல்துறை

- குறுவைச் சாகுபடிப் பணியில் 93 டிராக்டர்களைக் கொண்டு 16,706 மணிகள் உழவுப் பணிகள்.

- இயந்திரங்கள், குறைந்த வாடகைக்கு வழங்கப்பட்டு, 8,558 விவசாயிகள் பயன்.
- காவிரி டெல்டா பகுதிகளில் உள்ள ஆறுகள் தூர்வாரும் பணியில் 43 மண் தள்ளும் இயந்திரம் கொண்டு 6,811 மணிநேரம் ஈடுபடுத்தப்பட்டு அரசுக்கு வாடகை ரூ.57.21 இலட்சம் வருவாய்.
- உபவடி நிலப்பகுதிகளில் 60 பண்ணைக் குட்டைகள் அமைப்பு. 60 விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ.9.10 இலட்சம் மானியத்தில் 10 சூரிய மின்வேலி அமைப்புகள்.

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை

- கொரோனா காலத்தில் விவசாயிகள் விளைபொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கு 282 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் தங்கு தடையின்றிச் செயல்பட்டு விவசாயிகள் மற்றும் வியாபாரிகளுக்கிடையே ரூ.325 கோடி மதிப்பிலான 1.15 இலட்சம் மெட்ரிக் டன் விளைபொருட்கள் பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்டு, 469 கிடங்குகளில் 77,766 மெ.டன் விளைபொருட்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மேலும், பொருளீட்டுக் கடனாக 225 விவசாயிகள் ரூ.3.73 கோடி பெற்றுள்ளனர்.
- ஊரடங்கு காலத்தில் உழவர் சந்தை விவசாயிகள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களால் 48,388 மெ.டன் காய்கறிகள் மற்றும் பழங்கள் 85,129 வாகனங்கள் மூலம் நுகர்வோர்களுக்கு நேரடியாக விற்பனை.



- விவசாயிகள் உதவி மையத்துடன் கூடிய கட்டுப்பாட்டு அறை மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் ஏற்படுத்தப்பட்டு ஊரடங்கு காலத்தில் விவசாயிகள் மற்றும் நுகர்வோர்கள் எதிர்கொண்ட சிரமங்கள் உடனுக்குடன் களையப்பட்டது.
- திருவாரூர் மாவட்டத்தில் ரூ.30.50 கோடி மதிப்பீட்டில் நெல் சேமிப்புக் கிடங்குகள் மற்றும் உலர் களங்கள் அமைக்கப்படும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 50ஆவது நிறுவன நாள் மற்றும் பொன்விழா ஆண்டு துவக்க விழா இணைய வழியின் மூலமாக 01.06.2021 அன்று நடைபெற்றது.
- இந்திய வேளாண் வணிக மேலாண்மைக் கல்வி நிறுவனங்களின் செயல் திறன் குறித்தத் தரவரிசைப் பட்டியலில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் வேளாண் மற்றும் ஊரக மேலாண்மைத் துறை, இந்திய மேலாண்மை நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்திந்திய வேளாண்

வணிகக் கல்வி நிறுவனங்களில் தேசிய அளவில் 15ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்றுத்துறை இயக்குநரகம்

- விதைப்பண்ணைகள் 16,877 எக்டர் பரப்பளவில், பல்வேறு பயிர்களில் பதிவு செய்யப்பட்டு, 48,039 மெட்ரிக் டன் அளவு விதைகளுக்குச் சான்றளிப்புச் செய்யப்பட்டுள்ளது.
- விதை விற்பனை மையங்களில் 22,189 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, விதைத் தரங்களை உறுதி செய்திட 14,589 விதை மாதிரிகள் சேகரிக்கப்பட்டுப் பகுப்பாய்வு மேற்கொண்டு, 666 மெட்ரிக் டன் விதைகள் வேளாண் பெருமக்களுக்கு விற்பனை செய்வதிலிருந்து தடை.
- 29 அறிவிக்கை செய்யப்பட்ட விதைப் பரிசோதனை நிலையங்களில், 26,646 விதை மாதிரிகளின் தரங்கள் பரிசோதிக்கப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளது.
- இத்துறையின் பயிற்சிப் பிரிவின் மூலம் 15,773 நபர்களுக்குப் பயிற்சி.
- 28 அங்ககச்சான்று நிறுவனங்களில், தமிழ்நாடு அங்ககச் சான்றளிப்புத்துறை மிக அதிகமான தனிநபர் விவசாயிகளை உள்ளடக்கிய நிறுவனம் என்ற தனித்துவம் பெற்றுள்ளது. அங்ககச் சான்றளிப்பிற்காக 27,504 ஏக்கர் பரப்பு பதிவு.
- தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று துறையில் மின் ஆளுமையைச் செயல்படுத்தும் பொருட்டு ரூ.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

சர்க்கரைத்துறை

- தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுத்துறை, பொதுத்துறை மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகளால் 53,000 ஏக்கர் கரும்பு பதிவு செய்யப்பட்டுள்ளது.
- கரும்பு உற்பத்தித் திறன் மற்றும் சர்க்கரை கட்டுமானத்தை மேம்படுத்தக் குறுகிய கால மற்றும் அதிக சர்க்கரை சத்துடைய புதிய கோ 11015 இரகக் கரும்பு 10,128 ஏக்கர் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளால் ரூ.141.70 கோடியும், தனியார் சர்க்கரை ஆலைகளால் ரூ.305.21 கோடியும் ஆகமொத்தம், ரூ.446.91 கோடி நியாயமான மற்றும் ஆதாய விலையாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.





வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.**கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன்** அவர்கள்

வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம்

- ‘உங்கள் தொகுதியில் முதலமைச்சர்’ துறையின்கீழ், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்ந்த 1,12,700 மனுக்கள் பெறப்பட்டு, 25,423 மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளது. 2,675 மனுக்கள் பரிசீலனையில் உள்ளது.
- மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, ரூ.8,398.18 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கொரோனா ஊரடங்கு காலத்தில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைத்தாரர்களுக்கும் தலா ரூ.4,000 வீதம் நிவாரணம் வழங்கப்பட்டது.
- அகதிகள் முகாமில் வசிக்காத இலங்கைத் தமிழ் அகதிகளுக்கும் ரூ.4,000 வீதம் நிவாரணம் வழங்கப்பட்டது.
- கனமழை, வெள்ளம், புயல், நிலநடுக்கம், சுனாமி போன்ற பேரிடர்கள் குறித்தான முன்னெச்சரிக்கை தகவல்களை

வருவாய், மாவட்ட வருவாய் பணியமைப்பு, துணை ஆட்சியர்கள், பேரிடர் மேலாண்மை





உடனுக்குடன் தெரிவித்திட தனி வாட்ஸ்அப் எண் 9445869848 துவக்கப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- பேரிடர் காலங்களில் பொதுமக்கள் அவர்கள் வசிக்கும் பகுதிகளில் ஏற்படக்கூடிய பேரிடர் ஆபத்துகள் குறித்த தகவல்களைத் தெரிவிக்க ஏதுவாக தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் இணையதளத்தில் மக்கள் களம் (citizen corner) வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- இடி, மின்னல் காரணமாகத் திறந்த வயல் வெளியில் உள்ளவர்கள் உயிரிழப்பதைத் தவிர்க்கும் பொருட்டுத் தமிழ்நாடு அரசு புனேவில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்துடன் மேற்கொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இடி, மின்னலின் தாக்கம் தொடர்பான தகவல்களை முன்கூட்டியே பெறப்பட்டுப் பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளுக்குத் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 'டவ்தே' புயல் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்துப் பல்வேறு துறைகளின் அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டன. இதன் காரணமாக, 227 படகுகள் பாதுகாப்பாகக் கரைக்குத் திரும்பியுள்ளன. 'டவ்தே' புயல் காரணமாகக் காணாமல் போன 21 மீனவக் குடும்பங்களுக்கு மாநிலப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.4 இலட்சம் வீதம் ரூ.84 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

- யாஸ் புயல் எச்சரிக்கையைத் தொடர்ந்து, மாநில அவசரக் கட்டுப்பாட்டு அறையில் புயலின் தாக்கத்தை எதிர்கொள்ள எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு அறிவுரை வழங்கினார்.

- தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலர், அவர்கள் 21.05.2021 அன்று அனைத்து மாவட்ட ஆட்சியர்களுடன் காணொலிக் காட்சி மூலம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுரை வழங்கினார். இதன் காரணமாக, ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்ற 45 நாட்டுப்படகுகள் பத்திரமாகக் கரைக்குத் திரும்பின.

- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் யாஸ் மற்றும் டவ்தே புயலால் ஏற்பட்ட பயிர் சேதங்களுக்கு,உயர்த்தப்பட்டநிவாரணமாக



மானாவாரி மற்றும் நீர்ப்பாசன வசதி பெற்ற நெற்பயிர்களுக்கும், நீர்ப்பாசன வசதி பெற்ற இதரப் பயிர்களுக்கும் இடுபொருள் நிவாரணத் தொகையாக எக்டர் ஒன்றுக்கு ரூ.20 ஆயிரமும், மானாவாரி நெற்பயிர் தவிர, அனைத்து மானாவாரிப் பயிர்களுக்கும் இடுபொருள் நிவாரணத்தொகையாக எக்டர் ஒன்றுக்கு ரூ.10 ஆயிரமும், பல்லாண்டு காலப் பயிர்களுக்கு இடுபொருள் நிவாரணத் தொகையாக எக்டர் ஒன்றுக்கு ரூ.25 ஆயிரமும் வழங்கிட ஆணையிட்டார்.



நில நிருவாகம்

- தமிழகம் முழுவதும் மாவட்ட வாரியாகக் கடந்த 100 நாட்களில் 2,638 கணினி மூலம் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

நிலச்சீர்திருத்தம்

முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்

- முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் 2001ஆம் ஆண்டில் "தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்புத் திட்டம்" ஆகச் செயல்படுத்தப்பட்டது.
- இத்திட்டத்தின்கீழ், 5 ஏக்கர் வரை புன்செய் நிலம் அல்லது 2.50 ஏக்கர் வரை நன்செய் நிலம் வைத்திருந்து அதில் நேரடியாக விவசாயம் செய்யும் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், குத்தகை அடிப்படையில் விவசாயம் செய்யும் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் பயன்பெற்று வருகின்றனர்.
- இத்திட்டத்தின்கீழ், கல்வி, திருமணம், முதியோர் ஓய்வூதியம், விபத்து நிவாரணம், இயற்கை மரண உதவித்தொகை, ஈமச்சடங்கு செலவு, காசநோய், புற்றுநோய், எச்.ஐ.வி., எய்ட்ஸ், இடைச் சவ்வூடு மூலம் பிரித்தல், கை, கால் சம்பந்தப்பட்ட எலும்பு முறிவு மற்றும் நிலைகுலைவு, நரம்பு சம்பந்தப்பட்ட நோய், முதுகுத் தண்டுவடம் பாதிப்பு, இதய நோய், பார்வை இழத்தல், கல்லீரல் நோய், சிறுநீரக நோய், மனநிலை பாதிப்பு, அரிவாள் செல் இரத்தச் சோகை, இரத்த அழிவு சோகை, இரத்த உறையா நோய் போன்ற நோய்களினால் பாதிக்கப்பட்ட விவசாய உறுப்பினர்களின் தற்காலிக உடல் திறனற்ற காலத்திற்கு மாத உதவித்தொகை மற்றும் எச்.ஐ.வி.யினால் உயிரிழந்த உறுப்பினரின் ஆதரவற்ற குழந்தைகளுக்கு உதவித்தொகை ஆகியவை பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றன.
- 1,46,95,883 நபர்கள் உறுப்பினர்களாகவும், 1,35,75,065 நபர்கள் உறுப்பினர்களைச் சார்ந்து வாழும் உறுப்பினர்களாகவும் மொத்தம் 2,82,70,948 நபர்கள் இத்திட்டத்தின்கீழ் கணக்கெடுக்கப்பட்டுள்ளனர்.
- இப்புதிய திட்டத்தின்கீழ், ரூ.41.61 கோடி 64,189 பயனாளிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது.
- நடப்பு நிதியாண்டில் அரசால் வழங்கப்பட்ட ரூ.187.22 கோடி அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

வருவாய் நீதிமன்றம்

- பயிரிடு குத்தகைதாரர்கள் மற்றும் நில உடமைதாரர்கள் ஆகியோர்களுக்கு

இடையே ஏற்படும் தகராறுகள் மாநிலத்தில் உள்ள 10 வருவாய் நீதிமன்றங்களால் தீர்த்து வைக்கப்படுகின்றன.

- 30.04.2021 அன்று 2,965 வழக்குகள் நிலுவையில் இருந்தன. 07.05.2021 முதல் 29.07.2021 வரை 356 வழக்குகள் வரப்பெற்று, மொத்தம் நிலுவையில் உள்ள 3,321 வழக்குகளில் 07.05.2021 முதல் 29.07.2021 வரை 157 வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன. 29.07.2021 அன்று 3,164 வழக்குகள் மாவட்டத்தில் உள்ள 10 வருவாய் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன.

நில அளவை மற்றும் நிலவரித் திட்டம்

- இணையவழிப் பட்டா மாறுதல் திட்டத்தின் கீழ், 1,12,012 பட்டா மாறுதல் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.
- மாநிலத்திலுள்ள அனைத்து நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளிலும் வருவாய்ப் பதிவேடுகளிலுள்ள பதிவுகளை இன்றைய நிலையில் மேம்படுத்தவும், நில உரிமையாளர்களுக்குப் பட்டா வழங்கவும் மாவட்ட வருவாய் நிருவாகப் பராமரிப்பிற்கென நில ஆவணங்களைத் தயாரித்து அளிக்கவும், நகர நிலவரித் திட்டப் பணி தொடங்கப்பட்டது.
- இதன்படி, தற்போது நகர நிலவரித்திட்டப் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கும் 60 அலகுகளில் 07.05.2021 முதல் 26.07.2021 வரை 8,378 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி

- அறியாமல் கிரையம் பெற்றோர் நிலத்தை வரன்முறைப்படுத்தும் திட்டத்தின்கீழ், 07.05.2021 முதல் 29.07.2021 வரை 4 இனங்களில் 34,273 ச.அடி. பரப்பளவு கையகப்படுத்தப்பட்ட நிலங்களை வரன்முறை செய்ய அரசால் இசைவு தெரிவிக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் 1966, திருத்தச் சட்டம் 1991இன் கீழ் 1,430 பசலி ஆண்டான நகர்ப்புற நிலவரி கேட்புத் தொகையாக ரூ.18.36 கோடி நிருணயம் செய்யப்பட்டு ரூ.56 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.



"மாநில நிருவாகத்திற்கு முதுகெலும்பாகத் திகழும் வருவாய்த்துறை, மக்கள் குறைதீர்க்கும் பணிகளைத் தாமதமின்றி மேற்கொள்ளவேண்டும்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்



மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்
திரு. **தங்கம் தென்னரசு**
அவர்கள்

தொழில்கள், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு, தொல்லியல்

தொழில்துறை

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில், "தமிழ்நாடு – முதலீட்டாளர்களின் முதல் முகவரி" என்ற சிறப்பு நிகழ்ச்சியின் வாயிலாக 49 திட்டங்களின் மூலம் ரூ.28,508 கோடி முதலீட்டில், 83,482 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கம்.



- 24 துறைகளில் 100 சேவைகளுடன், "ஒற்றைச் சாளர இணையதளம் 2.0" என்ற முழுமையாக டிஜிட்டல் மயமான இணையதளம் தொடக்கம்.
- ரூ.500 கோடி மதிப்பீட்டில் தொழில் சுற்றுச்சூழல் அமைப்பு நிதி (Industrial Eco-System Fund) ஒன்றை உருவாக்க அரசாணை. இதன்மூலம், தொழில் பூங்காக்கள், தொழில் நிறுவனங்கள், புதிய கண்டுபிடிப்புகளுக்கான புத்தாக்க மையங்கள் (Innovation Centres), ஆராய்ச்சி மற்றும்



மேம்பாட்டு நடவடிக்கைகள், போன்றவற்றிற்குத் தேவைப்படும் உள்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ள இயலும். இதற்கென, முதற்கட்டமாக ரூ.95.84 கோடி ஒதுக்கீடு.

- உயர்தர உற்பத்தி தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, விண்வெளி மற்றும் பாதுகாப்புத்துறையில் உள்ள தொழிலகங்களுக்கான விமானம் மற்றும் விமான இயந்திரப் பாகங்கள் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக, General Electric நிறுவனம், திறன்மிகு மையம் (Centre of Excellence) ஒன்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு முதலமைச்சர் முன்னிலையில் General Electric நிறுவனம் மற்றும் டிட்கோ நிறுவனத்திற்கிடையே மேற்கொள்ளப்பட்டது.

- கொரோனா இரண்டாவது அலையின்போது ஆக்சிஜன் தேவையினைச் சரிசெய்யும் பொருட்டு, சத்தீஸ்கர், ஒடிசா, மேற்கு வங்காளம் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களிலிருந்து 5,751.99 மெட்ரிக் டன் திரவ மருத்துவ ஆக்சிஜன், சாலை மற்றும் இரயில் மார்க்கமாகக் கொண்டுவரப்பட்டது.

- சிங்கப்பூர் மற்றும் துபாயிலிருந்து 1,915 ஆக்சிஜன் உருளைகள் (oxygen cylinders), 2,380 ஆக்சிஜன் முறைப்படுத்தும் கருவிகள் (oxygen regulators), 3,250 ஓட்ட அளவு உருளைகள் (medical oxygen flow meters), 185 ஆக்சிஜன் செறிவூட்டிகள் (oxygen concentrators), 800 ஆக்சிஜன் நிரப்பப்பட்ட உருளைகள் (filled cylinders), ஆகியவற்றை சிப்காட் நிறுவனம் இறக்குமதி.

- ஆக்சிஜன் செறிவூட்டிகள், ஆக்சிஜன் சிலிண்டர்கள், மருத்துவ ஆக்சிஜன் மற்றும் பெரிய திரவ ஆக்சிஜன் ஆலைகளின் வணிக உற்பத்தியைத் தொடங்கும் முதலீட்டாளர்களுக்கு இதர சலுகைகளுடன், 30 சதவீத மூலதன மானியத்தையும் வழங்க அரசு ஆணை. இந்த ஊக்கச் சலுகையானது 2021ஆம் ஆண்டு ஜனவரி 1 முதல், 2022ஆம் ஆண்டு டிசம்பர் 31 வரையிலான முதலீடுகளுக்குக் கிடைக்கப்பெறும்.

- தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், கரூரில் உள்ள சமுதாயக்கூடத்தில் கொரோனா சிகிச்சை மையத்தை 200 படுக்கைகளுடன் நிறுவி உள்ளது. இதில், 152 படுக்கைகள் ஆக்சிஜன் வசதியுள்ளவைகள். மேலும், ஆக்சிஜன் Booster compressor மற்றும் filling station–ஐ ரூ.1 கோடி செலவில் நிறுவி அருகில் உள்ள மருத்துவமனைகளுக்கு, ஆக்சிஜனை சிலிண்டர்களில் நிரப்பி வழங்கி வருகிறது.

கலைப் பண்பாட்டுத் துறை

- தமிழ்த் திரையுலகில் மிகப்பிரபலமாக விளங்கிய திரு.எம்.கே.தியாகராஜ பாகவதர் அவர்களின் மகள் வழிப் பேரன் திரு.சாய்ராம் மற்றும் அவரது குடும்பத்தினர் வறிய நிலையில் வசித்து வருவதால் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.5 இலட்சம் நிதியுதவி.



- தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தில் உறுப்பினர்களாகப் பதிவு செய்துள்ள 1,619 கலைஞர்களுக்கு ரூ.16,16,900 மதிப்பிலான நலத்திட்ட உதவிகள்.

- நலிந்த கலைஞர் நிதியுதவித் திட்டத்தின் கீழ் 20 மரபுரிமையினர்களுக்கு ஓய்வூதியம் ஒப்பளிக்கப்பட்டு ரூ.19.49 இலட்சம் நிலுவைத் தொகை வழங்கல்.

அருங்காட்சியகங்கள்

- சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்சுற்று தொலைக்காட்சிகள் மற்றும் பல்வேறு பாதுகாப்பு மேலாண்மை கட்டுப்பாட்டு அமைப்பு (Security Management Control System - SMCS) ரூ.2.50 கோடி செலவில் திருவாளர் எல்காட் நிறுவனத்தின் மூலம் நிறுவும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி வெளியிடப்படவுள்ளது.

- சென்னை அரசு அருங்காட்சியக பாந்தியன் (முதன்மை) கட்டடத்தை (1780) முழுமையாக மீட்டுருவாக்கியும் மற்றும் தேசியக் கலைக் கூடத்தில் காட்சிக்கூடங்களை மேம்படுத்துவதற்கான திட்ட மதிப்பீட்டில் ஒன்றிய அரசு ரூ.10.82 கோடி வழங்க அனுமதி அளித்தும், பாரம்பரியச் சூழல் மற்றும் உட்கட்டமைப்பு கொண்ட உணவகம் அமைப்பதற்கு ரூ.2.81 கோடி நிதி ஒதுக்கீடு செய்தும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளைத் திட்ட மதிப்பீட்டின்படி மேற்கொள்வதற்கும் ரூ.4.80 கோடி நிதி ஒதுக்கப்பட்டு விரைவில் பணிகள் துவக்கப்பட உள்ளன.

- சேலம் மாவட்ட அரசு அருங்காட்சியகத்திற்காக 50 சென்ட் அரசு நிலத்தில் புதிய கட்டடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திமாற்றியமைப்பதற்காகத் தொடராச் செலவினமாக ரூ.5 கோடிக்கு ஆணை. அரியலூர் புதையுயிரி படிவ அருங்காட்சியகத்தினை சுற்றுச் சுவர் அமைத்துப் பாதுகாக்க ரூ.90 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

- அரசு அருங்காட்சியகம், சென்னை மற்றும் மாவட்ட அரசு அருங்காட்சியகங்கள் மூலம் பல்வேறு கல்விப் பணிகள் நடத்தி, சென்னைப் பல்கலைக்கழகம் மற்றும் பல கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு இணைய வழியாக அருங்காட்சியக வழிக் கற்றலை ஊக்குவித்து தமிழர் தம் பண்பட்ட அறிவினைப் பரவலாக்கும் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தொல்லியல் துறை

- 2020–2021ஆம் பருவத்தில் 7 இடங்களில் தொல்லியல் அகழாய்வுகளும், 2 இடங்களில்



கள ஆய்வுகளும் ரூ.3 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- சிவகங்கை மாவட்டத்தில் கீழடி மற்றும் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை, ஈரோடு மாவட்டத்திலுள்ள கொடுமணல், கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள மயிலாடும்பாறை மற்றும் அரியலூர் மாவட்டத்திலுள்ள கங்கைகொண்ட சோழபுரம், மாளிகைமேடு ஆகிய 7 இடங்களில் தொல்லியல் அகழாய்வுகள் நடைபெற்று வருகின்றன.
- வேலூர், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, தருமபுரி மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் புதிய கற்கால இடங்களைக் கண்டறிதல், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகத்தைக் கண்டறிதல் என இரண்டு கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ் வளர்ச்சித் துறை

- தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்க ரூ.5 இலட்சம் மற்றும் பாராட்டிதழுடன் "இலக்கிய மாமணி" என்ற விருது அறிவிப்பு.
- தமிழ்நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர்களில் ஞானபீடம், சாகித்திய அகாடமி போன்ற தேசிய விருதுகள், மாநில இலக்கிய விருதுகள், புகழ்பெற்ற உலகளாவிய அமைப்புகளின் விருதுகள் பெற்றவர்களுக்கு அரசு மூலமாக வீடு வழங்கப்படும்.
- ரூ.1.25 கோடி கொலோன் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைக்குத் தமிழ்நாடு அரசின் சார்பில் வழங்கப்பட்டது.

தமிழ்ப் பல்கலைக்கழகம்

- தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் கலைஞர் உலகச் செம்மொழிகள் உயராய்வு மையம் அரசு உதவியுடன் செயல்படுத்திட முடிவு.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

- "கி.ரா.வின் படைப்புலகமும் படைப்பு மொழியும்" என்னும் பொருண்மையில் பயிலரங்கம் 5 நாட்கள் இணையவழி வாயிலாக நடத்தப்பட்டது.
- "பன்முக ஆளுமையாளர் கலைஞர்" என்னும் பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கம் 16 நாட்கள் இணையவழி வாயிலாக நடத்தப்பட்டது.
- "பேராசிரியர் கா.சிவத்தம்பி பத்தாவது ஆண்டு நினைவு" பன்னாட்டுக் கருத்தரங்கம் 7 நாட்கள் இணையவழி வாயிலாக நடத்தப்பட்டது.

உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

- 'தமிழ்க்கூடல்' என்ற பெயரில் தமிழிலக்கியத்திற்கு வளம் சேர்க்கும் வகையில் இணையவழி வாயிலாகத் தமிழாய்வுக் கூட்டம், பதிற்றுப்பத்து கூறும் வரலாற்றுச் செய்திகள் – ஓர் ஆய்வு நோக்கு, இந்திரவிழா – மீள் பார்வை, சிலம்பில் கானல்வரி என்ற தலைப்புகளில் நடத்தப்பெற்றன.

- மேனாள் முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் பிறந்தநாளைச் சிறப்பிக்கும் வண்ணம் 'நிலைத்த புகழோடு நீடு வாழ்கிறார் கலைஞர்' என்ற தலைப்பில் இணையவழிப் பன்னாட்டுக் கவியரங்கம் நடத்தப்பட்டது.
- தமிழ் இலக்கியத்தில் சிறப்பிடம் பெற்றுள்ள சிற்றிலக்கியம் 96 வகையை இன்றைய தலைமுறையினர் அறிந்து உணரும் நோக்கில் 'சிற்றிலக்கிய வகைமை – ஒரு நோக்கு' என்ற தலைப்பில் இணையவழிப் பன்னாட்டுக் கருத்தரங்கம் 2 பகுதிகளாக நடத்தப்பெற்றன.
- இக்கருத்தரங்கில், இக்கால தலைமுறையினருக்கு மொழிபெயர்ப்பின் அவசியத்தையும் அதன் பயன்களையும் கொண்டு சேர்க்கும் விதமாக, ஆஸ்திரேலியா, சிட்னி தமிழ் வளர்ச்சி மன்றத்துடன் இணைந்து 'வாழ வைக்கும் மொழி' என்ற தலைப்பில் இணையவழிப் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்பெற்றது.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

- 1974ஆம் ஆண்டு "முத்தமிழறிஞர்" கலைஞர் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தால் பல்வேறு அகராதிப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன.
- 2021 மே முதல் சூலை வரை 4,265 தமிழ்க் கலைச்சொற்கள் தொகுக்கப்பட்டு, வல்லுநர் குழுவின் ஏற்புக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- சொற்குவை வலைத்தளத்தில் (sorkuvai.com) 2021 சூலை வரை 3,88,776 தமிழ்ச் சொற்கள் பதிவேற்றம் செய்யப்பட்டிருந்த நிலையில், 2021 ஆகஸ்டு மாதத்தில் 2,906 தமிழ்ச் சொற்கள் கூடுதலாகப் பதிவேற்றம் செய்யப்பட்டு, தற்போது 3,91,682 தமிழ்ச் சொற்கள் உலக மக்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளன.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், விப்ரோ நிறுவனத் தலைவர் அவர்களுடன் இளைஞர்களுக்குத் தொழில்நுட்பப் பயிற்சிகள் வழங்குதல் குறித்து காணொலி வாயிலாகக் கலந்துரையாடல் (10.08.2021).

சட்டத்துறை



மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்
திரு. **எஸ். இரகுபதி**
அவர்கள்

சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்புச் சட்டம்

- திருநெல்வேலி அரசு சட்டக்கல்லூரிக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணிகளுக்கு ரூ.4.70 கோடி நிதி ஒப்பளிப்பு.
- தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக் கழகமானது, தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் இரண்டாவது அகில இந்தியச் சட்ட வரலாற்று மாநாட்டை 2021ஆம் ஆண்டு மே மாதம் 21 மற்றும் 22ஆம் தேதிகளில் இணையவழியில் '21ஆம் நூற்றாண்டில் இந்திய சட்ட வரலாற்றின் தேடல்' என்ற கருப்பொருளின் அடிப்படையில் நடத்தியது. இம்மாநாட்டில், 55 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம், தேசிய மற்றும் சர்வதேச அளவில் 55 கருத்தரங்கங்கள், கருத்துப்பட்டறைகள் மற்றும் மாநாடுகளை இணையவழி மூலம் பல்வேறு தலைப்பில் தொடர்ச்சியாக 09.04.2021 முதல் 23.07.2021 வரை நடத்தியுள்ளது. அந்நிகழ்வுகளில், பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்ற அனைத்து சட்டக் கல்லூரிகளும் பங்கேற்றன.
- சட்டம் மற்றும் புலனிடைத்துறை சார் ஆய்வு முறை என்ற தலைப்பில் செயலூக்கம் உடைய கற்பித்தல் நுட்பங்களைப்





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில் தலைவர்கள் மற்றும் நிருவாகிகள் சந்திப்பு

புகுத்துதல் மற்றும் மேம்பாட்டிற்கான கருத்தரங்கைத் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் ஜூலை மாதம் 11 முதல் 17 வரை நடத்தியது. இதில் பல்வேறு அறிஞர்கள், மாண்புமிகு நீதியரசர்கள், பேராசிரியர்கள் மற்றும் கல்வியாளர்கள் பங்கேற்றனர்.

✸ தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் 2021ஆம் ஆண்டு ஜெர்மனியிலுள்ள நியூரம்பர்க் மாகாணத்தில் நடைபெற்ற உலகளாவிய "நியூரம்பெர்க் மாதிரி நீதிமன்றப் போட்டி 2021" சுற்றுகளில் பங்கேற்றுச் சிறந்த வழக்காடலுக்கான விருதை வென்றுள்ளனர்.



"அடுத்த ஐந்தாண்டுகளில் அனைத்து நீதிமன்றங்களுக்கும் தேவையான கட்டடங்கள் உட்பட அடிப்படை வசதிகள் இருப்பதை உறுதிசெய்யவேண்டும்"

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்



மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்
திரு. **சு.முத்துசாமி** அவர்கள்

வீட்டுவசதி, ஊரக வீட்டுவசதி, நகரமைப்புத் திட்டமிடல் மற்றும் வீட்டுவசதி மேம்பாடு, இடவசதி கட்டுப்பாடு, நகரத்திட்டமிடல், நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்

- 138 குடியிருப்புகள் மற்றும் 4 வணிக மனைகள் உள்ளடக்கிய 142 அலகுகளுக்கான உரிமை ஆவணங்கள் ஒதுக்கீடுதாரர்களுக்கு வழங்கல்.
- 114 குடியிருப்பு அலகுகள் விற்பனை செய்து ரூ.80.72 கோடி வருவாய்.
- முன்னாள் கருநாடக இசைக் கலைஞர் (ம) திரைக்கலைஞருமான திரு. எம்.கே. தியாகராஜ பாகவதர் அவர்களின் பேரன் திரு. சாய் ராம் அவர்களுக்குப் பொது ஒதுக்கீடு வாயிலாக மாத வாடகை ரூ.4,618க்குப் பதிலாகக் குறைந்த வாடகையாக ரூ.450ஐ நிருணயம் செய்து வீடு ஒதுக்கீடு.

நகர் ஊரமைப்புத் துறை

- திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், மேலூர் கிராமம் வண்ணத்துப் பூச்சி பூங்காவிற்குச் செல்லும் கொள்ளிடம் வலது கரை சாலையினைச் சீர்செய்ய திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டக்குழும நிதியிலிருந்து





"முக்கிய நகரங்களில் வளர்ச்சிக் குழுமங்களை ஏற்படுத்தி நகர மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளுக்கு நீண்டகாலத் தேவைகளுக்கான உட்கட்டமைப்புகளை ஏற்படுத்திட வேண்டும்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

ரூ.3.10 கோடி மதிப்பீட்டில், அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- தஞ்சாவூர் மாநகராட்சியில் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளும் பொருட்டு ரூ.13.70 கோடி மதிப்பில் உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.
- திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டப்பகுதியுடன், நாவல்பட்டு புதுநகர் வளர்ச்சிப் பகுதியினை ஒருங்கிணைத்து திருச்சிராப்பள்ளி புதிய உள்ளூர் திட்டப்பகுதியாக நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 10(6)–இன் கீழ் அறிவிக்கப்பட்டுள்ளது.
- அங்கீகரிக்கப்பட்ட மற்றும் இணக்கம் அளிக்கப்பட்ட முழுமைத் திட்டங்களில் 18.27.93 எக்டேர் அல்லது 45.169 ஏக்கர் பரப்பிற்கு நிலப்பயன்பாடு மாற்றங்கள் அளிக்கப்பட்டுள்ளன.



- கட்டடங்கள், மனைகள், 4 பள்ளிகள் மற்றும் தொகுப்பு வீடுகள் உட்பட 36 திட்ட அனுமதிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

- சென்னை பெருநகர் வளர்ச்சிப் பகுதிக்கான மூன்றாம் முழுமைத் திட்டம் தயாரிப்பு தொடர்பான ஆயத்தப்பணி துவக்கம்.



மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர்
திரு.**கே.ஆர்.பெரியகருப்பன்**
அவர்கள்

ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள்

ஊரக வளர்ச்சித்துறை

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரகம்

- கோவிட் பெருந்தொற்றுக் காலத்திலும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், 50.96 இலட்சம் குடும்பங்களில் உள்ள 56.82 இலட்சம் பயனாளிகளுக்கு வேலை வழங்கியதன் மூலம் 8.67 கோடி மனித சக்தி நாட்கள் எய்தப்பட்டுள்ளது.
- ஊரகப் பகுதிகளில், 45,655 நபர்கள் கொரோனா நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சையிலிருந்தவர்களின் எண்ணிக்கை அரசின் சீரிய நடவடிக்கைகளால் 8,641 ஆகக் குறைந்துள்ளது.
- மாநில அரசால் 2021–2022ஆம் ஆண்டிற்கான மாநில நிதிக்குழு மானியம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏப்ரல், மே மற்றும் ஜூன் 2021 மாதங்களுக்கு ரூ.1,037.38 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன்படி, ரூ.586.55 கோடி கிராம ஊராட்சிகளுக்கும் ரூ.370.97 கோடி ஊராட்சி ஒன்றியங்களுக்கும், ரூ.79.85 கோடி மாவட்ட ஊராட்சிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது. ஒன்றிய அரசை மாநில அரசு வலியுறுத்தியதன்படி, மத்திய அரசால் 2020–2021ஆம் ஆண்டிற்கான மத்திய நிதி ஆணைய மானியம் ரூ.1,450.23 கோடியும், 2021–2022ஆம் ஆண்டிற்கான முதல் தவணைத் தொகையாக ரூ.533.20 கோடியும் ஆக





மொத்தம் ரூ.1,983.43 கோடி ஒன்றிய அரசால் விடுவிக்கப்பட்டது. இத்தொகை முழுவதும் உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

- ஊரக உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெறாமலிருந்த 9 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் வார்டு மறுவரையறை முன்மொழிவுகளின் மீது தனிக்கவனம் செலுத்தி ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்குட்பட்ட வார்டுகளின் மறுவரையறை மாவட்ட அரசிதழில் 03.08.2021 அன்று வெளியிடப்பட்டுள்ளது.
- ஜல் ஜீவன் திட்டத்தில் இதுவரை தமிழ்நாட்டில் 4.59 இலட்சம் வீட்டுக் குடிநீர்க் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.
- தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) திட்டத்தின்கீழ், அடிப்படை கணக்கெடுப்பில் விடுபட்ட 23,352 குடும்பங்களுக்குக் கடந்த 100 நாட்களில் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகள் மற்றும் பிற குடியிருப்புகளில், சுமார் 186 சமூகச் சுகாதார வளாகங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.
- திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ், சுமார் 19 நுண் உரக் கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.
- தன்னிறைவுத் திட்டத்தில் ரூ.3.51 கோடி மதிப்பிலான 54 பணிகள் நிறைவு.
- மறுசீரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் ரூ.5.57 கோடி மதிப்பிலான 189 பணிகள் நிறைவு.
- ஷியாம் பிரசாத் முகர்ஜி ரூர்பன் இயக்கத்தின்கீழ், 23 குடிநீர் திட்டப்பணிகள் ரூ.2.82 கோடி மதிப்பீட்டில் 11 மாவட்டத்திலுள்ள ரூர்பன் தொகுப்புகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- 11 சாலைப் பணிகள் ரூ.1.68 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- 7 பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் திட்டப் பணிகள் ரூ.1.34 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது.



- 18 பள்ளிக் கட்டடங்கள் மற்றும் உள் கட்டமைப்பு வசதிகள் ரூ.2.52 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

- ஊரகப் பகுதிகளில் உள்ள 49,197 இலக்கு மக்களைக் கொண்டு 4,158 சுயஉதவிக் குழுக்களும், நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்களைக் கொண்டு 3,201 சுயஉதவிக் குழுக்களும் என 7,359 புதிய சுயஉதவிக் குழுக்கள் ஏழை மகளிரின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்காக உருவாக்கம்.

- ஊரகப் பகுதிகளில் உள்ள 8,118 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.12.17 கோடியும், நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள 1,514 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.1.51 கோடியும் சுழல் நிதியாக வழங்கப்பட்டுள்ளது.



- ஊரகப்பகுதிகளில் உள்ள 15,000 சுயஉதவிக் குழுக்களுக்கு 7,619 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் மூலம் ஒவ்வொரு சுயஉதவிக்குழுவிற்கும் ரூ.50,000 வீதம், ரூ.75 கோடி சமுதாய முதலீட்டு நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

- நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள 48 பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்குச் சுழல் நிதியாக ரூ.24 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

- சுயஉதவிக் குழுக்களில் உள்ள நலிவுற்ற உறுப்பினர்களுக்கு 5,838 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் மூலம் ரூ.14.59 கோடி நலிவுற்றோர் மேம்பாட்டு நிதியாக விடுவிக்கப்பட்டுள்ளது.

- 34,165 சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடனாக ரூ.1,731.98 கோடி வழங்கப்பட்டுள்ளது. ஊரகப் பகுதியில் உள்ள 38 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு வங்கிப் பெருங்கடனாக ரூ.10.41 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும், நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள 914 சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடனாக ரூ.41.37 கோடி வழங்கப்பட்டுள்ளது.

- தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்யா யோஜனா திட்டத்தின் மூலம் 302 கிராமப்புற இளைஞர்களுக்குப் பணியமர்த்துதலுடன் கூடிய திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. சுகாதாரப் பிரிவின்கீழ் பயிற்சிப்பெற்ற 123 இளைஞர்கள் தனியார் மற்றும் அரசுப் பொது மருத்துவமனைகளில் கொரோனா தொற்றுத் தடுப்புத் தொடர்பான பணிகளில் தற்காலிகமாக நியமிக்கப்பட்டு, கொரோனா நோய்த்தொற்றுத் தடுப்பு நடவடிக்கைகளில் உறுதுணையாக உள்ளனர்.



- ஊரக சுயவேலைவாய்ப்புப் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சிபெற்ற நபர்களின் மூலம் 2.40 இலட்சம் முகக்கவசங்கள் தயாரிக்கப்பட்டு மாவட்ட நிருவாகத்திற்கு விநியோகம்.
- ஊரக மகளிர் பயன்பெறும் வகையில், உற்பத்தியாளர்கள் குழுக்கள் மூலம் தொழில் துவங்குவதற்கும், ஆட்டு வங்கி நிறுவுவதற்கும், ஊட்டச்சத்துத் தோட்டம் மற்றும் நாட்டுக்கோழி வளர்ப்பதற்கும் ரூ.16.50 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.
- மகளிரால் நடத்தப்படும் 47 சமுதாய உற்பத்தியாளர்கள் குழுக்கள் துவக்கப்பட்டுள்ளது.
- 4 பண்ணை சாராத் தொகுப்பு மேம்பாட்டுச் செயல்பாடுகளுக்கான சாத்தியக் கூறுகளைக் கண்டறியும் பணி நடத்தப்பட்டு விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பில் உள்ளது.
- ஊரக மகளிரின் சிறு மற்றும் குறு தொழில் வளர்ச்சிக்காக 55 வட்டார வணிக வள மையங்கள் உருவாக்க அனுமதி.
- தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் சுயவேலைவாய்ப்புத் திட்டம் – தனிநபர் திட்டத்தின்கீழ், 705 தனிநபர்கள் தொழில் துவங்குவதற்காக ரூ.2.86 கோடி நிதியுதவி.
- சுயவேலைவாய்ப்புத் திட்டம் – குழு திட்டத்தின்கீழ், 304 சுயஉதவிக் குழுக்களுக்குத் தொழில் துவங்க ரூ.10.59 கோடி நிதியுதவி.
- சுயவேலைவாய்ப்புத் திட்டம் – குழுக்களின்கீழ், 6 ஒத்த தொழில் சார்ந்த குழுக்களுக்கு ரூ.7 இலட்சம் நிதியுதவி.
- பிரதம மந்திரி சுயசார்பு நிதித் திட்டத்தின்கீழ் 25,339 தெருவோர வியாபாரிகளின் தொழில்களுக்கு ரூ.25.07 கோடி நிதியுதவி.
- மாவட்டங்களில் செயல்படும் 137 மதி விற்பனை அங்காடிகள் மூலம் ரூ.7.05 இலட்சம் மதிப்புள்ள சுயஉதவிக் குழுக்களின் பொருட்கள் விற்பனை.
- சானிட்டரி நாப்கின் உற்பத்தியாளர் கூட்டமைப்பின் மூலம் ரூ.1.44 கோடி மதிப்பீட்டில் 6,85,549 பெல்ட் வகை சானிட்டரி நாப்கின் பாக்கெட்டுகள் தயாரிக்கப்பட்டு 43 மாவட்டச் சுகாதார மையங்களுக்கு விநியோகம்.
- சுயஉதவிக் குழுப் பொருட்களின் இணையவழி விற்பனைக்காக அமேசான் நிறுவனத்துடன் இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. நான்கு மாவட்டங்களில் (தூத்துக்குடி, திருநெல்வேலி, காஞ்சிபுரம், சென்னை) உள்ள 20 பொருட்கள் பதிவேற்றம் செய்யப்பட்டு, விற்பனைக்கான ஆணைகள் பெறப்பட்டு, பொருட்கள் வெற்றிகரமாக விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

- 15 கிராமப்புறத் தொழில்முனைவோருக்கு ரூ.37.03 இலட்சம் நேரடி நிதி இணைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- 514 ஊரகத் தொழில்முனைவோருக்கு நுண் நிறுவனங்களுக்கான கடனுதவித் திட்டத்தின்கீழ், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் போன்ற சமூகம் சார்ந்த நிறுவனங்கள் மூலம் ரூ.1.89 கோடி கடனுதவி வழங்கப்பட்டது.
- 540 இளைஞர்களுக்குப் பல்வேறு துறைகளின் ஒருங்கிணைப்பின் மூலம் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம், 401 பெண்கள் மற்றும் 139 ஆண்கள் பயன்.

தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதாரச் சங்கம்

- துயர் குறைப்பு நிதிக் கடனாக ரூ.2.22 கோடி 2,195 சுயஉதவிக் குழுக்கள், மீன் விற்பனை சங்கங்கள், கூட்டுப் பொறுப்புக்குழுக்களின் உறுப்பினர்களுக்கு கொரோனா இடர்பாட்டினை எதிர்கொள்ள வழங்கப்பட்டது.
- சுயஉதவிக் குழு உறுப்பினர்களின் புது வருமானம் பெருக்கும் நடவடிக்கைகளை ஏற்படுத்தவும் ரூ.1.70 கோடி கடனாக 931 சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது.
- இயற்கை பேரிடர் மற்றும் தனி நபர் விபத்துக்களால் சிறு மீனவர்களுக்கு ஏற்படும் பொருளாதார இழப்பைக் குறைக்கும் பொருட்டு 1,053 மீனவர்களின் மீன்பிடி உடைமைகள் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.
- சுயஉதவிக் குழு மற்றும் கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்குக் கடன் இணைப்பை அதிகரிக்க இந்தியன் வங்கி, தமிழ்நாடு கிராம வங்கி மற்றும் ஐசிஐசிஐ வங்கிகளுடன் தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதாரச் சங்கம் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.
- ஊரகக் கடலோரப் பகுதிகளில் உள்ள மகளிர் சுயஉதவிக் குழு மற்றும் கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு வங்கிக் கடனாக ரூ.1.81 கோடி வழங்கப்பட்டது.
- 60 சிறு மீனவர்களை மீன் விற்பனைச் சங்கத்தின் மூலம் ஒருங்கிணைத்து விடுதலைக் கடனாக ரூ.54.56 இலட்சம் வழங்கப்பட்டது.



"தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஊரகப் பகுதிகளிலும் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் எவ்விதக் குறைபாடுமின்றி முழுமையாகக் கிடைக்கச் செய்யவேண்டும்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்



மாண்புமிகு ஊரகத் தொழிற்துறை அமைச்சர்
திரு.**தா.மோ.அன்பரசன்**
அவர்கள்

ஊரகத் தொழிற்துறை

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்துறை

- மூலதன மானியத் திட்டத்தின்கீழ், 2021–2022ஆம் நிதியாண்டில் 1,975 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.168 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.
- சுய முதலீட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் மூலதன மானியம், மூன்று தவணைகளாக வழங்கப்படும் மானியம் மாநில தொழில் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு, ஒரே தவணையாக வழங்க ஆணை.
- 2021–2022ஆம் நிதியாண்டில், பின்முனை வட்டி மானியத்தின்கீழ், 176 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.39 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 133 பயனாளிகளுக்கு ரூ.63.92 கோடி திட்ட மதிப்பீட்டில் ரூ.22.22 கோடி மானியத்துடன் கூடிய வங்கிக் கடன்.
- படித்த வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ், 671 பயனாளிகளுக்கு, ரூ.6.51 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், குடிசை மாற்று வாரியம்



- பாரதப் பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ், 438 பயனாளிகளுக்கு, ரூ.12.49 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.
- குறைந்த அழுத்த மின் மானியத் திட்டத்தின்கீழ், 305 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.2.47 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் விரிவாக்கம் செய்யும்பொழுது வாங்கப்படும் இயந்திரங்களுக்கான மூதலீட்டு மானியம் பெறுவதற்கு விற்றுமுதல் 25 விழுக்காடு அதிகரிக்க வேண்டுமென்ற விதிமுறை கொரோனா காரணமாக 9 மாத காலத்திற்குச் சலுகை வழங்கப்பட்டுள்ளது.
- நலிவுற்ற குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை மறு சீரமைக்க நிபுணர் குழு.
- தமிழக அரசின் கொரோனா சிறப்பு நிவாரணத் தொகுப்பின்கீழ், இண்ட்கோசர்வானது ஆணை பெறப்பட்ட 35 நாட்களுக்குள் 4,197 மெட்ரிக் டன் தேயிலைத் தூளினை ரூ.84.02 கோடி மதிப்பிற்கு வழங்கியுள்ளது.
- இண்ட்கோசர் 7 புதிய பிராண்ட் அறிமுகப் படுத்தியுள்ளது.
- இண்ட்கோசர்வின் தர அடிப்படையிலும், சந்தைப்படுத்தலாலும் புதிய சந்தையினைக் கைப்பற்ற எடுக்கப்பட்ட முயற்சியினை ஊக்குவிக்கும் பொருட்டு நியாய வர்த்தக சான்றிதழ் மற்றும் டிரஸ்டீ சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.
- 44 குறு மற்றும் சிறுதொழில் நிறுவனங்களுக்கான நிலுவைத் தொகை ரூ.8.89 கோடி வசதியாக்கக் குழுக்கள் மூலம் பெற்றுத்தரப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு சிட்கோ தொழிற்பேட்டைகளில் தொழில் மனை ஒதுக்கீடு பெற்ற நிறுவனங்கள் செலுத்த வேண்டிய மனை விலை, தவணைத் தொகை மற்றும் வாடகை செலுத்துவதற்கு 6 மாத கால அவகாசம் நீட்டிப்பு.
- கொரோனா தடுப்பு மருத்துவ உபகரணங்களான மருத்துவ ஆக்சிஜன், மருத்துவ ஆக்சிஜன் சிலிண்டர் போன்றவற்றைத் தயாரிக்கும் தொழில் முனைவோர்கள் தொழிற்சாலைகள் துவங்க விண்ணப்பித்த ஓரிரு தினங்களுக்குள் மனை ஒதுக்கீட்டு ஆணை. இதன் மூலம் இதுவரை 4 தொழில்முனைவோர்கள் பயனடைந்துள்ளனர்.



- தமிழ்நாடு சிட்கோ தொழிற்பேட்டைகளில் தொழிலாளர்களுக்குச் சிறப்பு முகாம்கள் வாயிலாக அவர்கள் பணிபுரியும் இடத்திலேயே கோவிட் தடுப்பூசி (Special Vaccination Camp) செலுத்துவதற்கு ஏற்பாடுகள்



செய்யப்பட்டு 1,52,895 தொழிலாளர்களில் 41,919 தொழிலாளர்களுக்குத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தால் கடந்த 100 நாட்களில் அரசுத் துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள் மற்றும் இதர துறைகளிடமிருந்து ரூ.8.75 கோடி மதிப்பீட்டில் பணி ஆணை பெறப்பட்டுள்ளது.
- தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், 30 தொழில் முனைவோர் விழிப்புணர்வு பயிற்சி முகாம் வாயிலாக 2,663 நபர்களுக்குத் தொழில் முனைவை ஏற்படுத்தியுள்ளது.
- தமிழ்நாடு மாணவ கண்டுபிடிப்பாளர் விருது இறுதிப் போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட 94 மாணவர்கள் அடங்கிய 43 அணிகளுக்கு ஆன்லைன் நிகழ்வு நடத்தப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட 25 அணிகளின் ஆலோசனைகளை வணிக மயமாக்குவதற்கும் தலா ரூ.1 இலட்சம் ரொக்கப் பரிசு வழங்கப்படவுள்ளது.
- பெருந்திரள் தகவல் பரவலாக்கத் திட்டத்தின்கீழ், "நிமிர்ந்துநில்" என்னும் தலைப்பில் பொதிகை தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படுகிறது. நாளதுவரை ஐந்து வார நிகழ்ச்சியில் ஒளிபரப்பப்பட்டு, தொழில் முனைவோருக்கான தகவல் பரவலாக்கம் மேற்கொள்ளப்படுகிறது. புத்தாக்கப் பற்றுச்சீட்டுத் திட்டத்தின்கீழ், 18 பயனாளிகளுக்கு ரூ.39.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- மாநிலத்தில் புத்தொழில் சூழலை மேம்படுத்தும் வகையில், அரசு முகமைகள் ரூ.20 இலட்சத்திற்கும் மிகாமல் தங்களுக்குத் தேவைப்படும் பொருட்களைக் கொள்முதல் செய்யும்போது, தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட புத்தொழில் நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்யவும், அவ்வாறு கொள்முதல் செய்ய ஏதுவாக புத்தொழில் நிறுவனங்களுக்குப் பிணை வைப்புத்தொகை செலுத்துவதற்கு விலக்கு, முந்தைய விற்றுமுதல் நிலையிலிருந்து விலக்கு, முன் அனுபவத்தின் நிபந்தனையிலிருந்து விலக்கு மற்றும் டெண்டர் செலவைத் தள்ளுபடி செய்தல் போன்ற சலுகைகள்.
- தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், தனது 12 முக்கிய பூம்புகார் விற்பனை நிலையங்கள், 10 சிறிய விற்பனைக் கூடங்கள் மற்றும் மின் வணிகத்தின் மூலமாக ரூ.3.42 கோடி விற்பனை.
- தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் தனது 7 பூம்புகார் உற்பத்தி நிலையங்கள் மூலமாக ரூ.13.99 இலட்சத்திற்கு உற்பத்தி.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்

- 51,739 வீடுகளுக்கான கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.
- பல்வேறு வீட்டுவசதி பணிகளுக்காக ரூ.266.69 கோடி மூலதன செலவினமாகச் செலவிடப்பட்டுள்ளது.



- 565 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு ஒதுக்கீட்டாணைகளும், 35 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் 134 மேம்படுத்தப்பட்ட மனைகளுக்கான உரிமை ஆவணங்கள், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் வழங்கப்பட்டுள்ளன.
- அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு ரூ.37 கோடி செலவிலான பழுது நீக்கும் மற்றும் புதுப்பித்தல் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிகளுக்காக ரூ.3.90 கோடி செலவிடப்பட்டுள்ளது.



"படித்த இளைஞர்களைத் தொழில் முனைவோர்களாக
உருவாக்கிடும் வகையில் தொழில்நுட்பத்துறையில் திட்டங்கள் உருவாக்க வேண்டும்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்



மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர்
திரு. **மு.பெ.சாமிநாதன்**
அவர்கள்

செய்தித்துறை

செய்தி வெளியீட்டுப் பிரிவு

- கொரோனா வைரஸ் நோய்த்தொற்றுத் தடுப்பு நடவடிக்கையாக பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் மற்றும் காலமுறை இதழ்களில் பணிபுரியும் செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள் மற்றும் ஒளிப்பதிவாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பு ஊக்கத்தொகையினை ரூ.3,000லிருந்து ரூ.5,000 ஆக உயர்த்தி 5,048 நபர்களுக்கு வழங்க ரூ.2.52 கோடி நிதி ஒப்பளிப்பு.
- கொரோனா தொற்றால் இறந்தவர்களின் வாரிசுகளுக்கு இழப்பீட்டுத்தொகை ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.10 இலட்சமாக உயர்த்தி, 5 நபர்களுக்கு வழங்கப்பட்டு, 6 நபர்களுக்கு வழங்க நடவடிக்கையில் உள்ளது.

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை மற்றும் அரசு அச்சகம்





நினைவகங்கள்

- ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டத்தில் மாவீரன் பொல்லான் அவர்களுக்கு ரூ.1.82 கோடி மதிப்பீட்டில் முழு திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்க நிதி ஒப்பளிப்பு.



- தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் தமிழ் எழுத்தாளர் கி.இராஜநாராயணன் அவர்களுக்கு ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் முழுவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம் மற்றும் அதிலேயே நூலகம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் பாரத மாதா நினைவாலயம் அமைக்கப்பட்டு, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்களால் 01.08.2021 அன்று பொதுமக்கள் பார்வைக்குத் திறந்து வைக்கப்பட்டது.

பொருட்காட்சி (ம) விழா

- 2021–2022ஆம் நிதி ஆண்டில் 38 மாவட்டங்களில் அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சி மேற்கொள்ள ஏதுவாக மாவட்டம் ஒன்றிற்குத் தலா ரூ.10,000 வீதம் மொத்தம் ரூ.3.80 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.



- கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 150ஆவது பிறந்தநாளை (05.09.2021) மாநில அளவில் கொண்டாடுதல் தொடர்பாக, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- 75ஆவது சுதந்திர தின விழாவினைத் தேசிய மற்றும் சர்வதேச அளவில் கொண்டாடுதல் தொடர்பாக ஒரு குழுவினை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- இசைக் கலைஞரான நாதஸ்வர வித்துவான் காருக்குறிச்சி அருணாச்சலம் அவர்களின் நூற்றாண்டு விழாவினை சிறப்புச் செய்யும் வகையில் தமிழக அரசு சார்பில் நூற்றாண்டு விழா கொண்டாடுதல் தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்

- எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் என்று அழைக்கப்பட்ட இந்நிறுவனம் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தை உலகத்தரத்திற்கு இணையாக மேம்படுத்த நடவடிக்கை.

தமிழ்நாடு திரைப்படப்பிரிவு

- மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் கலந்துகொள்ளும் அன்றாட நிகழ்ச்சிகள், சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சிகள் மற்றும் அரசின் அனைத்து நிகழ்ச்சிகளை வீடியோ மூலம் ஒளிப்பதிவு செய்து, அவற்றைத் தொகுத்து அரசின் செயல்பாடுகளைப் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வண்ணம் தலைமைச் செயலகத்தின் ஊடக மையத்தின் வழியே வீடியோ செய்தி நறுக்குகளாக அரசு மற்றும் தனியார் தொலைக்காட்சிகளுக்கு அவ்வப்போது பதிவேற்றம் செய்து ஒளிபரப்புவதே தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் முக்கியப் பணி ஆகும்.
- பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், வீடியோ செய்தி மலர், குறும்படங்கள் மற்றும் குறும்பாடல்களைக் காலத்திற்கு ஏற்றவாறு நவீனத் திரையரங்கப் பதிப்புகளாகத் தயாரித்துத்



தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களிலுள்ள நவீன மின்னணு வாகனங்கள், அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் உள்ள எல்.இ.டி. டிவி மற்றும் சமூக வலைதளங்களிலும் பதிவேற்றம் செய்து பொதுமக்கள் அறிந்து பயனடையும் வகையில் ஒளிபரப்பப்பட்டு வருகின்றது.

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொள்ளும் அன்றாட அரசு நிகழ்ச்சிகள், நலத்திட்ட உதவிகள், அடிக்கல் நாட்டு விழாக்கள் ஆகியவற்றை அன்றைய தினமே தமிழக மக்களுக்கு மட்டுமின்றி உலக மக்கள் அனைவருக்கும் விரைவாகச் சென்றடையும் வண்ணம் ஒருங்கிணைந்த சமூக வலைதளம் மூலமாக 78 வீடியோ செய்தித் தொகுப்புகள் இதுநாள் வரை பதிவேற்றம் செய்து ஒளிபரப்பப்பட்டு வருகின்றன.

- 1989ஆம் ஆண்டு முதல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நிகழ்ச்சிகள், முக்கியப் பிரமுகர்களின் நிகழ்ச்சிகள், அரசின் வீடியோ செய்தி மலர்கள், செய்தித் தொகுப்புகள் மற்றும் 2001 முதல் சட்டப்பேரவை நிகழ்ச்சிகள் ஆகியவை அடங்கிய ஒளிநாடாக்களை மின்னணு மாற்றம் செய்து எண்மிய மின்னணு ஆவணக் காப்பகம் உருவாக்கப்பட்டு வருகின்றது.



"அரசுத் திட்டங்களை நவீன தொழில்நுட்ப உதவியுடன் சமூக வலைதளங்கள் வாயிலாக உடனுக்குடன் மக்களிடையே எடுத்துச் செல்லும் பணியை மேற்கொள்ளவேண்டும்"

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்



சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை

மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி **பி. கீதா ஜீவன்** அவர்கள்

- அனைத்து மகளிர் மற்றும் திருநங்கைகள் சாதாரண கட்டண அரசுப் பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணச்சீட்டுடன் பயணம் மேற்கொள்வதற்கு அனுமதி. இதுநாள் வரையில் 6.5 கோடி மகளிர் மற்றும் திருநங்கைகள் இத்திட்டத்தில் பயன்.
- பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், 604 பெண் குழந்தைகள் புதியதாகப் பதிவு செய்யப்பட்டு, அக்குழந்தைகளின் பெயரில் ரூ.1.51 கோடி தொகை வைப்பீடு. மே 2021 முதல் 18 வயதினை நிறைவடைந்த 4,880 பெண் குழந்தைகளுக்கான முதிர்வுத் தொகையாக ரூ.16.74 கோடி இத்திட்டத்தின் மூலம் பெற்று வழங்கல்.
- கொரோனா தொற்றுக் காலத்தில், திருநங்கையருக்கு நிவாரணத் தொகையாக ரூ.4,000 என மொத்தம் ரூ.3.41 கோடி நிவாரண நிதியுதவி.

மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், ஆதரவற்றோர் இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள் மற்றும் சமூகச் சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்





- மதியஉணவுத்திட்டத்தின்கீழ் அரிசி, பருப்பு மற்றும் முட்டை ஆகிய உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றது. 35.68 இலட்சம் பள்ளிக் குழந்தைகள் பயன்.

- கோவிட்–19 பெருந்தொற்றுக் காரணமாக, அங்கன்வாடி பயனாளிகளுக்கான இணை உணவு (சத்து மாவு), அரிசி, பருப்பு மற்றும் முட்டை ஆகியவை பயனாளிகளின் வீடுகளுக்கு 15 நாட்களுக்கு ஒருமுறை நேரடியாகத் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

- கொரோனா நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்டுப் பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தைகள் மற்றும், ஏற்கெனவே தாய் அல்லது தந்தையை இழந்து தற்போது கொரோனா நோய்த்தொற்றினால் மற்றொரு பெற்றோரையும் இழந்த குழந்தைகள் ஆகியோருக்கு ரூ.5 இலட்சம் என 110 குழந்தைகளுக்கும் கொரோனா நோய்த் தொற்றினால் தாய் அல்லது தந்தையை இழந்த குழந்தைகளோடு இருக்கும் தாய் அல்லது தந்தைக்கு உடனடி நிவாரணத் தொகையாக ரூ.3 இலட்சம் என 1,463 குழந்தைகளுக்கும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து இதுவரை ரூ.49.39 கோடி வழங்கப்பட்டுள்ளது.

- குழந்தைகளிடையே கோவிட்–19 பெருந்தொற்றுத் தாக்கத்தை அறிந்துகொள்வதற்கும் அவர்களுக்குத் தேவையான உடனடி சேவை வழங்குவதற்கும் ஏதுவாக அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையின்கீழ், மருத்துவ மற்றும் ஊரக நலப் பணிகள் துறை இணை இயக்குநர், காவல்துறைக் கூடுதல் கண்காணிப்பாளர் (பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றம்) உள்ளிட்ட ஏழு உறுப்பினர்களைக் கொண்ட மாவட்ட அளவிலான பணிக்குழு (District Level Task Force) அமைக்கப்பட்டுள்ளது.





"மகளிர், குழந்தைகள், திருநங்கையர், மூத்த குடிமக்களின் பாதுகாப்பு, உரிமை மற்றும் நலனை உறுதி செய்திடவேண்டும்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்





மீன்வளம்-மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை

மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்

திரு. **அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன்**

அவர்கள்

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

- டவ்தே புயல் காரணமாகக் காணாமல் போன மீனவக் குடும்பங்களுக்குத் தலா ரூ20 இலட்சம் வீதம் ரூ.4.20 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- 2021ஆம் ஆண்டிற்கான மீன்பிடித்தடை காலத்தில் 1,71,209 கடல் மீனவக் குடும்பங்களுக்குத் தலா ரூ.5,000 வீதம் ரூ.85.60 கோடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது.
- சென்னை, காசிமேடு துறைமுகத்திலிருந்து கடலில் மீன்பிடிக்கச் சென்ற ப.ராஜகோபால் என்பவருக்குச் சொந்தமான விசைப்படகின் மீது வரதா என்ற சரக்குக் கப்பல் 18.07.2021 அன்று மோதி கடலில் மூழ்கியதால் அந்நிறுவனத்திடமிருந்து இழப்பீட்டுத் தொகையாக ரூ.30 இலட்சம் பெற்று அவ்விசைப்படகின் உரிமையாளருக்கு வழங்கப்பட்டது.
- தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம் 2020–2021இன்கீழ், உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரித்திட ஏதுவாக, 50 எக்டர் பரப்பளவில் மீன் வளர்ப்பு மற்றும் மீன்குஞ்சு வளர்ப்புப் பண்ணைகள் அமைத்திட அரசால் ரூ.2.41 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது.

மீன்வளம், மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் கால்நடை பராமரிப்பு





- தமிழ்நாடு மீனவர் நலவாரியத்தின் மூலம் மீனவர்களின் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலனினை உறுதி செய்யும் பொருட்டு 553 உறுப்பினர்களுக்கு ரூ.71.61 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், சுமார் 1.28 இலட்சம் உறுப்பினர்களுக்கு நுண்ணறி அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் மூலம் கொரோனா காரணமாகத் தமிழக அரசால் அமல்படுத்தப்பட்ட முழு ஊரடங்கு காலத்தில் பொதுமக்களுக்கு இணையதளம் மற்றும் கைப்பேசி மூலமாக மீன்கள் தேவை குறித்துப் பெறப்பட்டதன் அடிப்படையில் பொதுமக்களின் இல்லங்களுக்கு நேரடியாகச் சென்று 9,113 கிலோ மீன்கள் ரூ.54.21 இலட்சம் மே 2021 முதல் ஜூலை 2021 வரையிலான காலங்களில் விற்பனை செய்யப்பட்டது.
- தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் நவீன மீன் விற்பனை நிலையம் மற்றும் நடமாடும் விற்பனையகத்தின் வாயிலாக 85.85 டன் மீன்கள் ரூ.421.20 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. நீர்த்தேக்க நீர்பிடிப்பு மூலம் 96.75 டன் மீன்கள் பிடிக்கப்பட்டு ரூ.172.46 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டது.
- சென்னை, கொளத்தூரில் ரூ.50 கோடி செலவில் வண்ண மீன் வர்த்தக மையம் அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்

- தூத்துக்குடி மீன்வளக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.3.20 கோடி மீன் உற்பத்தியை அதிகரிக்க உள்நாட்டு மீன் வளர்ப்போரின் திறன் மேம்பாட்டிற்காக ஒருங்கிணைந்த மீன் பண்ணை மாதிரி வளாகம் அமைத்தல்.
- ரூ.1.20 கோடி மதிப்பீட்டில், கடலில் மீனவர் பாதுகாப்பு குறித்த பயிற்சி நடத்துவதற்கு ஏற்ற வசதிகளைத் தமிழ்நாடு



டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக் கழகத்தின் உறுப்பு நிலையமான மண்டபத்தில் அமைந்துள்ள மீன்வளத் தொழில் காப்பகம் மற்றும் தொழில்சார் இயக்குநரகத்தில் நிறுவுதல்.

- ரூ.80 இலட்சத்தில் மீன் பண்ணையாளர்கள் பயன்பெறும் வகையில் முட்டுக்காட்டில் உள்ள மீன் வளர்ப்புத் தொழில் காப்பகம் மற்றும் தொழிற் பயிற்சி இயக்ககத்தில் கொடுவா மீன்களுக்குக் குறைந்த செலவில் தீவனம் மற்றும் சிறந்த பண்ணை மேலாண்மை முறைகளை உருவாக்குதல்.
- தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் மாதவரம் வளாகத்தில், ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாட்டின் மீன் உற்பத்தியை அதிகரிக்க ஒருங்கிணைந்த மீன் நோய் கண்காணிப்பு மேற்பார்வை மற்றும் மீன்குஞ்சுகளின் தர மதிப்பீட்டினை மேற்கொள்ளும் அமைப்பினை ஏற்படுத்துதல்.
- ரூ.1.98 கோடி மதிப்பீட்டில் கிருஷ்ணகிரி மாவட்டம், பாரூரில் மீன் வளர்ப்பில் மறுசுழற்சி செய்யப்படும் நீரில் மண்ணில்லா முறையில் காய்கறி வளர்ப்புப் பூங்கா அமைத்தல்.
- ரூ.1.06 கோடி மதிப்பீட்டில் நீருயிரி வளர்ப்பு மற்றும் மீன்வளத்திற்கான மின்னணு விரிவாக்க மையம் நிறுவுதல்.
- அனைத்து இளங்கலை மற்றும் முதுகலைப் பாட இணையவழி வகுப்புகள் மற்றும் தேர்வுகள் வெற்றிகரமாக நடத்தப்படுகின்றன.
- மாணவர்கள் மற்றும் மீன் பண்ணையாளர்களின் நலனுக்காக 38 இணையவழிப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.
- மத்திய அரசின் SC-SP திட்டத்தின்கீழ், தாழ்த்தப்பட்ட சமூகத்திற்காகத் தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் மற்றும் கொச்சியில் உள்ள மத்திய மீன்வளத் தொழில்நுட்ப நிலையமும் இணைந்து 10 பயிற்சிகள் நடத்தப்பட்டு 200 பயனாளிகள் பயன்.

கால்நடை பராமரிப்புத்துறை

- அனைத்துக் கால்நடை நிலையங்களிலும் 60 இலட்சம் சிகிச்சைப் பணிகள், 3.2 இலட்சம் முதலுதவி, 1.6 இலட்சம் அறுவை சிகிச்சை, 53.8 தடுப்பூசிப் பணி, 64 இலட்சம் குடற்புழு நீக்கப்பணிகள், 8.1 இலட்சம் செயற்கைமுறை கருவூட்டல் பணிகள் கால்நடைகளுக்கு மேற்கொள்ளப்பட்டு 4.35 இலட்சம் கன்றுகள் பிறந்துள்ளன.
- பசுந்தீவன உற்பத்தியை அதிகரிக்க 48,350 தீவன புல்கரணைகள் மற்றும் 28.97 மெட்ரிக் டன் மண்புழு உரம், துறை பண்ணைகளில் உற்பத்திச் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம்.
- கால்நடைப் பண்ணைகளின் மூலம் 176 நல்மரபின ஆட்டுக்குட்டிகளும், 163 பன்றிக்குட்டிகளும், 5 மாட்டினங்களும் கால்நடை வளர்ப்போருக்கு விற்பனை.





- 12.45 இலட்சம் உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டு தமிழகமெங்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது போன்ற வெவ்வேறு செயல்களின் மூலம் ரூ.1.95 கோடி அரசிற்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.
- 291 மேச்சேரி செம்மறியாட்டுக் குட்டிகள், கால்நடை வளர்ப்போர் தங்கள் கால்நடைகளை மேம்படுத்திட வழங்கப்பட்டுள்ளது.
- நடமாடும் கால்நடை அவசர ஊர்தி சேவையின் மூலம் 39,322 கால்நடைகளுக்கு அவைகளின் இருப்பிடத்திலேயே சென்று சிகிச்சை அளிக்கப்பட்டன.
- நபார்டு XXV திட்டத்தின்கீழ், 102 கால்நடை நிலையங்களுக்கான புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.
- அஸ்காட் திட்டத்தின்கீழ், சுமார் 15,000 கால்நடைகளுக்கு அடைப்பான் மற்றும் சப்பை நோய்த் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.
- தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், 37 மாவட்டங்களில் உள்ள 1,925 பயனாளிகளுக்குத் தலா ஆயிரம் கோழிக்குஞ்சுகள் ஒரு மாதத்திற்குத் தேவையான தீவனம் மற்றும் குஞ்சு பொரிப்பான் ஆகியவை 50 சதவீத மானியத்தில் வழங்கப்பட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- விழுப்புரம் மற்றும் தேனி மாவட்டங்களில் தலா 200 பயனாளிகளுக்கு ரூ.2.25 கோடி மதிப்பீட்டில் கறிக்கோழிப்பண்ணைகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.
- இராமநாதபுரம், தருமபுரி, புதுக்கோட்டை மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் தலா 200 பயனாளிகளுக்கு ரூ.1.40 கோடி செலவில் குறைந்த முதலீடு தொழில்நுட்பம் கொண்ட கோழிப்பண்ணைகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.
- 32 கால்நடை மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை அரங்குகள் நிறுவ, அறுவை சிகிச்சைக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்யும் பணி ரூ.3.02 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- கால்நடை காப்பீட்டுத் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் மூலமாகச் செயல்படுத்தப்படுகிறது. ரூ.11.50 கோடி செலவில் 2.50 இலட்சம் கால்நடை அலகுகளுக்கு அனைத்து மாவட்டங்களிலும் காப்பீடு செய்யும் பணி துவக்கப்பட்டுள்ளது.
- ஓசூர் மாவட்டக் கால்நடைப் பண்ணையில் கரு மாற்று மற்றும் ஆய்வுக்கூடக் கருத்தரிப்புத் தொழில்நுட்பத்தின் மூலம் 48 கருக்கள் சேகரிக்கப்பட்டு 20 கருக்கள் மாற்றப்பட்டு, 28 கருக்கள் சேமித்து வைக்கப்பட்டுள்ளது.

- பசு மற்றும் எருமைகளில் 16.49 இலட்சம் எண்ணிக்கை செயற்கை முறை கருவூட்டல்கள் செய்யப்பட்டு 7.82 இலட்சம் கன்று பிறப்பு பதிவு செய்யப்பட்டன.
- தேசிய செயற்கை முறை கருவூட்டல் திட்டத்தின்கீழ், அதிக உற்பத்தித் திறன் வாய்ந்த காளைகளின் உறைவிந்தினைப் பயன்படுத்தி 1.18 இலட்சம் கால்நடை வளர்ப்போரின் 1.27 இலட்சம் பசு மற்றும் எருமைகளுக்குச் செயற்கை முறை கருவூட்டல் செய்யப்பட்டன.
- கொரோனா ஊரடங்கு காலத்தில் 14,620 கிலோ குதிரை தீவனமும், 2,500 கிலோ நாய்களுக்கான உணவும், 200 கிலோ பூனைகளுக்கான உணவும், 100 கிலோ நாய்களுக்கான பிஸ்கட்ஸ் வாங்கி வழங்கப்பட்டன.
- அரிசி அறவை இயந்திர உரிமையாளர்கள் சங்கம் மூலம் அரிசி 1,250 கிலோ, மரு.சுந்தரலிங்கம் வாரிய உறுப்பினர் (TANUVAS) – கோதுமை தவிடு 525 கிலோ, ஆவின் நிறுவனம் மூலம் 625 கிலோ SKIM Milk Powder மற்றும் Drools India Pvt. Ltd. நிறுவனம் மூலம் நாய்களுக்கான Drools உணவு 220 கிலோ தன்னார்வலர்களிடமிருந்து இலவசமாகப் பெற்று விலங்குகள் நல ஆர்வலர்களுக்கு வழங்கப்பட்டது.
- 400 தன்னார்வலர்களுக்கு, தெருவில் சுற்றித் திரியும் ஆதரவற்ற விலங்கினங்களுக்கு உணவு வழங்க ஏதுவாக அனுமதி வழங்கப்பட்டது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

- நாட்டினச் செம்மறி ஆடுகள், நாட்டுக் கோழிகளைப் பாதுகாக்கவும், கால்நடை உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வகையில் நவீனக் கால்நடைப் பண்ணைக் கருவிகளை உருவாக்கவும், விலங்குகளிலிருந்து மனிதர்களுக்குப் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்தவும் மற்றும் பசுந்தீவன உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் தரமான தீவன விதை உற்பத்தி நிலையம் அமைக்கவும் ரூ.10.30 கோடி நிதியொதுக்கி அரசாணை வெளியீடு.
- பல்கலைக்கழக விரிவாக்க மையங்கள் வாயிலாக, கால்நடைப் பண்ணையாளர்கள் மற்றும் விவசாயிகள் பயனுறும் வகையில் 31 இணையவழிப் பயிற்சிகள் நடத்தப்பட்டு 8,652 விவசாயிகள் பயன்.



"கால்நடை மருத்துவர் சேவை, தொலைதூரக் கிராமங்களில் வசிக்கும் விவசாயிகளும் பயனடையும் வகையில் கால்நடை மருத்துவமனைகளின் செயல்பாடு சிறப்பாக அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்



மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்
திரு.**ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன்**
அவர்கள்

போக்குவரத்துத்துறை

- தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகக் கட்டுப்பாட்டில் இயங்கும் சாதாரணக் கட்டண நகரப் பேருந்துகளில் (White Board), பணிபுரியும் மகளிர் மற்றும் உயர் கல்வி பயிலும் மாணவியர் உள்ளிட்ட அனைத்து மகளிரும் கட்டணமில்லாமலும், பேருந்துப் பயண அட்டை இல்லாமலும் பயணம் மேற்கொள்வதற்கு 07.05.2021 முதல் அனுமதி வழங்கி அரசு ஆணை வெளியிடப்பட்டது.
- தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக சாதாரண நகரப் பேருந்துகளில், இலவசப் பேருந்து பயணத் திட்டத்தை மூன்றாம் பாலினத்தவரும் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டது.
- 40 சதவீதம் மற்றும் அதற்கு மேலும் மாற்றுத்திறனுடையவர்களுக்கு, அவர்களது துணையாளர்களுடன் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டது.
- 9,853 சாதாரண நகரப் பேருந்துகளில், 7,303 பேருந்துகள் மாநிலத்தில் பெண்களின் இலவசப் பயணத்திற்காக இயக்கப்படுகின்றன.

போக்குவரத்து, நாட்டுடமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திச் சட்டம்





- நாளொன்றுக்கு சுமார் 32.51 இலட்சம் பெண்கள், 22,000 மாற்றுத்திறனாளிகள் மற்றும் துணையாளர்கள் மற்றும் 2,200 மூன்றாம் பாலின நபர்கள் பேருந்துகளில் பயணிக்கின்றனர்.
- அரசுப் பேருந்துகளில் பயணம் செய்யும் மகளிர் பயணத்திற்கு அரசு மானியமாக 2021–2022ஆம் ஆண்டிற்கு ரூ.1,348.05 கோடியை நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்யப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
- அரசுப் பேருந்துகளில் பயணம் செய்யும் மூன்றாம் பாலினத்தவர் பயணத்திற்கு, அரசு மானியமாக 2021–2022ஆம் ஆண்டிற்கு ரூ.1.05 கோடியை நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்யப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது
- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 10.05.2021 அன்று காலை 4 மணி முதல் 24.05.2021 காலை 4 மணி வரை இரு வாரங்களுக்கு முழு ஊரடங்கு அமல்படுத்த உத்தரவிட்டதை அடுத்து, பொதுமக்கள் சொந்த ஊர்களுக்குச் செல்வதற்கு வசதியாக 08.05.2021 முதல் 09.05.2021 வரை பயணிகளின் வசதிக்காகச் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டன.
- 08.05.2021 மற்றும் 09.05.2021 ஆகிய இரண்டு நாட்களில் இயக்கப்பட்ட மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 6,891 மற்றும் 4,40,057 பயணிகள் சொந்த ஊர்களுக்குப் பயணம் செய்தனர்.
- 13.05.2021 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், பேருந்துகளில் பயணம் செய்கின்ற பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்கின்ற வகையில் மத்திய அரசின் சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள "நிர்பயா'' திட்டத்தின் வாயிலாக அனைத்துப் பேருந்துகளிலும் கண்காணிப்புக் கேமராக்களைப் பொருத்துதல், பொதுமக்கள் தங்கள் கைப்பேசியின் வாயிலாகப் பேருந்து வழித்தடங்களை எளிதில்





அறிந்துகொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள, சலோ ஆப் செயலியினை விரைந்து செயல்படுத்த உத்தரவிட்டார்.

- 22.05.2021 அன்று மீண்டும் 24.05.2021 காலை முதல் அடுத்த ஒரு வாரத்திற்குத் தளர்வுகளற்ற முழு ஊரடங்கு நீட்டித்ததை அடுத்து 22.05.2021 மற்றும் 23.05.2021 அன்று வெளியூர் செல்லும் பயணிகள் நலன் கருதித் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் சுமார் 4,500 பேருந்துகள் இயக்கப்பட்டன.
- 22.05.2021 அன்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மதுரை மாட்டுத் தாவணி பேருந்து நிலையம் மற்றும் 23.05.2021 – அன்று சென்னை கோயம்பேடு பேருந்து நிலையத்திலும் ஆய்வு செய்து பயணிகளிடம் குறைகளைக் கேட்டு நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்.
- 26.05.2021 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றி, ஜனவரி–2020 முதல் ஏப்ரல்–2020 வரையிலான காலகட்டத்தில் ஓய்வுபெற்ற 2,457 போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு நிலுவைத் தொகையாக ரூ.497.32 கோடி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.
- மே, ஜூன், ஜூலை–2021 வரையிலான காலகட்டத்தில் சுமார் 1,22,000 ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்குவதற்காக ரூ.1,143.43 கோடி நிதி உதவி, கடனாகவும், மற்றும் சுமார் 83,411 ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கு ஓய்வூதியமாக ரூ.321.09 கோடியும் வழங்கியது.
- மார்ச்–2021 மற்றும் ஏப்ரல்–2021 ஆகிய ஆண்டுகளில் மாநில போக்குவரத்துக் கழகங்களுக்கு டீசல் செலவு அதிகரிப்பு விலையை ஈடு செய்ய ரூ.176.74 கோடியை அரசு வழங்கியுள்ளது.

மாநிலப் போக்குவரத்துக் கழகங்களுக்கு, கடன்களை வழங்குவதற்கான சட்டரீதியான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகத் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திற்குப் பங்கு மூலதன உதவியாக ரூ.424.47 கோடியை அரசு வழங்கியுள்ளது.

- பன்னாட்டு நிதி நிறுவனமான, KfW, ஜெர்மனி நிதியுதவியுடன் தமிழ்நாடு பேருந்து நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ், சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூரில் 500 மின்சாரப் பேருந்துகளை அறிமுகப்படுத்துதல் மேலும் 2,100 BS-VI டீசல் பேருந்துகள் வாங்குதல் மற்றும் தகவல் தொழில்நுட்பம், நுண்ணறிவுப் போக்குவரத்துத் திட்டம் மற்றும் பணமில்லாப் பயணச் சீட்டுத் திட்டம் ஆகியவை செயல்படுத்தலில் உள்ளது.
- 07.05.2021 முதல் 28.07.2021 வரை புதிதாக 22 வழித்தடங்கள் துவங்கப்பட்டு 29 பேருந்துகள் இயக்கப்பட்டும், முன்னர் நிறுத்தப்பட்ட 29 வழித்தடங்களில் மீண்டும் பேருந்து இயக்கம் தொடங்கப்பட்டன.
- அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் மொத்த 20,575 பேருந்துகளில்



15,012 பேருந்துகளில் புதுப்பொலிவுடன் திருவள்ளுவர் படம் மற்றும் திருக்குறள் விளக்கவுரையுடன் பேருந்துகளில் பொருத்தப்பட்டது.

- போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் 1,22,035 தொழிலாளர்களில் 18 முதல் 45 வயது உள்ளவர்களில் 87.59 சதவிகித நபர்களுக்கும், 45 வயதிற்கு மேற்பட்டவர்களில் 92.56 சதவிகித நபர்களுக்கும் Covid–19 தடுப்பூசி செலுத்தப்பட்டது.
- உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டத்தின் கீழ் 25.07.2021 வரை பெறப்பட்ட 8,981 மனுக்களில் 7,989 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டன.



"புதிய பேருந்துகளைக் கொள்முதல் செய்து பொதுமக்களுக்குத் தடையற்ற பேருந்து வசதிகளைச் செய்திடவேண்டும்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்



மாண்புமிகு வனத்துறை அமைச்சர்
திரு. **கா. ராமச்சந்திரன்**
அவர்கள்

வனத்துறை

- பசுமைத் தமிழகத்தை உருவாக்குவதன் முன்னோட்டமாக முன்னாள் தமிழக முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 97ஆவது பிறந்தநாளான 03.06.2021 அன்று மாநிலம் முழுவதும் 38,000 மரக்கன்றுகள் நடப்பட்டன.
- பொது இடங்களில் உள்ள மரங்களைப் பாதுகாப்பதற்காக மாநிலப் பசுமைக்குழு மற்றும் மாவட்டப் பசுமைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.



- தேசியப் பூங்காக்கள் மற்றும் வன உயிரினச் சரணாலயங்களில் உள்ள விலங்குகளை கோவிட் பாதிப்பிலிருந்து பாதுகாக்க மாநில அளவிலான பணிக்குழு ஏற்படுத்தப்பட்டது.

வனம்



நாகூர் தர்கா சின்ன ஆண்டவர் கந்தூரி மற்றும் பெரிய ஆண்டவர் கந்தூரி சந்தனக்கூடு திருவிழாவிற்கு 45 கிலோ சந்தனக் கட்டைகளை இலவசமாக வழங்குவதற்கான அரசாணை நிருவாகிகளிடம் வழங்கப்பட்டது.



"தமிழ்நாட்டின் காடு மற்றும் மரங்களின் அடர்த்தியை மாநிலத்தின் நிலப்பரப்பில் 33 சதவிகிதமாக உயர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை உறுதியுடன் மேற்கொள்ளவேண்டும்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்



மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல்துறை அமைச்சர் திரு. **அர.சக்கரபாணி** அவர்கள்

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல்துறை

✸ கொரோனா தொற்றுநோய்ப் பரவல் காரணமாகப் பொதுமக்களின் வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையில் ரூ.8,392.76 கோடி செலவில்



2,09,81,900 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா நிவாரணத் தொகை ரூ.4,000 இரு தவணைகளாக வழங்கப்பட்டது.

✸ ரூ.977 கோடி செலவில், 14 மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பானது அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கப்பட்டது.

✸ 3,38,512 குடும்ப அட்டைதாரர்களுக்குப் புதிய மின்னணு குடும்ப அட்டை வழங்கப்பட்டுள்ளது.





மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர்
திரு. **வி.செந்தில் பாலாஜி** அவர்கள்

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு (மொலாசஸ்)

மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்

- **மின்நிறுவுத் திறன்**

  மாநிலத்தின் மொத்த மின்நிறுவுத் திறன் 32,646 மெகாவாட்.

- **கூடுதல் மின்நிறுவுத் திறன்**

  புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் 36 மெகாவாட் கூடுதல் மின்நிறுவுத் திறன் தமிழக மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

- **புதுப்பிக்கத்தக்க எரிசக்தி**

  - **காற்றாலை மின் சக்தி**

காற்றாலை மின்சக்தியில் 2.5 மெகாவாட் அளவிற்குப் புதிய காற்றாலைகள் நிறுவப்பட்டுத் தற்போதைய காற்றாலை மின்நிறுவுத் திறன் 8,569.9 மெகாவாட்.



காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து 5,096 மில்லியன் யூனிட் கிடைக்கப்பெற்றுள்ளது.



➢ **சூரிய மின்சக்தி**

33.5 மெகாவாட் அளவிற்குச் சூரிய மின்சக்தி நிறுவுத் திறன் தமிழ்நாடு மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுத் தற்போதைய சூரிய மின்சக்தி நிறுவுத் திறன் 4,558 மெகாவாட் ஆகும்.

சூரிய சக்தி மின்உற்பத்தி நிலையங்களிலிருந்து 1,647 மில்லியன் யூனிட் கிடைக்கப்பெற்றுள்ளது.

➢ **மின் பகிர்மானம்**

999 கி.மீ. உயரழுத்த மின் பாதைகளும் (HT), 2,613 கி.மீ தாழ்வழுத்த மின் பாதைகளும் (LT) மற்றும் 3,119 பகிர்மான மாற்றிகளும் இயக்கத்திற்குக் கொண்டுவரப்பட்டு, 1,04,260 புதிய மின் இணைப்புகள் பல்வேறு பிரிவுகளின் கீழ் வழங்கல்.



➢ **புதிய மாநில அளவிலான மையப்படுத்தப்பட்ட நுகர்வோர் சேவை மையம்**

மின் நுகர்வோர்களின் அனைத்துப் புகார்களையும் கூடுதலாகப் பதிவு செய்ய 94987 94987 என்ற கைபேசி எண்ணுடன் புதிய மாநில அளவிலான மையப்படுத்தப்பட்ட நுகர்வோர் சேவை மையமான மின்னகம்.

➢ **ஒருங்கிணைந்த மின் பராமரிப்புத் திட்டம்**

மின்வெட்டைத் தவிர்க்கும் பொருட்டு, மாநிலம் முழுவதும் ஒருங்கிணைந்த பராமரிப்புத் திட்டத்தின்கீழ், 2,72,912 எண்ணிக்கையிலான பாரமரிப்புப் பணிகள்.

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை

✷ **அரசு அலுவலகங்களில் சூரிய மேற்கூரை மின் அமைப்புகள் (CAPEX Mode)**



"மின் நுகர்வோர் சேவைகளை மேம்படுத்தி நுகர்வோர் மின் அளவீடு மற்றும் கணக்கீட்டை தாங்களே தங்கள் கைப்பேசிச் செயலி மூலம் அறிந்துகொள்ளும் வகையில் புதிய செயலி அறிமுகப்படுத்த வேண்டும்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

332 அரசு மேல்நிலை, உயர்நிலைப் பள்ளிகளில் 1,259 கிலோவாட் கூட்டுத்திறனின் சூரிய மேற்கூரை அமைப்புகள் நிறுவுவதற்குப் பணி ஆணை.

- சென்னை அண்ணா மேலாண்மை நிலையத்தில் 128 கி.வாட் திறன் கொண்ட சூரிய மேற்கூரை அமைப்பு.



- நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 60 கி.வாட் திறன் கொண்ட சூரிய மேற்கூரை அமைப்பு, 176.2 கி.வாட் மொத்தத் திறனிற்கு, சூரிய மேற்கூரை அமைப்பு நிறுவும் பணிகள் மேம்பட்ட நிலையில் உள்ளது.

- **சூரிய எரிசக்தி உற்பத்தி செய்யும் விவசாயி: (KUSUM பகுதி – C மின் கட்டமைப்புடன் இணைக்கக்கூடிய விவசாய சூரிய நீர் இறைப்பான்கள்)**

சூரிய எரிசக்தியினால் இயங்கும் விவசாய நீர் இரைப்பான்கள் KUSUM பகுதி 'C'யின்கீழ் ரூ.1,000 கோடி திட்ட மதிப்பீட்டில் 220 மெகாவாட் கூடுதல் திறன் உற்பத்தி.



மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர்
திரு. **ஆர்.காந்தி**
அவர்கள்

கைத்தறி மற்றும் துணிநூல் துறை

- "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" துறை மூலம் பெறப்பட்ட 201 கோரிக்கை மனுக்களில் 198 கோரிக்கைகள் மீது தீர்வு காணப்பட்டுள்ளது. 3 கோரிக்கைகளுக்கு இடைக்காலப் பதிலுரை அனுப்பப்பட்டுள்ளது.
- மல்பெரி சாகுபடி, சொட்டு நீர்ப்பாசனம் அமைத்தல், புழு வளர்ப்பு மனை அமைத்தல், புழு வளர்ப்புத் தளவாடங்கள் வழங்குதல் போன்றவற்றுக்காக 1,103 பயனாளிகளுக்குத் திட்ட உதவியாக ரூ.5.03 கோடி வழங்கல்.
- தமிழ்நாடு பட்டு விவசாயிகளால் 1615.056 மெட்ரிக் டன் பட்டுக்கூடுகள் உற்பத்தி.
- அரசு பட்டுக்கூடு அங்காடிகளில் 232.97 மெட்ரிக் டன் பட்டுக்கூடுகள் பரிவர்த்தனை.
- அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகம் காஞ்சிபுரத்தில் 11.465 மெட்ரிக் டன் மல்பெரி கச்சாப்பட்டுப் பரிவர்த்தனை.
- தமிழ்நாடு கூட்டுறவுப் பட்டு உற்பத்தியாளர் இணையம் (டான்சில்க்), காஞ்சிபுரம் மூலம் 14.478 மெட்ரிக் டன்

கைத்தறி மற்றும் துணிநூல், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், பூதானம் மற்றும் கிராம தானம்



முறுக்கேற்றிய பட்டு நூல், பட்டுக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை.

- கோ–ஆப்டெக்ஸ் ரூ.12 கோடி மதிப்பிலான துணிகள் விற்பனை.
- மின் வணிகத்தினை மேம்படுத்த கோ–ஆப்டெக்ஸ் கைப்பேசிச் செயலி அறிமுகம்.
- பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ், 2021ஆம் ஆண்டில் 792 பயனாளிகளுக்கு ரூ.18.29 கோடி விளிம்புத்தொகை மானியம் வழங்கப்பட்டு 5,489 நபர்களுக்கு வேலைவாய்ப்பு.
- தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் கிராமிய நூற்பு நிலையம் கதர் மற்றும் பட்டு உபகிளைகள் என 62 கதர் உற்பத்தி அலகுகளில் 1,116 நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்கள் 501 பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு மாதம் ஒன்றுக்குக் கூலியாகத் தொகை ரூ.35 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது.
- தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் சோப்பு, தோல், தச்சு மற்றும் கருமாரத் தொழில், கைமுறைக் காகிதம் மற்றும் தேன் பதப்படுத்தும் அலகுகள் என 35 கிராமப்பொருட்கள் உற்பத்தி அலகுகளில் பணியாற்றும் 250 தொழிலாளர்களுக்கு மாதம் ஒன்றுக்குக் கூலியாகத் தொகை ரூ.12 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது.
- கதர், பாலிவஸ்திரா, பட்டு ரகங்கள், கிராமப் பொருட்கள் மற்றும் பனைப்பொருட்களின் சிறப்புகளைப் பொதுமக்கள் அறிந்துகொள்ள மாநிலத்திலுள்ள முக்கிய நகரங்களில் விழிப்புணர்வு மற்றும் கண்காட்சி முகாம்கள் நடத்துவது, மக்களிடையே Digital Marketing முறையில் சமூக ஊடகங்களான Instagram, Facebook, YouTube மற்றும் தொலைக்காட்சிகள் மூலம் விளம்பரப்படுத்துவது மற்றும் வாரியப் பொருட்களை இணையதளம் மூலம் எளிதாகப் பெற்றிடும் வகையில் கைப்பேசிச் செயலியை (Mobile App) உருவாக்குவது போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



"நெசவாளர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் வகையில் அரசின் நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

திரு.**மா.சுப்பிரமணியன்**

அவர்கள்

மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வு

- "மக்களைத் தேடி மருத்துவம்" என்ற புதிய திட்டம் ரூ.257 கோடி செலவில் துவக்கம். இத்திட்டத்தின் கீழ் தொற்றா நோய்களுக்கான மருந்துகள் மக்களின் வீடுகளுக்குச் சென்று வழங்கப்படும்.
- திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் சீமாங்க் ஒப்புயர்வு மையம் திறப்பு.



- தினசரி கோவிட் நோய்த்தொற்று எண்ணிக்கை 26,465 ஆக இருந்து, பின்னர் 36,184 ஆக உயர்ந்த நோய்த்தொற்று எண்ணிக்கை, அரசு எடுத்த துரித நடவடிக்கைகளினால், தற்போது தினசரி பாதிப்பு எண்ணிக்கை 2,000க்கும் கீழ் குறைந்துள்ளது. நோய்த்தொற்று விகிதமும் 2 விழுக்காட்டிற்கும் கீழாகக் குறைந்துள்ளது.



- ஆக்சிஜன் படுக்கை வசதி தேவைப்படும் கொரோனா நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்குப் பரிசீலித்து வழங்க, மாநில மற்றும் மாவட்ட கோவிட்–19 ஒருங்கிணைந்த கட்டளை மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் 2,55,373 பயனாளிகளுக்கு ரூ.513.54 கோடி காப்பீட்டுத் தொகையில் இலவச மருத்துவச் சிகிச்சைகள் அளிக்கப் பட்டுள்ளது. உயர் சிறப்பு உயர் சிகிச்சை ரூ.169.90 கோடி செலவில் 169 நபர்களுக்குச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.
- கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு, தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்ற 28,360 நபர்களின் மருத்துவச் சிகிச்சைக் கட்டணம், ரூ.361.64 கோடி முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் ஏற்கப்பட்டுள்ளது.
- தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளில் 1,499 பயனாளிகளுக்குக் கருப்புப் பூஞ்சை நோய்க்கு ரூ.4.60 கோடி செலவில் சிகிச்சை வழங்கப்பட்டது.
- கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, 26,126 ஆக்சிஜன் படுக்கைகள், 50,075 ஆக்சிஜன் அல்லாத படுக்கைகள், 3,417 தீவிர சிகிச்சைப் பிரிவு படுக்கைகள் என 79,618 படுக்கைகள் கூடுதலாக உயர்த்தப்பட்டது.
- 07.05.2021இல் 3,134 ஆக இருந்த ஆக்சிஜன் செறிவூட்டிகள் தற்போது 11,854 ஆக அதிகரிக்கப்பட்டது.
- கூடுதலாக 8,720 ஆக்சிஜன் செறிவூட்டிகள் அதிகரிக்கப்பட்டது.





- 155 ஆக்சிஜன் உற்பத்தி செய்யும் PSA நிலையங்கள் அரசு மருத்துவமனைகளில் நிறுவுவதற்கான நடவடிக்கையில் உள்ளன.
- 07.05.2021இல் 279ஆக இருந்த கொரோனா கவனிப்பு மையங்கள் தற்போது 780ஆக அதிகரிக்கப்பட்டன. கூடுதலாக 501 மையங்கள் ஏற்படுத்தப் பட்டன.
- 07.05.2021இல் 13ஆக இருந்த சித்தா கோவிட் கவனிப்பு மையங்கள், தற்போது 79 ஆக உயர்த்தப்பட்டன. கூடுதலாக 66 கோவிட் சிகிச்சை மையங்கள் 5,649 படுக்கை வசதிகளுடன் ஏற்படுத்தப்பட்டன.
- கோவிட்–19 தடுப்புப் பணிக்காக 3,075 மருத்துவர்கள், 5,362 செவிலியர்கள் உட்பட 16,253 பணியாளர்கள் புதியதாக நியமனம்.
- கொரோனா தடுப்பூசிச் செலுத்திக் கொண்டவர்கள் எண்ணிக்கை 62.36 இலட்சத்திலிருந்து, 2.25 கோடியாக உயர்வு.
- சென்னை, கிண்டி கிங் நோய்த் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில் ரூ.250 கோடி மதிப்பீட்டில் 500 படுக்கைகள் கொண்ட புதிய பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை நிறுவ நடவடிக்கை.
- கொரோனா நோய்த் தடுப்பிற்காக, 4,54,767 ரெம்டெசிவிர் குப்பிகள் அரசு மருத்துவ மனைகளுக்கும், 1,40,713 ரெம்டெசிவிர் குப்பிகள் ரூ.31.47 கோடிக்குத் தனியார் மருத்துவமனைகளுக்கும் விநியோகம் செய்யப்பட்டது.
- ரூ.71.01 கோடி மதிப்பில் கருப்புப் பூஞ்சை நோய்க்குரிய ஆம்போடெரிசின்–பி குப்பிகள், பொஸகோனசோல் குப்பிகள் மற்றும் மாத்திரைகள் மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டது.
- இளம் குழந்தைகளுக்கு 6ஆவது வாரம், 14ஆவது வாரம் மற்றும் 9ஆவது மாதத்தில் வழங்கும் Pneumococcal Conjugate Vaccine (PCV) தடுப்பூசித் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் 23.07.2021 முதல் செயலாக்கம்.
- 23.91 இலட்சம் வளரிளம் பருவத்தினர், 79 ஆயிரம் பிரசவித்தத் தாய்மார்கள்



என 24.70 இலட்சம் நபர்களுக்கு விலையில்லா சானிட்டரி நாப்கின்கள் வழங்கப்பட்டுள்ளது.



- நடமாடும் மருத்துவமனைத் திட்டத்தில் நடத்தப்பட்ட 40,529 முகாம்களில் 29.70 இலட்சம் நபர்கள் பயனடைந்துள்ளனர்.
- அம்மா முழு உடல் பரிசோதனைத் திட்டத்தில் 88,562 நபர்களுக்கு முழு உடல் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.
- 64,970 பிரசவித்தத் தாய்மார்களுக்கு அம்மா குழந்தை நலப் பரிசுப் பெட்டகங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- 108 ஆம்புலன்ஸ் திட்டத்தில் கோவிட்–19 தொற்றுநோயினால் பாதிக்கப்பட்ட 2.7 இலட்சம் பயனாளிகள் பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட 542 ஆம்புலன்ஸ்கள் மூலம் பயனடைந்துள்ளனர்.
- 104 மாநில கட்டுப்பாட்டுத் தகவல் மையம் மூலம் 1,12,478 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.
- 102 இலவச தாய்சேய்நல ஊர்தி திட்டத்தில், 93,592 பிரசவித்த தாய்மார்கள், பச்சிளம் குழந்தைகள், டயாலிசிஸ் மற்றும் புற்றுநோயாளிகள் இலவச வாகன வசதியைப் பெற்றுள்ளனர்.





மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. **பி.மூர்த்தி** அவர்கள்

வணிகவரி மற்றும் பதிவுத்துறை

- வணிகவரித்துறை மே 2021 மற்றும் ஜூன் 2021 ஆகிய மாதங்களில் ரூ.12,549.72 கோடி வருவாய் ஈட்டியுள்ளது. இது, கடந்த ஆண்டு இதே காலத்தில் வசூலிக்கப்பட்ட ரூ.10,929.92 கோடியை விட ரூ.1,619.80 கோடியும் 14.82 சதவிகிதம் வளர்ச்சி விகிதம் கூடுதலாகும்.
- சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இழப்பீட்டுத் தொகை ரூ.1,671.82 கோடி, 16.06.2021 அன்று ஒன்றிய அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளது.
- வணிகர் நலவாரியத்தில் இணையவழி மூலம் உறுப்பினர் சேர்க்கை.
- தமிழ்நாடு வணிகர் நலவாரியத்தில் வாழ்நாள் உறுப்பினராவதற்குப் பதிவுக் கட்டணம் ரூ.500 செலுத்துவதிலிருந்து 15.07.2021 முதல் மூன்று மாதங்களுக்கு விலக்கு.
- மாநிலம் முழுவதும் உள்ள வணிகர்களுடன் மதுரை, திருநெல்வேலி, சென்னை, வேலூர்,

வணிகவரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டுகள் மற்றும் கம்பெனிகள் பதிவு



கோவை, சேலம் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் கோட்ட அளவிலான கலந்துரையாடல் கூட்டங்கள்.

- தமிழில் சரக்குகளின் மீதான வரி விகிதங்கள் ஒத்திசைக்கப்பட்ட பெயரிடும் முறை (HSN) விவரங்கள் அடங்கிய தொகுப்பு வெளியீடு.

பதிவுத்துறை

- மே 2021 முதல் ஜூலை 2021 முடிய 5,02,262 ஆவணங்கள் பதியப்பெற்று ரூ.2265.44 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. கடந்த 2020–2021 நிதியாண்டில், 5,02,847 ஆவணங்கள் பதியப்பெற்று ரூ.1,597.96 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இதன்மூலம், 41.77% வளர்ச்சி வீதம் காணப்பட்டுள்ளது.
- பதிவுத்துறையில் கட்டுப்பாட்டு அறை துவக்கப்பட்டுத் தொலைபேசி எண்கள் மூலம் அல்லது வாட்ஸ்அப் செயலி மற்றும் மின்னஞ்சல் முகவரி மூலம் பொதுமக்கள் புகார்கள் தெரிவித்திட வழிவகை. 02.08.2021 வரை 2,174 புகார்கள் மீது தீர்வு.
- குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பொறுத்து, மத்திய அரசின் ஆத்ம நிர்பார் திட்டத்தின்கீழ், வங்கி மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கடன் தொகைக்காக எழுதிக் கொடுக்கப்படும் உரிமை ஒப்படைப்பு, அடகு ஆவணங்களின் பதிவிற்குச் செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வை மீது 31.12.2021 வரை 100 விழுக்காடு விலக்கு.
- சார்பதிவாளரின் இருக்கை அமைந்துள்ள உயர்மேடை மற்றும் சுற்றி ஏற்படுத்தப்பட்டுள்ள தடுப்புகள் நீக்கம்.



"பத்திரப்பதிவு அலுவலகத்தின் சேவையானது மக்களுக்கேற்ற வகையில் எளிதானதாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்




மாண்புமிகு
பிற்படுத்தப்பட்டோர்
நலத்துறை அமைச்சர்
திரு. **எஸ்.எஸ்.சிவசங்கர்**
அவர்கள்

பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர்மரபினர் நலன்

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை

- மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு, சீர்மரபினருக்கு வழங்கப்பட்டு வரும் 20% இட ஒதுக்கீட்டில், வன்னியகுல சத்திரியர் வகுப்பினருக்கு 10.5% சிறப்பு இட ஒதுக்கீடு வழங்கச் சட்டம் இயற்றப்பட்டு, இச்சட்டம் தற்போது நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.
- சீர்மரபினர் நல வாரியத்திற்கு 2021–2022ஆம் நிதியாண்டிற்கான செலவினத்தை மேற்கொள்ள ரூ.68.02 இலட்சம் நிதி ஒதுக்கீடு.
- பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்தவர்களுக்கு 2,238 பித்தளை சலவைப் பெட்டிகள் ரூ.1.09 கோடி செலவில் வழங்கிட ஆணை.
- தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் சிறு, குறு விவசாயிகளுக்கு மானியத்துடன் கூடிய நீர்ப்பாசன கடன் வழங்கும் திட்டத்தின்கீழ், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த 807 பயனாளிகளுக்கு ரூ.4 கோடி மானியம்.








"பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் கல்வி,
பொருளாதார மேம்பாட்டுப் பணிகள் விரைந்து மேற்கொள்ள வேண்டும்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்



மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்
திரு. **பி.கே.சேகர்பாபு**
அவர்கள்

இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள்

இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை

- கொரோனா நோய்த்தொற்றுக் காலத்தில் திருக்கோயில்கள் சார்பாக நாள்தோறும் ஒரு இலட்சம் உணவுப் பொட்டலங்கள் 12.05.2021 முதல் 14.06.2021 வரை கொரோனா பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்டங்களிலும் உணவு தேவைப்படுவோருக்கு வழங்கப்பட்டது.
- இத்திட்டம், 11 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு 21.06.2021 வரை சுமார் 44 இலட்சம் உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- திருக்கோயில் தொடர்பாகப் பக்தர்கள் தங்களது குறைகளையும் கோரிக்கைகளையும் பதிவுசெய்திட ஏதுவாக "கோரிக்கைகளைப் பதிவிடுக" எனும் இணைய வழித்திட்டம்.
- பொதுமக்களின் குறைகளைத் தொலைபேசி மூலம் பெறப்பட்டு அவர்களுக்கு உடனடியாக பதில்கள், பரிகாரங்கள் ஆகியன வழங்கும் பொருட்டு 'அழைப்பு மையம்' (Call Center) தொடக்கம்.





- கொரோனா தொற்றுக் காலத்தில் இந்து சமய அறநிலையத் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள திருக்கோயில்களில் மாதச் சம்பளமின்றிப் பணியாற்றும் பூசாரிகள், அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள் மற்றும் பிற பணியாளர்களின் வாழ்வாதாரத்தினைப் பாதுகாக்கும் வகையில் உதவித்தொகை ரூ.4,000, 10 கிலோ அரிசி மற்றும் 15 வகை மளிகைப் பொருட்கள் வழங்கும் திட்டத்தின் மூலம் சுமார் 11,065 பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

- இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில் நிலங்களின் உரிமை ஆவணங்கள் இணைய தளத்தில் 09.06.2021 அன்று பதிவேற்றம் செய்யப்பட்டு, முதற்கட்டமாக 3,43,647 ஏக்கர் நிலங்கள் முழுவதும் ஒத்துப்போகும் இனங்களாகக் கண்டறியப்பட்டு அந்நிலங்களின் 'அ' பதிவேடு / நகர நில அளவைப் பதிவேடு மற்றும் 'சிட்டா' ஆகியன பொதுமக்கள் பார்வையிடும் வகையில் துறை இணையதளத்தில் வெளியீடு.

- அறநிறுவனங்களுக்குச் சொந்தமான நிலம், கட்டடம், மனை ஆகியவற்றில் ஏற்பட்ட ஆக்கிரமிப்புகளை அகற்றி 154.64 ஏக்கர் நிலமும், 152 கிரவுண்ட் 134 சதுர அடி மனைகளும், 1230.63 சதுர அடி கட்டடங்களும், 15 கிரவுண்ட் 597 சதுர அடி திருக்குளக்கரைகளும் திருக்கோயில்





வசம் மீட்பு. இவற்றின் மதிப்பு சுமார் ரூ.542.45 கோடி.

✸ காஞ்சிபுரம், அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயிலுக்குச் சொந்தமான 32 கிரவுண்டு நிலத்தில் செயல்பட்டு வந்த சீதா கிங்ஸ்டன் ஹவுஸ் மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் 13.06.2021 அன்று திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. மேற்கண்ட பள்ளி நிருவாகத்தை அருள்மிகு ஏகாம்பரநாதர் மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி எனப் பெயர் மாற்றம் செய்து, திருக்கோயிலே ஏற்று நடத்த முடிவு.

✸ திருக்கோயில்களில் கடந்த பல ஆண்டுகளாக உழவாரப்பணிகள் செய்ய ஆர்வம் உள்ள தன்னார்வலர் குழுக்கள் மூலமாகப் பணிகளை மேற்கொண்டு வந்தனர். இதனை எளிமைப்படுத்தும் வகையில் முதற்கட்டமாக 47 முதுநிலைத் திருக்கோயில்களில் உழவாரப் பணிகள் செய்வதற்கு இணையவழி முறையில் பதிவு செய்துகொள்ள புதிய வசதி. ●



"இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில்களின் பராமரிப்பு, பக்தர்களுக்கான வசதி, சுற்றுப்புறத் தூய்மை, பணியாளர் நலன் மேம்படுத்தப்பட வேண்டும்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்



நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் முனைவர் **பழனிவேல் தியாகராஜன்** அவர்கள்

நிதித்துறை, திட்டம், மனிதவள மேலாண்மை, ஒய்வூதியம் மற்றும் ஓய்வுக் கால நன்மைகள்

முதலமைச்சர் பொது நிவாரண நிதி

- கொரோனா வைரஸ் நோய்த் தடுப்பிற்காக ரூ.502.40 கோடி நன்கொடையாகப் பெறப்பட்டுள்ளது.
- இந்நிதியிலிருந்து கோவிட்–19 நோய்த்தொற்று இரண்டாம் அலையின்போது அரசு மருத்துவமனைகளுக்கு ரெம்டெசிவிர் மருந்து, திரவ ஆக்சிஜன் உருளைகள், ஆக்சிஜன் செறிவூட்டிகள், இதர மருத்துவ கருவிகள், ஆர்.டி.பி.சி.ஆர் கிட்டுகளை வாங்குவதற்காகவும், கொரோனா மூன்றாம் அலை முன்னெச்சரிக்கை முன்னேற்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் ரூ.241.40 கோடி நிதியுதவி.
- கொரோனா வைரஸ் நோய்த்தொற்றால் உயிரிழந்த 23 முன்களப் பணியாளர்களின் குடும்பத்தினருக்கு ரூ.5.21 கோடி நிதியுதவி.
- கோவிட்–19 பெருந்தொற்றுப் பாதிப்பினால் பெற்றோர்களை இழந்த 101 குழந்தைகளின் பெயரில் தலா ரூ.5 இலட்சம் வீதம் வைப்பீடு செய்வதற்காக ரூ.5.05 கோடி நிதியுதவி.





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை, ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் துணைத்தலைவர் டாக்டர் டி.ஜே.பாண்டியன் அவர்கள் 09.08.2021 அன்று, தலைமைச் செயலகத்தில் சந்தித்தார்.

- கோவிட்–19 பெருந்தொற்றுப் பாதிப்பினால் தாய் அல்லது தந்தையை இழந்த 944 குழந்தைகளுக்குத் தலா ரூ.3 இலட்சம் வீதம் ரூ.28.32 கோடி உடனடி நிவாரணம்.
- கருப்புப் பூஞ்சை நோய் சிகிச்சைக்காக உயிர் காக்கும் மருந்துகளை வாங்குவதற்காக ரூ.25 கோடி நிதியுதவி.
- பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்த 49 நபர்களின் குடும்பங்களுக்கு ரூ.1.71 கோடி நிதியுதவி.
- காவல்துறையைச் சேர்ந்த 61 பணியாளர்கள் பணியின்போது உயிரிழந்த குடும்பங்களுக்கு ரூ.1.96 கோடி நிதியுதவி.
- பல்வேறு காரணங்களால் காயமடைந்த/ உயிரிழந்த 153 நபர்களது குடும்பங்களுக்குச் சிறப்பு நிகழ்வாகக் கருதி ரூ.2.21 கோடி நிதியுதவி.

அரசு ஊழியர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

- அரசு ஊழியர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மேலும் நான்காண்டிற்கு நீட்டிப்பு.
- இத்திட்டத்தின் மூலம், பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் அவர்களின் தகுதியுள்ள குடும்ப உறுப்பினர்களும் 2021–2025 வரை ரூ.5 இலட்சம் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மூலம் பணமில்லா சிகிச்சை பெற வழிவகை.
- இப்புதிய திட்டத்தில், குறிப்பிட்ட நோய்களையும், சிகிச்சைகளையும் சிறப்பினமாகக் கருதி அதற்கு ரூ.10 இலட்சம் வரை மருத்துவச் சிகிச்சை பெற உச்சவரம்பு உயர்வு.
- உயிர் காக்கும் அவசரத்தன்மை கொண்ட அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகளுக்கு இத்திட்டத்தின்கீழ், அங்கீகரிக்கப்படாத மருத்துவமனைகளிலும் சிகிச்சை மேற்கொள்ள வழிவகை.

- புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் அங்கீகரிக்கப்படாத மருத்துவமனைகளில் வழங்கப்படும் சிகிச்சைகள் மற்றும் அங்குள்ள மருத்துவ வசதிகளின் தரம் அறியப்படாத நிலையில், ஒரு அரசு ஊழியர் தெளிவான மனநிலையில் அத்தகைய மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்டால், அதே சிகிச்சையானது கீழ்நிலையில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனையில் மேற்கொண்டால் ஆகும் செலவில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தில் 75% அளவிற்கு மருத்துவச் செலவினம் மீள வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தின்கீழ், 116 சிகிச்சைகள், அறுவை சிகிச்சைகள் மற்றும் 87 மருத்துவ நடைமுறைகளும் அடங்கும்.
- தமிழ்நாடு, புதுச்சேரி, பெங்களூரு, திருவனந்தபுரம் மற்றும் புதுடெல்லி ஆகிய இடங்களில் 1,169 மருத்துவமனைகள் இத்திட்டத்தின்கீழ் மருத்துவ உதவியினை வழங்குவதற்கு வழிவகை.
- புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் 13,898 பயனாளிகள் ரூ.73.57 கோடி அளவிற்கு மருத்துவச் சிகிச்சை பெற்றுப் பயன்.
- கோவிட்–19க்கான சிகிச்சைகளை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் மேற்கொள்ள ரூ. 5 கோடி நிதிய மூலதனம் (Corpus Fund) உருவாக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியர்களுக்கான
புதிய மருத்துவக் காப்பீடுத் திட்டம்

- ஓய்வூதியம் பெறுபவர்களும், குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும் ரூ.4 இலட்சம் வரை இம்மருத்துவ காப்பீட்டுத் திட்டம் மூலம் பணமில்லா சிகிச்சை பெற வழிவகை.
- சில குறிப்பிட்ட நோய்களையும், சிகிச்சைகளையும் சிறப்பினமாகக் கருதி அதற்குரிய உச்சவரம்பு ரூ.7.5 இலட்சமாக நிருணயம்.
- 114 சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சை முறைகள் சேர்க்கப்பட்டு, 1,168 மருத்துவமனைகளில் இத்திட்டத்தின்கீழ், பணமில்லா மருத்துவ உதவியினை வழங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தின்கீழ், 11,637 பயனாளிகள் ரூ.64.17 கோடி அளவிற்குக் கட்டணமில்லா மருத்துவச் சிகிச்சையினைப் பெற்றுள்ளனர்.
- தற்போது கோவிட்–19க்கான சிகிச்சைகளை மேற்கொள்ள ஓய்வூதியதாரர்களுக்கு ரூ2.5 கோடி நிதிய மூலதனம் (Corpus fund) உருவாக்கம்.



தமிழக அரசின் நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கை (09.08.2021)

- கொரோனா நோய்த்தொற்றின் காரணமாக ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, மூத்த குடிமக்களாகிய ஓய்வூதியம் பெறுவோர் / குடும்ப ஓய்வூதியம் பெறுவோர் நலன் கருதி ஓய்வூதியர்களின் 2021ஆம் ஆண்டிற்கான வருடாந்திர நேர்காணல் மற்றும் வாழ்வுச் சான்று சமர்ப்பித்தல் ஆகியவற்றிற்கு விலக்கு அளித்து ஆணை.

உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை

- தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் 2014இன்படி உள்ளாட்சி நிறுவனங்களின் தணிக்கை மேற்கொள்ள உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை இயக்குநருக்குச் சட்டப்பூர்வ அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.
- 2018–2019ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த வரைவு தணிக்கை அறிக்கை அரசின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் சட்டப்பேரவையில் சமர்ப்பிக்க நடவடிக்கை.
- உள்ளாட்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், நூலக ஆணைக் குழுக்கள், வேளாண் விற்பனைக் குழுக்களில் 2019–2020ஆம் ஆண்டிற்கான தணிக்கை, 3,985 நிறுவனங்களில் முடிவுற்றுள்ளது.
- மேற்குறிப்பிடப்பட்ட காலத்தில் 19,230 தணிக்கைத் தடைகள் எழுப்பப்பட்டும், 1,437 தணிக்கைத் தடைகளுக்கு உரிய பதில் பெறப்பட்டு நீக்கம் செய்யப்பட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- 383 தணிக்கைத் தடைகள் தீர்வு செய்யப்பட்டு ரூ.29.15 இலட்சம் மதிப்பிலான தொகை, தணிக்கை பிடித்தம் மூலம் வரவாக்கப்பட்டுள்ளது.
- உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறையால் தணிக்கை மேற்கொள்ளப்படும் நிறுவனங்களான மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பல்கலைக்கழகங்களால் மேற்குறிப்பிடப்பட்ட காலத்தில் தணிக்கை கட்டணம் ரூ.2.40 கோடி அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.
- 30,336 எண்ணிக்கையிலான உள்ளாட்சி நிறுவன ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.168.89 கோடி மதிப்பிலான ஓய்வூதியம் மற்றும் பிற பயன்கள் வழங்கப்பட்டுள்ளன.
- 15 உள்ளாட்சி நிறுவன ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.3.23 இலட்சம் மதிப்பிலான மருத்துவ நலநிதிப் பயன்களும் 188 உள்ளாட்சி நிறுவன ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.51.61 இலட்சம் மதிப்பிலான குடும்பப் பாதுகாப்பு நிதிப் பயன்களும் வழங்கப்பட்டுள்ளன.

சிறுசேமிப்புத்துறை

- கடந்த இரண்டு நிதியாண்டுகளில் ஒப்பிடுகையில் நடப்பு நிதியாண்டில் மிக அதிக அளவில் சிறுசேமிப்பு வசூல் உயர்ந்துள்ளது.

சிறுசேமிப்பு முகவர்கள் நியமனம்

- கடந்த நிதியாண்டினைவிட தற்பொழுது 10,346 சிறுசேமிப்பு முகவர்கள் கூடுதலாக நியமனம்.

திட்டம் மற்றும் வளர்ச்சி

மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு

- மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு, துணைத்தலைவர், முழுநேர உறுப்பினர் மற்றும் பல்வேறு துறைகளின் வல்லுநர்களான எட்டுப் பகுதிநேர உறுப்பினர்களைக் கொண்டு திருத்தியமைப்பு.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குக் குறிக்கோள்களான பத்தாண்டுக்கால தொலைநோக்குத் திட்டச் செயல்முறை, மாநில மனித வளர்ச்சி அறிக்கை தயாரிப்பு, கல்வி, வேலைவாய்ப்பு அதிகரித்தல், அனைவருக்கும் சுகாதாரம், விவசாய முன்னேற்றம், இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகிய 7 இலக்குகளை,



மாநில வளர்ச்சிக் கொள்கைக்குழு வாயிலாக எய்திட மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் முதல் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டு அதற்கான பூர்வாங்க பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

✸ மேலும், இது தொடர்பாக விரிவான கொள்கை ஆவணங்களின் தலைப்புகளை இறுதி செய்வதற்காகத் துணைத்தலைவர் அவர்கள் தலைமையில் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவில் உறுப்பினர்கள் கூட்டம் 19.07.2021 அன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில், கீழ்க்காணும் ஊரக மற்றும் நகர்ப்புற நில மேம்பாடு, நீர் மேலாண்மை மூலம் விவசாயம் மற்றும் குடிநீர்ப் பெருக்கம், கல்வித் தரம் மேம்படுத்துதல் மற்றும் கல்வி பயில உகந்தச் சூழலை ஏற்படுத்துதல், கிராம மற்றும் நகர்ப்புறங்களின் வீட்டு வசதி மேம்பாடு, கிராம மற்றும் நகர்ப்புறங்களின் திட, திரவக் கழிவுகளின் மேலாண்மை, சமூக நீதியின் கருத்தாக்கம் மற்றும் செயல்பாடுகள், தொழில்துறை வாயிலாகப் பொருளாதார மேம்பாடு, வேலைவாய்ப்பு மற்றும் திறன் பயிற்சி வாயிலாகப் பொருளாதார மேம்பாடு அடைதல், அனைவருக்கும் சுகாதாரம், கலை, இலக்கியம், மொழி மற்றும் பண்பாட்டிற்கான கொள்கைகள் ஆகிய 10 முக்கியத் தலைப்புகளில் கொள்கை ஆவணங்கள் தயாரிப்பதற்கான வழிமுறைகள் விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித்துறை

✸ கீழ்க்காணும் மதிப்பீட்டு ஆய்வு அறிக்கைகள் மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழுவின் ஒப்புதலுக்காகத் தயார் நிலையில் உள்ளது.

- தமிழ்நாட்டில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், காக்ளியர் உள்ளமைப்பு அறுவை சிகிச்சை மேற்கொண்ட சிறுவர்கள் பற்றிய மதிப்பீட்டு ஆய்வு.
- பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம் குறித்த மதிப்பீட்டாய்வு.
- பேரழிவு மற்றும் சமூகப் பயன்பாட்டில் ஆளில்லா வான்வழி வானூர்திகளின் வடிவமைப்பு மேம்பாடு மற்றும் செயல்பாடு குறித்த மதிப்பீட்டாய்வு.
- தமிழ்நாடு ஓர் பொருளாதார ஆய்வறிக்கை 2014–2015 முதல் 2017–2018 வரைக்கான வெளியீடு அரசின் ஒப்புதல் பெற்று அரசு அச்சகத்திற்கு அச்சிடுவதற்காக அனுப்பப்பட்டுள்ளது.
- மே 2021இல் நிதித்துறை அரசுக் கூடுதல் தலைமைச் செயலர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாநில மதிப்பீட்டுக்குழு பல்வேறு துறைகளின் வேண்டுகோளின்படி 21 மதிப்பீட்டு ஆய்வுகள் 2021–2022ஆம் ஆண்டிற்காக இத்துறை மூலம் மேற்கொள்ள ஒப்புதல் அளித்துள்ளது.

- திட்டமிடல் மற்றும் மேம்பாட்டுத்துறை ஒரு வலுவான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு முறையை நிறுவனமயமாக்குதல், சிறந்த நடைமுறைகளைப் பரிமாற்றம் செய்தல் மற்றும் கற்றல் மற்றும் மேம்பாட்டைப் பகிர்ந்து கொள்வதற்காக மேம்பாடு கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலுவலகத்துடன் உடன்படிக்கை கையெழுத்திட்டுள்ளது.

சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

- திருநெல்வேலி மாவட்டத்தில், சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், சுற்றுச்சூழல் வளர்ச்சிக் குழுவைச் சார்ந்த கானி இனப் பழங்குடியினர் மிளகு உற்பத்திக்கான கரிமச் சான்றிதழைப் பெற்றுக் கானி மிளகுத்தூளைக் கிலோவிற்கு ரூ.900 என்ற விலையில் விற்பனை செய்கிறார்கள்.

- 2021–2022ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து, சம்பந்தப்பட்ட அமலாக்க முகமைகளிடமிருந்து பயனீட்டுச் சான்றிதழ்கள் பெற்ற பிறகு, சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் தற்போது நடைபெற்று வரும் திட்டங்களுக்கு 2ஆவது தவணையாக ரூ.1.55 கோடி வழங்கப்பட்டுள்ளது.

மனித வள மேலாண்மைத்துறை

- மனித வள ஆற்றலை மேம்படுத்தும் முயற்சியில் முதற்படியாகத் தலைமைச் செயலகத்தில் 8 துறைகளின் பெயர்கள் மாற்றப்பட்டுத் தமிழக அரசு அலுவல் விதிகள் 1978 மற்றும் தலைமைச் செயலக அறிவுறுத்தங்களின் முதலாம் விவர அட்டவணையில் திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு அரசுப் பணிகளில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மற்றும் சீர்மரபினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 20% இட ஒதுக்கீட்டிற்குள்ளாக, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், இதர மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குத் தனி ஒதுக்கீடு வழங்கி இயற்றப்பட்ட தமிழ்நாடு சட்டம் 8/2021இன் அடிப்படையில், அரசுப் பணி நியமனங்களுக்கான 200 புள்ளிகளைக் கொண்ட இனச் சுழற்சிப் பட்டியலை மாற்றியமைத்து, அரசாணை வெளியிடப்பட்டுள்ளன.

- தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுக்கள் மற்றும் முதல் மேல்முறையீட்டு மனுக்களை இணைய வழியில் விண்ணப் பிப்பதற்கான வசதி இத்துறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு நான்கு உறுப்பினர்கள் நியமனம்.



"அரசின் வரவு–செலவுத் திட்டம் தயாரித்தல் மற்றும்
வெளியிடுவதில் புதிய சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்



மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்
திரு. **சா.மு.நாசர்**
அவர்கள்

பால்வளத் துறை

- பொதுமக்கள் நலன் கருதித் தமிழக அரசு அனைத்து வகையான ஆவின் பால் விற்பனை விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.3 குறைப்பு. இதன் பயனாக, ஆவின் பால் விற்பனை நாளொன்றுக்கு இலட்சம் லிட்டர் அதிகரித்துள்ளது.
- சென்னைப் பெருநகரில் ஆவின் பால் விற்பனை 23.05.2021 அன்று அதிகபட்சமாக 15.04 இலட்சம் லிட்டர் விற்பனை செய்து சாதனை படைத்துள்ளது.
- பால் விற்பனை விலைக் குறைப்பினால் 1 கோடி நுகர்வோர்கள் மற்றும் 450 நிறுவனங்கள் பயனடைந்துள்ளன.
- மாவட்ட ஒன்றியங்கள் மூலம் அதிகபட்ச விற்பனையாக 23.07.2021 அன்று 13.21 இலட்சம் லிட்டர் பால் விற்பனை



பால்வளம் மற்றும்
பால் பண்ணை வளர்ச்சி

செய்யப்பட்டுள்ளது. இது ஆவின் வரலாற்றில் அதிகபட்ச விற்பனையாகும்.



- பால் விலை குறைப்பினால் 1 கோடி நுகர்வோர்கள் வருடத்திற்கு ரூ.16.43 கோடி சேமிப்பின் மூலம் பலனடைகிறார்கள்.
- பால் விலை குறைப்பினால் புதியதாக 6 இலட்சம் நுகர்வோர்கள் ஆவினில் இணைந்தமையால், ஆவினின் சந்தை மதிப்பு அதிகரித்துள்ளது.
- ஆவினுக்குப் பால் வழங்கும் 4.36 இலட்சம் உற்பத்தியாளர்களுக்கு மாதந்தோறும் 10,000 மெட்ரிக் டன் கால்நடைத் தீவனம் வெளிச்சந்தை விலையைவிடக் கிலோ ஒன்றிற்கு ரூ.4 வரை குறைவாக வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம், பால் உற்பத்தியாளர்களின் பால் உற்பத்திச் செலவில் ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ.42 கோடி சேமிப்பின் மூலம் பால் உற்பத்தியாளர்கள் பயனடைகிறார்கள்.



"பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை அதிகரிக்கவும், செயலிழந்த பால் உற்பத்தியாளர் சங்கங்களைப் புதுப்பிக்கவும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்



மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.**செஞ்சி கே.எஸ். மஸ்தான்** அவர்கள்

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை

- தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம், 226 சிறுபான்மையினருக்கு ரூ.157.21 இலட்சம் கடனுதவி.
- தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தால் சென்னையில் ரூ.11 கோடி மதிப்புள்ள 5,300 சதுர அடி பரப்பிலான வக்ஃப் சொத்துக்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்பு.
- தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தில் நேரடி நியமனம் மூலம் 31 நுழைவு நிலைப் பதவியை நிரப்புவதற்கு அரசு அனுமதி.
- 6 கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்களுக்கு இணை மானியமாக ரூ.13.90 இலட்சம் ஒப்பளிப்பு.
- சென்னை முஸ்லீம் மகளிர் உதவும் சங்கத்திற்கு இணை மானியமாக ரூ.20 இலட்சம் ஒப்பளிப்பு.
- தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்குப் புதியதாக உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டுத் தலைவராக திரு.எம்.அப்துல் ரகுமான் ஒருமனதாகத் தேர்வு.
- திரு.S.பீட்டர் அல்போன்ஸ் அவர்களைத் தலைவராகவும், Dr. மஸ்தான் அவர்களைத் துணைத் தலைவராகவும் மற்றும் 8 உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டுத் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் மூன்றாண்டுக் காலத்திற்குத் திருத்தி அமைப்பு.

சிறுபான்மையினர் நலன், வெளிநாடு வாழ் தமிழர் நலன், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் மற்றும் வஃக்ப் வாரியம்



வெளிநாடு வாழ் தமிழர் நலன்

- தமிழ்நாட்டில் உள்ள அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.4,000 கோவிட்–19 பெருந்தொற்றுக் கால நிவாரண உதவியாக அரசால் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பலன்கள் முகாம் வாழ் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கும் நீட்டித்து வழங்கப்பட்டுள்ளன.
- தமிழ்நாட்டில் உள்ள அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு 14 மளிகைப் பொருட்கள் அடங்கிய பரிசுப் பை வழங்க ஆணையிடப்பட்டு இத்திட்டத்தின்கீழ், பலன்கள், முகாம் வாழ் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு நீட்டித்து வழங்கப்பட்டன. இதன்மூலம், 18,932 இலங்கைத் தமிழ் அகதிக் குடும்பங்கள் பயன் பெற்றன.
- தமிழ்நாடு முழுவதும், முகாம்களில் வசிக்கும், 10,633 இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு கொரோனா தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

முகாம்களுக்கு வெளியே வசிக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள்

- முகாம்களுக்கு வெளியே வசிக்கும், 13,553 இலங்கைத் தமிழ் அகதிக் குடும்பங்களுக்கு



கோவிட்–19 பெருந்தொற்று கால நிவாரண நிதியாக ரூ.4,000 மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

வெளிநாடு வாழ் தமிழர் நலன்

- வெளிநாடுகளில் இறந்தத் தமிழர்களின் பூத உடல்களை அவர்தம் சொந்த ஊர்களுக்கு எடுத்து வரக் கோரும் 36 மனுக்கள் பெறப்பட்டு, 26 பூத உடல்கள் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன், தாயகம் கொண்டு வரப்பட்டுள்ளன.



"சிறுபான்மையினரின் கல்வி, பொருளாதார மேம்பாட்டுப் பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட வேண்டும்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்



மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்
திரு.**அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
அவர்கள்

பள்ளிக் கல்வி

பள்ளிக் கல்வித்துறை

- மாணவர்கள் நலனில் அக்கறை கொண்ட இவ்வரசு கோவிட்–19 தொற்றிலிருந்து மாணவர்களைக் காக்கும் பொருட்டும், அவர்களது உயர்கல்விச் சேர்க்கைக்கு எவ்வித இடையூறும் ஏற்படாதவாறும், 2020–2021 கல்வியாண்டில் 12ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கான பொதுத் தேர்வை இரத்து செய்து, பள்ளிக் கல்வி முதன்மைச் செயலாளர் தலைமையின்கீழ், 9 உறுப்பினர் கொண்ட குழு அமைத்து, அக்குழுவின் அறிக்கையின்படி மதிப்பெண்களை வழங்கி 19.07.2021 அன்று 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கான தேர்வு முடிவு வெளியிடப்பட்டது.
- பள்ளிக் கல்வித்துறையில் பணியாற்றி பணிக்காலத்தில் காலமான பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் 10 நபர்களுக்கு மூன்றாம் நிலை நூலகர் பணியிடத்திலும் மற்றும் 251 நபர்களுக்கு இளநிலை உதவியாளர் பணியிடத்திலும் 15.07.2021 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் பணி நியமனம் வழங்கப்பட்டன.





- அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நேரடி நியமனத்திற்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ள 20 மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு 15.07.2021 அன்று பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன.
- 2021–2022ஆம் கல்வியாண்டில் அரசு மற்றும் அரசு நிதிஉதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 8ஆம் வகுப்பு வரைப் பயிலும் 28,00,632 மாணாக்கர்களுக்கு விலையில்லாப் பாடப்புத்தகங்கள் மற்றும் நோட்டுப்புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- 1முதல்12ஆம்வகுப்புவரையுள்ள அனைத்துப் பாடங்களுக்கும் கல்வித் தொலைக்காட்சி வாயிலாகக் காணொலிப் பாடங்களைத் தயாரித்து ஒளிபரப்பி வருகிறது. மாணவர்களின் கற்கும் ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும், காணொலியின் இறுதியில் மாணவர்களுக்குப் பாடம் சார்ந்த வினாக்கள் கேட்கப்பட்டு, சரியாக பதிலளித்த மூன்று மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களைப் பற்றிய விவரம் ஒவ்வொரு வாரமும் ஞாயிறு அன்று வெளியிடப்படுகிறது. இம்மேம்படுத்தப்பட்ட காணொலிப் பாடங்கள் மூலம் கல்வித் தொலைக்காட்சியைப் பார்க்கும் மாணவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.



- 9 மற்றும் 10ஆம் வகுப்புப் பயிலும் செவித்திறன் குறைபாடுள்ள மாணவர்களுக்குச் சைகை மொழியில் அனைத்துப் பாடங்களையும் (ஆங்கிலப் பாடம் நீங்கலாக) கல்வித் தொலைக்காட்சி வாயிலாக ஒளிபரப்பி வருகிறது. தற்போது, 6 முதல் 8ஆம் வகுப்பு வரைப் பயிலும் மாணவர்கள் பயனடையும் வகையில் சைகை மொழியில் ஒளிபரப்பப்படும் பயன் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது.



- 1 முதல் 12ஆம் வகுப்பு வரையுள்ள பாடப் புத்தகங்கள் அனைத்திலும் விரைவு துலங்கள்குறியீட்டை (QRCode) இணைத்து அப்புத்தகங்களைச் செறிவூட்டப்பட்ட பாடப்புத்தகங்களாக மாற்றியுள்ளது. அரசுப் பள்ளி மாணவர்களின் கற்றல் ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும், பாடப் பொருளின்பால் மாணவர்கள் ஈர்க்கப்பட்டுப் பாடங்களைக் கற்றிடவும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் மேலும், 280 அசைவூட்டப் பாடப்பொருள் காணொலிகள் உருவாக்கப்பட்டுப் பாடப்புத்தகங்களில் இணைக்கப்பட்டுள்ளன.
- மாநில அரசால் இணையவழிக் கற்றல் செயல்பாடு தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகள் உருவாக்குவது சார்ந்து குழு அமைக்கப்பட்டு, அக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில், இணையவழிக் கற்றல் செயல்பாட்டின்போது மாணாக்கரின் பாதுகாப்பு மற்றும் பாலியல் வன்முறைகளில் இருந்து தற்காத்தலுக்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டது.
- பெரிய அளவில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக 90 நாட்கள் இடைவெளியில் தகவல் தொழில்நுட்ப வழியில் 432 கருத்தாளர்களுக்கும், 2,10,230 ஆசிரியர்களுக்கும் பயிற்சி வழங்கப்படவுள்ளது. ●



"அரசுப் பள்ளி மாணவர்களை இந்தியாவின் தலைசிறந்த உயர்கல்வி நிறுவனங்களில் இடம்பெறச் செய்வதே பள்ளிக்கல்வித்துறையின் ஒற்றை இலக்காகக் கொண்டு செயல்படவேண்டும்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்




மாண்புமிகு சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.**சிவ.வீ.மெய்யநாதன்** அவர்கள்

சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை

சுற்றுச்சூழல்

- மாநிலத்தின் கடற்கரைப் பகுதிகளைப் பாதுகாக்க மேலாண்மைத் திட்டம் தயாரிக்கும் பணிக்காக அண்ணா பல்கலைக்கழகத்தின் தேசியக் கடலோர நிலைத்திட்ட மேலாண்மை மையத்திற்கு ரூ.1.82 கோடி நிதி.
- கோவிட்–19 ஊரடங்குக் காலத்தில், செல்லத்தக்க இசைவாணைகள் மற்றும் அங்கீகாரங்களை 30.11.2021 வரை செல்லத்தக்கதாக நீட்டிக்கப்பட்டதால் 15,000 தொழில் நிறுவனங்கள் பயன்.
- மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம், தமிழ்நாடு, 100 நாள் சாதனையாக 74 சுற்றுச்சூழல் அனுமதி (EC) மற்றும் குறிப்பு விதிமுறைகள் (TOR) அளிப்பு.





இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை

- ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வெல்லக்கூடிய வீரர்களுக்கு ரூ.3 கோடியும், வெள்ளிப்பதக்கம் வெல்லக்கூடிய வீரர்களுக்கு ரூ.2 கோடியும் மற்றும் வெண்கலப்பதக்கம் வெல்லக்கூடிய வீரர்களுக்கு ரூ.1 கோடியும் ஊக்கத்தொகை.
- டோக்கியோ ஒலிம்பிக் மற்றும் பாரா ஒலிம்பிக் 2020 போட்டிகளில் கலந்துகொண்டுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த கீழ்க்கண்ட விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு அரசின் சிறப்பு ஊக்கத்தொகையாக ரூ.55 இலட்சம் வழங்கல்.
- செல்வி சி.ஏ.பவானி தேவிக்கு டோக்கியோ ஒலிம்பிக்கில், 2021இல் இந்தியா சார்பாகக் கலந்துகொள்ள, ஊக்குவிப்புத் தொகையாக TANGEDCO மூலம் ரூ.5 இலட்சம்.
- ஜே.ரஞ்சித் குமார், மாற்றுத்திறனாளி, ஒப்பந்தப் பயிற்றுநர் (தடகளம்), மதுரை அவர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் பயிற்றுநராக நியமனம்.
- விளையாட்டு வீரர்களுக்கு, தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவித்தொகை திட்டத்தின் (ELITE) கீழ், ரூ.36.44 இலட்சமும், பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கம் வெல்வதற்கு ஊக்குவிக்கும் (MIMS) திட்டத்தின்கீழ், விளையாட்டு வீரர்களுக்கு ரூ.22.95 இலட்சமும் வழங்கல்.
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விளையாட்டு வீரர்களுக்கான கோவிட்–19 சிறப்புத் தடுப்பூசி முகாமை 26.06.2021 அன்று சென்னை ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கில் தொடங்கி வைத்தார்.



“ஒலிம்பிக் மற்றும் சர்வதேசப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் அதிக அளவில் பங்கேற்றுப் பதக்கங்கள் வெல்லும் வகையில் உலகத்தரத்திலான பயிற்சிகள் வழங்கிடும் வகையில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடவேண்டும்.”

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்



மாண்புமிகு தொழிலாளர் நலன் – திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர்
திரு.**சி.வி.கணேசன்**
அவர்கள்

தொழிலாளர் நலன் – திறன் மேம்பாட்டுத்துறை

தொழிலாளர்கள் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, மக்கள் தொகை கணக்கெடுப்பு, நகரம் மற்றும் ஊரக வேலைவாய்ப்பு

தொழிலாளர்துறை

சமரசப் பணிகள்

- 219 தொழிற்தாவாக்கள் முடிக்கப்பட்டு அவற்றுள் 105 தாவாக்கள் சுமூகமாகத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

குறைந்தபட்ச ஊதியச் சட்டம்

- துணி மடிக்கும் தொழில், மண்பாண்டங்கள் தொழில்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் முதன்முறையாக நிருணயம் செய்யப்பட்டுள்ளன.
- தச்சு மற்றும் கருமார் தொழில், கோணித் தொழில், கைகளினால் செய்யப்படும் காகிதம் மற்றும் காகிதம் சார்ந்த தொழில், காலணிகள் தயாரிக்கும் தொழில், விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த தொழில், கயிறு தயாரிக்கும் தொழில்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் மறுநிருணயம் செய்யப்பட்டுள்ளன.
- வடிசாலைத் தொழில், இரசாயன உரத் தொழில், காட்டன் ஜின்னிங், ப்ரெஸ்ஸிங் மற்றும் காட்டன் வேஸ்ட் தொழில், அச்சகங்கள் தொழில், பந்தல் அமைக்கும் தொழில், காளான் வளர்ப்புத் தொழில், அப்பளம் தயாரிக்கும் தொழில், புகையிலைத் தயாரிப்பு (பீடி தயாரிப்பு உட்படப் பீடி





சுற்றுதல் தவிர) தொழில், பேக்கரீஸ் மற்றும் பிஸ்கட் தயாரிக்கும் தொழில்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்ய முதனிலை அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளன.

குழந்தைத் தொழிலாளர் மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர் சட்டம்

- மாநிலம் முழுவதும் அலுவலர்கள் மூலம் 187 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 2 குழந்தைகள் மீட்கப்பட்டு அவர்களது இருப்பிடங்களுக்கு அருகில் உள்ள பள்ளிகளில் சேர்க்க அறிவுறுத்தல்.
- 233 தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டச் சிறப்புப் பயிற்சி மையங்களில் 4,297 மீட்கப்பட்ட மற்றும் பள்ளி செல்லாக் குழந்தைகள் கல்வி பயில்கின்றனர். 07.05.2021 முதல் 420 குழந்தைகள் முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
- குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய இராட்சத பலூன் பறக்கவிட்டுக் குழந்தைத் தொழிலாளர்களைப் பணியமர்த்துவதற்கு எதிரான கையெழுத்து இயக்கம் நடைபெற்றது.
- 67 மீட்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு ரூ.13.40 இலட்சம் நிவாரணத் தொகை.
- கொத்தடிமைத் தொழிலாளர் குறித்த புகார்களைத் தெரிவிக்கக் கட்டணமில்லா தொலைபேசி எண்.1800 4252 650 (Toll free Helpline) உருவாக்கம்.
- 2021ஆம் ஆண்டின் கொரோனா 2ஆம் அலை ஊரடங்கு காலத்தில் வேலையிழந்த மற்றும் குடும்ப அட்டை இல்லாத 1,29,444 வெளிமாநிலத் தொழிலாளர்களுக்கு ரூ.6.66 கோடி மதிப்பீட்டில் 15 கிலோ அரிசி, 1 கிலோ சமையல் எண்ணெய் மற்றும் 1 கிலோ பருப்பு அடங்கிய உணவுப் பொருள் தொகுப்பு.
- "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" திட்டத்தின்கீழ், 5,297 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. பெறப்பட்ட இம்மனுக்களில் 3,840 மனுக்கள் முடிக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தில் 4,786 பயனாளிகளுக்கு ரூ.97.46 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள்.
- 2,00,000 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு கொரோனா நோய்த்தொற்றுத் தடுப்பூசிச் செலுத்தும் சிறப்பு முகாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.
- தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியம் திருத்தியமைக்கப்பட்டு,

அரசுத்தரப்புப் பிரதிநிதிகள், வேலையளிப்பவர் பிரதிநிதிகள் மற்றும் தொழிலாளர் தரப்பு பிரதிநிதிகள் நியமனம்.

- 50,000 அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கு ரூ.34.78 கோடிக்கான நலத்திட்ட உதவித் தொகை.

தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்

- 292 தொழிற்சாலைகள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டு 8,307 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.
- புதிதாக 232 கட்டுமான நிறுவனங்கள், கட்டடம் மற்றும் இதரக் கட்டுமானத் தொழிலாளர்கள் சட்டத்தின்கீழ், பதிவு செய்யப்பட்டு 34,249, தொழிலாளர்கள் பயன்.
- தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம், சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மண்டலங்களில் மூன்று பாதுகாப்புப் பிரச்சாரக்குழுக்களை உருவாக்கி, 2 பாதுகாப்புப் பிரச்சாரங்கள் நடத்தப்பட்டு, 75 தொழிலாளர்கள் பயன்.
- 44 பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 2,496 தொழிலாளர்கள் பயன்.

நடமாடும் கண்காணிப்புக் குழு

- பட்டாசுத் தொழிற்சாலைகளில் பாதுகாப்பு வழிமுறைகளைக் கடைப்பிடிப்பது குறித்து சீரிய முறையில் கண்காணிக்கவும் திடீர் ஆய்வுகளை மேற்கொள்ளவும் விருதுநகர் மாவட்டத்தில் நடமாடும் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டு, இதுவரை 27 ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

- கோவிட்–19 பெருந்தொற்றுக் காரணமாக நேரடிப் பயிற்சி வகுப்புகள் நடத்த இயலாததால், இணைய வழியாக 100 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டதில், பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கானப் பயிற்சி பெறும் 7,118 தேர்வர்கள் கலந்துகொண்டு தன்னார்வப் பயிலும் வட்டங்கள் மூலம் பயன்.
- வேலைவாய்ப்பற்றோர் உதவித் திட்டத்தின் கீழ் 41,050 பொதுப் பயனாளிகளுக்கு ரூ.5.78 கோடியும், 15,870 மாற்றுத்திறனாளிப் பயனாளிகளுக்கு ரூ.3.78 கோடியும் உதவித்தொகை.
- 345 வேலைநாடுநர்கள் பொதுத்துறை நிறுவனங்களில் பணி நியமனம். இவர்களில் 8 நபர்கள் மாற்றுத்திறனாளிகள்.
- உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையில் 72,167 மனுக்கள் பெறப்பட்டு, இதுவரை சேகரிக்கப்பட்ட 58,587 விவரங்களின் அடிப்படையில், போட்டித் தேர்வுகளுக்கான இலவசப் பயிற்சி வகுப்புகளுக்காக விருப்பம் தெரிவித்த 11,442 மனுதாரர்கள் இணையவழிப் பயிற்சி வகுப்புகளில் அனுமதி. மெய்நிகர் கற்றல் இணையதளத்தில் சேர விரும்பிய 3,065 மனுதாரர்களின் தரவுகள் இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. தனியார்த் துறையில் வேலைவாய்ப்புக் கோரிய 2,367 மனுதாரர்களில் 322 நபர்கள் பணியமர்த்தம்.
- 2017 முதல் 2019 வரை, வேலைவாய்ப்பு பதிவினைப் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு அரசால் சிறப்புப் புதுப்பித்தல் சலுகை. 3,86,071 பதிவுதாரர்களின் வேலைவாய்ப்புப் பதிவின் பழைய பதிவு மூப்பினை மீண்டும் பெற்று பயன்.
- கொரோனா நிலையான வழிகாட்டு நெறிமுறையைப் பின்பற்றி 19.07.2021 முதல் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி வகுப்புகள் துவங்கப்பட்டு, 23,979 விண்ணப்பங்கள் 2021–2022ஆம் கல்வி ஆண்டிற்கான சேர்க்கைக்காகப் பெறப்பட்டுள்ளன.
- தேசிய தொழிற்பழகுநர் மேம்பாட்டுத் திட்டம் DGT–இன் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டு, மாநிலத்தில் வேலைவாய்ப்பு மற்றும்

பயிற்சித்துறை இயக்குநரகம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், பயிற்சி பெற்றவர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகையில் 25 சதவீதத்தை மீண்டும் நிறுவனங்களுக்குத் திரும்பச் செலுத்துவதன் மூலம் நிறுவனங்களை ஊக்குவிக்கிறது. இதன்மூலம், 5 நிறுவனங்கள், 192 பயிற்சியாளர்கள் பயன்.

- தொழிற் பழகுநர் பயிற்சித் திட்டத்தின் கீழ், 37 நிறுவனங்கள் மூலம் 198 தொழிற் பழகுநர்கள் பயிற்சி பெறுகிறார்கள்.
- தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் 26.07.2021 முதல் 50% பயிற்சியாளர்களுடன் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.
- சங்கல்ப் திட்டத்தின்கீழ், மாற்றுத் திறனாளிகளுக்கான தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத்துறை இணைந்து ரூ.1.59 கோடி செலவில் மாற்றுத்திறனாளிகள் வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார மையம் துவக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் 39 நபர்களைப் பல்வேறு வெளிநாட்டு வேலைகளில் பணியமர்த்தி, மேலும், வெளிமுகமை முறையில் 68 நபர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தம்.

மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம்

- ஈரோடு மாவட்டம், பவானியில் புதிய தொ.அ.ஈ. மருந்தகம் 01.06.2021 அன்று தொடங்கப்பட்டு 3,211 காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் பயனடையும் வகையில் செயல்பட்டு வருகின்றது.
- திருச்சி, திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் மறுசீரமைப்பின் மூலம் புதிதாக 3 மண்டல நிருவாக மருத்துவ அலுவலகங்கள் உருவாக்குவதற்கு அரசாணை வழங்கப்பட்டு, 3 மண்டல நிருவாக மருத்துவ அலுவலர் பணியிடங்கள் மற்றும் 87 வெவ்வேறு பணியாளர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. புதிதாக உருவாக்கப்பட்ட 3 மண்டல நிருவாக மருத்துவ அலுவலகங்களும் 01.08.2021 அன்று முதல் செயல்படத் தொடங்கியுள்ளது. ●



"இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கும் வகையில் தொழிற்சாலைகளின் தேவைகளுக்கேற்பப் புதிய தொழில் பயிற்சி நிலையங்களையும், புதிய தொழில்நுட்பப் பிரிவுகளையும் தொடங்கவேண்டும்."

"தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் அதிகமான தொழிலாளர் உள்ள இடங்களில் புதிய மருத்துவமனைகள் தொடங்கப்படவேண்டும்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்



மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. **த.மனோ தங்கராஜ்** அவர்கள்

தகவல் தொழில்நுட்பத்துறை

தகவல் தொழில்நுட்பத்துறை

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்)

- தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தில் தொழில்கள் மற்றும் வர்த்தகத் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைப் பயன்பாட்டின் இணையதள முகவரி (https://msmetamilnadu.tn.gov.in) 02.07.2021 அன்று பதிவேற்றம் செய்யப்பட்டது.
- கருவூலங்கள் மற்றும் கணக்குகள், தமிழ்நாடு முதலமைச்சரின் பொதுநிவாரண நிதி பயன்பாட்டின் இணையதள முகவரி (https://cmprf.tn.gov.in) 09.07.2021 அன்று பதிவேற்றம் செய்யப்பட்டது.
- தமிழ்நாடு முழுவதும் உள்ள இந்து சமய அறநிலையத் துறையின் பழைய பதிவுகள் மற்றும் ஆவணங்கள் 10 இலட்சம் பக்கங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மின்னாளுமை ஆணையரகம் மற்றும் தமிழ்நாடு மின்னாளுமை முகமை

- முதலமைச்சரின் பொதுநிவாரண நிதிக்கான புதிய வலைதளம் “cmprf.tn.gov.in” உருவாக்கப்பட்டு, எளிய அணுகுமுறையில் நன்கொடை அளித்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், இணையம் சாராப் பின் தொடர் செயலாக்கத்திற்கும் வழிவகை செய்கிறது.
- மின் அலுவலகச் செய்முறை பயிற்சிகள் தலைமைச் செயலகத்தில் உள்ள அனைத்துத் துறை அலுவலர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளது.





- கோவிட் பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்காக உருவாக்கப்பட்ட இணையதள மற்றும் கைப்பேசி செயலி வாயிலாக ஆக்சிஜன் இருப்பு / ஆக்சிஜன் அல்லாத மற்றும் ஐ.சி.யூ படுக்கைகளின் விவரங்களையும் அறிந்து கொள்ளலாம்.

- தமிழ்நாடு மின் ஆளுமை முகமை நிகழ்நேர கோவிட் மேலாண்மைத் தகவல் அமைப்பை உருவாக்கியுள்ளது. விரிவான இவ்வமைப்பு தரவுகளைச் சேகரித்து அரசாங்கத்திற்கு நிகழ்நேர அறிக்கைகளை அளிப்பதுடன் புவியியல் தகவல்சார் அமைப்பு (வரைபடம்) அடிப்படையிலான காட்சி பகுப்பாய்வுகள் மேற்கொள்ள தகவல்களை அளிக்கிறது. மேலும், இதன் முகப்புப் பெட்டி மாவட்ட நிருவாகத்திற்கு அறிக்கைகள், புல மதிப்பீடு மற்றும் அன்றாட ஆக்சிஜன் உற்பத்தியைக் கண்காணிக்கவும் உதவுகிறது.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்

- அரசு கேபிள் டிவி, 75 கட்டணச் சேனல்கள் மற்றும் 140 கட்டணமில்லாச் சேனல்கள் என மாத சந்தாக் கட்டணம் உயர்த்தப்படாமல் ரூ.140 + GST என்ற அதே கட்டணத்தில் வழங்கப்பட்டுவருகிறது.

- தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் கல்விச் செயல்பாடுகளில் ஈடுபடுவதற்கேதுவாக, அமெரிக்கா, இத்தாலி முதலான நாடுகளில் மூன்று தொடர்பு மையங்கள் புதியதாகத் தொடங்குவதற்கு அனுமதியளிக்கப் பட்டுள்ளது. இதில், முதன்முறையாக இத்தாலி நாட்டில் தொடர்பு மையம் செயல்பட அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

- தமிழ் இணையக் கல்விக்கழகம் அரிய ஆவணங்கள், புத்தகங்கள் மற்றும் இதழ்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய மின்–நூலகம் ஒன்றை (www.tamildigitallibrary.in) உருவாக்கியுள்ளது. இந்த இணையதளத்தில் கடந்த நூறு நாட்களில் 1,678 புத்தகங்கள் மற்றும் பருவ வெளியீடுகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இதுவரை, 37,327 புத்தகங்கள் மற்றும் பருவ வெளியீடுகள் MARC21 முறையில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

- தகவலாற்றுப்படை இணையதளத்தில் (www.tagavalaatruppadai.in) கடந்த நூறு நாட்களில் 175 தொல்லியல் இடங்கள் மற்றும் அவை சார்ந்த 2,025 ஒளிப்படங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இதுவரை, 3,363 தொல்லியல் மற்றும் வரலாறு சார்ந்த இடங்களும் 31,158 ஒளிப்படங்களும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.



கல்வித் தொடர்பான காணொலிகளைத் தமிழில் மொழிமாற்றம்

- கான் கல்விக்கழகம் வெளியிட்டுள்ள காணொளிகளில் 127க்கும் மேற்பட்டவை தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, யூடியூப் வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.
- அரசு அலுவலகங்களில் தமிழ் ஒருங்குறி எழுத்துருவினைப் பயன்படுத்த வேண்டும் என அறிவித்ததைத் தொடர்ந்து மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் ஒரு செயல்முறை விளக்கத்தை 24.07.2021 அன்று இணையம் வழியாகத் துவக்கி வைத்தார். இவ்விணையவழிக் கூட்ட நிகழ்வில் 1,400 நபர்கள் இணைந்து பயனடைந்தனர். மேலும், 8,000க்கும் மேற்பட்டோர் யூடியூப் வழியாக இச்செயல்முறை விளக்கத்தினைப் பார்வையிட்டுள்ளனர்.



"தகவல் தொழில்நுட்பத்தில், தமிழ்நாட்டினை நாட்டிலேயே சிறந்த மாநிலமாக மாற்றிடவேண்டும்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

சுற்றுலாத்துறை



மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்
டாக்டர் **மா. மதிவேந்தன்**
அவர்கள்

- தமிழ்நாட்டிலுள்ள அணைக்கட்டுகளில் சுற்றுலா வசதிகளை உருவாக்கும் பொருட்டு அவற்றை ஆய்வு செய்வதற்காகத் தொடர்பு அலுவலர்களை நியமித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- அணைக்கட்டுகளில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் படகு சவாரி, பொழுதுபோக்கு அம்சங்கள், சாகச விளையாட்டு, விருந்தோம்பல் ஆகிய வசதிகள் மேற்கொள்ளப்படும். தோட்டங்கள் மற்றும் பிற வசதிகள் தோட்டக் கலைத்துறை மூலம் பொதுப்பணித் துறையுடன் இணைந்து நிறைவேற்றப்படும்.
- கோவிட் பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள சுற்றுலாத் துறையை மீட்டெடுக்கவும், சுற்றுலாப் பயணிகளுக்கு வழிகாட்டு நெறிமுறைகளை வகுக்கவும் செயல்திட்டம் தயாரிக்க அலுவல் சார்ந்த, அலுவல் சாரா உறுப்பினர்களுடன் ஒரு குழு அமைப்பு.

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்





"உள்நாடு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருகையில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழ்நாடு தொடர்ந்து திகழ, பெருந்தொற்றினால் ஏற்பட்டுள்ள பாதிப்பை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்





- தமிழ்நாட்டிலுள்ள 300 சுற்றுலா இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவ்விடங்களை மேம்படுத்தத் தமிழ்நாடு ஒருங்கிணைந்த சுற்றுலா மேம்பாட்டுப் பெருந்திட்டம் (Master Plan) உருவாக்குதல் மற்றும் இத்திட்டத்தின் கீழ் ஒவ்வோர் ஆண்டும் 50 இடங்களை மேம்படுத்த நடவடிக்கை.





மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி **என்.கயல்விழி செல்வராஜ்** அவர்கள்

ஆதிதிராவிடர் நலத்துறை

- மதுரை, நாகப்பட்டினம், சிவகங்கை, திருச்சி, தருமபுரி, கரூர், நீலகிரி, கிருஷ்ணகிரி, இராமநாதபுரம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் 19 புதிய விடுதிகளின் கட்டுமானப் பணிக்காக ரூ.20 கோடி நிதி ஒப்பளிப்பு.

- தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர்கள் எனப் பட்டியலிடப்பட்டுள்ள குடும்பன், பள்ளன், தேவேந்திரகுலத்தான், கடையன், பண்ணாடி, காலாடி மற்றும் வாதிரியான் ஆகிய எழு சாதிகளையும் ஒன்றாக இணைத்து, ஒரே பெயரில் தேவேந்திரகுல வேளாளர் என்று அழைப்பது தொடர்பாக அரசாணை வெளியீடு.

- ஆதிதிராவிடர், பழங்குடியினர் வன்கொடுமை சட்டத்தின்படி, இச்சட்டத்தின் அமலாக்கம் மற்றும் தீருதவிகள் வழங்கப்படுவதைக் கண்காணிக்கும் மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் திருத்தியமைப்பு.



ஆதிதிராவிடர் நலன், மலைவாழ், பழங்குடியினர்கள் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்



✸ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை, இலக்கிய மேம்பாட்டுச் சங்கத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட 21 சிறந்த எழுத்தாளர்களுக்குப் பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 09.07.2021 அன்று வழங்கப்பட்டது.



"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகைகளை உரிய காலத்தில் வழங்கிடும் வகையில் திட்டத்தினைச் சீரமைத்திடவேண்டும்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

75ஆவது சுதந்திர தின விழாவில்...



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்
டாக்டர் அ.ப.ஜெ. அப்துல்கலாம் விருதினை,
பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் சிறப்புமிகு பேராசிரியர்
முனைவர் மு. இலட்சுமணன் அவர்களுக்கு வழங்கினார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்
துணிவு மற்றும் சாகச செயலுக்கான கல்பனா சாவ்லா விருதினை
மறைந்த மருத்துவர் ப. சண்முகப்பிரியா அவர்களுக்காக,
அவரது கணவர் திரு. செ. சண்முகப்பெருமாள் அவர்களிடம்
வழங்கினார்.



மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. **ராம் நாத் கோவிந்த்** அவர்களை
சென்னை விமான நிலையத்தில்,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
புத்தகங்களை வழங்கி வரவேற்றார் (02.08.2021).



மாண்புமிகு இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர்
திரு. **எம்.வெங்கையா நாயுடு** அவர்களை, சென்னை விமான நிலையத்தில்,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
வழியனுப்பி வைத்தார் (02.07.2021).

